சமூக அறிவு நூல்

(மூன்றும் பாரத்திற்குரியது)

1949 ஞு மார்ச் மீ வித்தியா இலாகா அதிகாரிகளால் பிரசுரிக்கப்பட்ட தீர்மான பாடதிட்டங்களைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

பதிப்பாசிரியர்

V. சுப்புரத்தினம், B.A., L.T.,

இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி, மேல்விஷாரம்

வெளியிட்டவர்

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்

சென்னை

1955

[உரிமை பதிவு]

[விலை ரூ. 1-4-0

First Eition October 1954
Reprint May 1955

Approved by the Text Book Committee of Madras-Class use Fort St. George Gazette Vide page 19 dated 4—5—55

T. V. C. Press, Madras-1

முகவுரை

"சமூக அறிவு" என்பது மனிதன் மக்கள் கூட்டத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறது. இந்திய சமூகம் இன்று சுதந்திரமடைந்து முன்னேற்றமென்னும் பாதையில் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. நமது முன்னேற்றத்திற்கான வழிகள் நாம் முக்கியமாகக் கவனித்துத்தீர்க்கவேண்டிய சிக்கல்கள், நீக்கவேண்டிய குறைகள் இவைகளை எல்லாம் நாம் நன்கு உணரவேண்டும். கல்வித்திட்டமே இந்த நோக்கத்தோடு புதிதாகத் திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது.

நமது சிறுவர் தேசபக்தி, பரந்த நோக்கம், விடாமுயற்சி குன்றா ஊக்கம், நல்ல தேர்ச்சி, முதலிய சீரிய குணங்களைப் பெறுவதற்கு அனுகூலமாகவே, 'சமூக அறிவு' பாடதிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த உயரிய நோக்கம் கைகூடுதற்கேற்ற முறையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. நமது ஆசிரியர்களும் இக் கருத்தையே தமது லட்சியமாக வைத்துக் கொண்டு பாடங்களைக் கற்பிக்கவேண்டும். புத்தகத்திலுள்ள விஷயங்களைப் படிப்பதோடு நிற்காமல் பல விஷயங்களைச் செய்தும், பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தும் தெளிவுபடுத்திக் கொள்வது மிக்க அவசியம்.

நாம் நாட்டின் நலனையே கருதி நமது கடமையைச் செய்வோமாக.

ஜெய் ஹிந்த்

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்		பக்கம்
1.	நம் நாடு	....	1
2.	நம் நாட்டின் பூர்வீக மக்கள்	....	6
3.	நம் நாட்டின்மீது படையெடுந்து வந்த அன்னிய நாட்டினர்	....	17
4.	வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த முக்கிய இந்து பேரரசர்கள்	....	25
5.	தென் இந்தியாவில் ஆட்சிபுரிந்த இந்து பேரரசர்கள்	....	41
6.	நம் நாட்டுக்கு வந்த இதா நாட்டுப் பார்வையாளர்கள்	....	53
7.	நம் நாட்டின்மீது படையெடுத்து வந்த அந்நிய நாட்டினர் (தொடர்ச்சி)	....	57
8.	நம் நாட்டை ஆண்ட முக்கிய முஸ்லீம் மன்னர்கள்	....	61
9.	முகம்மதிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு	....	80
10.	சர்வ சமய ஒற்றுமை	....	87
11.	நம் நாட்டிற்கு ஐரோப்பிய வியாபாரிகள் வருகை	....	101
12.	நம் நாட்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி	....	111
13	நம் நாட்டில் ஆங்கில அரச, அரசிகளின் ஆட்சி	....	126
14.	இந்திய சுதந்திரப் போராட்டம்	....	133
15.	நமது தற்கால ஆட்சி முறை	....	147
16.	மாகாண இராஜ்ய ஆட்சி	....	153
17.	மத்திய அல்லது யூனியன் அரசாங்கம்	....	156
18.	நாடுகளிடையே நல்லுறவு—ஸ்தானீகர்களும் அவர்களது அலுவல்களும்	....	161
19.	சர்வதேச அரசாங்கம்	....	163
20.	அமைதி, சுதந்திரம், நீதி இவற்றிற்காக உழைத்த உத்தமர்கள்	....	161
	கலைச் சொற்கள்	....	168

சமூக அறிவு நூல்

மூன்றும் பாரம்

பாடத் திட்டம்

குறிக்கோள் : நம் நாடு, சரித்திரம் இவற்றை மாணவர்கள் நன்கு அறிந்து, போற்ற உதவுதல்; தேசத்தின் மீது பிரியம், விசுவாசம் இவற்றை வளர்த்தல்; அதன் பூர்வ நிலையைப் பற்றி மரியாதை; சத்தியம், நீதி, சேவை இவற்றைத் தழுவி, உலக ஒற்றுமைக்கு வருங்காலத்தில் இருப்பிடமா யிருக்கும் என்ற நம்பிக்கை.

பயிற்சிக்காக நினைப்பூட்டுபவை	சமூகப் பயிற்சி	சமூக அறிவு
I (A & B) ஓர் சரித்திர நோட்டுப் புத்தகத்தை ஆரம்பித்து, நீ ஞாபகம் வைத்துக் கொள்ள விரும்பும் பெயர்கள், ஆண்டுகள், மற்ற விஷயங்களைக் குறித்துக் கொள்ளுதல்; இந்தியாவில் பல்வேறு வகையான மக்கள் வசிக்கும் இடங்களைக் குறிப்பிடும் தேசப் படம்; காலக்கோட்டுப் படத்தை ஆரம்பித்து; ஆண்டு முழுவதும் தொடர்ந்து குறித்தல்; "படையெடுப்பாளர்களுக்கு, இந்தியா எவ் வகைச் சாதனங்களால் அவா ஊட்டியது." "இப் படை யெடுப்பாளர்கள் இங்கு குடியேற, பூகோள வசதிகள் எவ்வாறு பாதித்தன," இவை போன்ற விஷயங்களை வாசித்தல்.	(1) மேற் கூறிய குறிக்கோள்கள்.	(1) நம் நாடு, மக்களைப் பற்றிய சரித்திரம் (இந்தியாவின் சரித்திரத்தில் சில முக்கியக் குறிப்புகள்) (A) இந்தியாவின் மக்கள் — சிந்து வெளி நாகரிக மக்கள் — பூர்வீகக் குடிகளும், அவர்களது தற்கால வாசஸ்தலங்களும் — திராவிடர்கள், ஆரியர்கள், மங்கோலியர்கள். (B) நம் நாட்டின்மீது படையெடுத்தவர்கள் — அலெக்ஸாந்தரது தலைமையில் கிரேக்கர்கள்; குஷானர்கள்; ஹூணர்கள்; முகம்மதியர்கள்; இவர்களது படையெடுப்புகளின் விளைவுகள்.

பயிற்சிக்காக நினைப்பூட்டுபவை	சமூகப் பயிற்சி	சமூக அறிவு
(C & D) தேசப்படங்கள்—"நான் யார் எனக் கண்டுபிடி" என்ற விடுகதைகளை எழுத முயற்சித்தல்—வகுப்பிலுள்ள பிள்ளைகள் இவ் விடுகதையில் அடங்கிய அரசர் அல்லது மனிதரின் பெயரைக் கூறச்செய்தல்; சரித்திரத்தில் நீ விரும்பும் காட்சியைத் தயாரித்து நடித்தல்—குறிப்புப் படங்கள் (நடித்தல் என்பது அதிக விரிவான முறையில் அவசியமில்லை. சாதாரண அளவில் பிரத்தியேக உடைகள் இன்றி உள்ள முறையே வகுப்பில் நடிக்கும்முறை; பிறரைப்போல் நடித்தல், கதாபாத்திரங்களின் சம்பாஷணைகளைப் படித்தல் ஆகியவையும் நடித்தல் எனக் கருதலாம்.)	C) கற்பனை சக்தி, பிறரைப்போல் நடிக்கத் திறமை-பலர் முன்னிலையில் திறமையாகப்பேசுதல், நடிப்பை ரசித்தல்.	(C) வட இந்தியாவை ஆண்ட முக்கிய இந்து சக்கரவர்த்திகள்—சந்திரகுப்த மௌரியர்; அசோகர்; மகா குப்தர்கள்; ஹர்ஷர் அவர்கள்; நம் நாட்டின் கலை அபிவிருத்திக்காகச் செய்த சேவைகள். (D) தென் இந்தியாவை ஆண்ட முக்கிய இந்து சக்கரவர்த்திகள்—தென் கோடி மன்னர்கள், ஆந்திரர்கள் -- மகா பல்லவர்கள்—மஹேந்திர வர்மனும், நரசிம்ம வர்மனும். மஹா சோழர்கள் — இராஜராஜரும். இராஜேந்திரரும் — பாண்டியர்களும் சேரர்களும் — அவர்கள் நம் நாட்டின் கலை அபிவிருத்திக்காகச் செய்த சேவைகள்.
(E) நம் நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பார்வையாளர்கள் — அக் காலத்திய இந்தியாவின் நிலையைப் பற்றி அவர்கள் கூறுவதைப் படித்தல்.		(E) நம் நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பார்வையாளர்கள் — அபோஸ்தலரான அர்ச் தாமஸ் — பாஹியனும், யுவான் சுவாங்கும்; இந்தியாவில் அவர்களது அலுவல்கள் — நம் நாட்டைப் பற்றிய அவர்களது அபிப்பிராயம்.
(F) தேசப் படங்கள்—"கஜினி முகம்மதுவின் கீழ் ஓர் போர் வீரன் என எண்ணிக்கொண்டு, நீ பார்த்த இந்தியாவைப் பற்றி விபரமாகக் கூறு."		(F) நம் நாட்டின் மீது படையெடுத்தவர்கள் (தொடர்ச்சி) — கஜினி முகம்மது, கோரி முகம்மது — வட இந்தியாவில் முகம்மதியர்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்படல்.
(G) "யார் என சிந்தி" — விடு கதைகள் கவி பனையவேண்டாம். இது கடினமானது.		(G) பெரிய முஸ்லிம் மன்னர்கள்—பால்பன், அலாவுத்தீன் கில்ஜி, முகம்மது துக்ளாக்

ஓர் வர்ணனையைப் பற்றி, சில வாக்கியங்கள் இவையும் விடுகதைகளாகக் கருதப் படலாம்.		இந்திய வாழ்க்கையில் இஸ்லாம்—மஹா மொக லாயர்கள் பாபர், அக்பர், ஜிஹாங்கிர், ஷாஜஹான், ஔரங்கசீப்பும் கஜீனமும் — அவர்கள் நம் நாட்டின் கலை அபிவிருத்திக்காகச் செய்த சேவைகள்.
(H) இப் பகுதியின் கீழ், சரித்திர சம்பந்தமான நாடகங்களைக் கண்டறிந்து, நடிப்பு முறையில் வகுப்பில் படித்துக் காட்டுதல்—சரித்திர சம்பந்தமான கதாபாத்திரங்களிடையே கற்பனை சம்பாஷணைகளைத் தயாரித்தல்.		(H) முஸ்லிம் ஆட்சிக்கு எதிர்ப்பு—விஜயநகர சாம்ராஜ்யம், சிவாஜியின் தலைமையில் மஹாராஷ்டிரர்களின் எழுச்சி - கோவிந்த சிங் தலைமையில் சீக்கியர்களின் எழுச்சி.
(I) இச்சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கையில் ஏதேனுமோர் சம்பவத்தை நடித்தல்—இச் சீர்திருத்தவாதிகளின் உபதேசங்கள் அடங்கிய சிறு புத்தகம் ஒன்றைத் தயாரித்தல்.	(I) சகிப்புத்தன்மை, தேர்ந்து, நன்மை யறியும்நோக்கம் இவற்றை வளர்த்தல்.	(I) சமய ஒற்றுமைக்கான அவா—உபநிஷத்காலப் பெரியார்கள்; புத்தர் (மனிதர்களிடையே சகோதரத்வம்); மஹாவீரர். (எல்லா உயிர்களிடையேயும் சகோதரத்துவம்); நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள் (அவர்களது சர்வ வியாபகமான அன்பும் தொண்டும்); இராமானந்தர், கபீர்தாஸ், நானக், அக்பர். (சமய ஒற்றுமை); இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும்; தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள், வேமன்ன, இதர சித்தர்கள் சமய ஒற்றுமையும், சேர்க்கையும்; ஸ்ரீ நாராயண குரு.
(J) இந்தியாவிற்கு ஐரோப்பிய வியாபாரிகளின் வியாபார மார்க்கங்கள் (சென்னையில் இருப்பவர்கள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள பொருட்காட்சிச் சாலைக்கும், மற்றவர்கள் சரித்திர சம்பந்தமான வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தல்.)		(J) நம் நாட்டில் ஐரோப்பிய வியாபாரிகள் போர்ச்சுக்கீசிய, டச்சு, பிரெஞ்சு, ஆங்கில வர்த்தக சங்கங்கள். அவர்களது வியாபார ஸ்தலங்கள்—ஆங்கிலேயர்களின் இறுதி வெற்றி; டியூப்ளேயும், கிளைவும்—ஆட்சிக்கொடி வாணிபத்தைப் பின்பற்றுதல்.

பயிற்சிக்[illegible]ப்பூட்டுபவை	சமூகப் பயிற்சி	சமூக [illegible]
(K) இந்த ஆட்சியாளர்களின் தொடர்பால் ஏற்பட்ட நன்மைகளைக் காட்டும் சித்திரக் குறிப்புப் படங்கள்.		(K) ஆங்கில வர்த்தக சங்கத்தின் ஆட்சியாளர்கள். வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன் வாலிஸ்—வெல்லெஸ்லீ, ஹேஸ்டிங்ஸ் பிரபு-பெண்டிங்க், டல்ஹௌஸி—1858-ல் பிரிட்டிஷ் இந்தியா
(L) இந்த ஆட்சியாளர் செய்த சீர்திருத்தங்களைக் காட்டும் குறிப்புப் படங்கள்.		(L) பிரிட்டிஷ் முடியாட்சியில் நம்நாடு-விக்டோரியா மஹாராணியின் பேரறிக்கை—கானிங், ரிப்பன், கர்ஸன், செம்ஸ்போர்டு, மவுண்ட்பாட்டன் பிரபுக்கள் நம் வைஸ்ராய்களாக இருத்தல்.
(M) "இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டவர்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்ட ஓர் ஒட்டுப் புத்தகம் தயாரித்தல்.		(M) நம் சுதந்திரப் போர்—இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம்-அன்னிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரித்தல், கதர்இயக்கம்—ஸத்யாக்ரஹம்—விடுதலைப் போர்-முக்கியமான தேசீயத் தலைவர்கள். அவர்களது சேவையும், தியாகமும், மஹாத்மா காந்தி; இந்திய சுதந்திரம்; இரு டொமினியன்கள்.
(2) அரசாங்கத்தின் பல உறுப்புகளின் அமைப்பு, அலுவல்கள், தொடர்பு இவற்றை ஒரே பார்வையில் விபரமாக அறிவிக்கும் விளம்பரங்கள்.		(2) நம் தற்கால ஆட்சி முறை. (A) நாட்டுப்புற ஸ்தல நிர்வாகம். (B) நகரங்களிலும் பட்டணங்களிலும் ஸ்தல நிர்வாகம். (C) மாகாண அரசாங்கங்கள் சென்னை அரசாங்கம். (D) தேசீய அரசாங்கம்: நிர்வாக இலாகாக்கள், ஊழியர்கள், வருமான ஆதாரங்கள் செலவிடும் வகைகள்.

(F) யு. என். ஓ வின் அலுவல்களைக் காட்டும் விளம்பரங்களைத் தயாரித்தல்-செய்தித் தாள்களைப் படித்தல்- யு. என் ஓ. வின் முக்கியஸ்தர்களின் படங்களைச் சேகரித்தல் சம்பந்தப்பட்டவர்களின் செயல்களை விவரிக்கவும். அவர்களை அறியவும் உபயோகப் படும்படியான, காண்பித்து மறைக்கும் அட்டைப் படங்கள்.	(F) சமாதானம், பண்பாடு இவற்றைக் காப்பாற்றி அபிவிருத்தி செய்ய, இதரநாடுகளுடன் ஒத்துழைத்தலின் அவசியத்தை அறிதல்.	(E) சர்வதேச உறவு - தூதர் நிலையங்கள்—அவற்றின் அலுவல்கள். (F) சர்வதேச அரசாங்கம்-யு. என். ஓ- பொதுசபை; பாதுகாப்பு சபை; தர்ம கர்த்தா கமிஷன்; பொருளாதார, சமூக, கலாசார ஸ்தாபனம். உலக சமாதானத்துக்கான முயற்சிகள் — (வார்ஸேல்ஸ் உடன்படிக்கை முதல் சம்பவங்களும், பிரச்சினைகளும், ஆசிரியர் விரும்பினல் இதைப்பற்றி மேல் வாரியான குறிப்பு)
(3) "பொன் மொழிகள்" கொண்ட சிறு புத்தகத்தைத் தயாரித்தல்-உதாரணம் - "செய் அல்லது மடி"; "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" சமாதானம், நீதி இவற்றிற்காக உழைத்த பெரியார்களைப் பற்றிக் குறிக்கும் ஒட்டுப்புத்தகம் தயாரித்தல்:	(3) தேசப் பற்று, தைரியம், சேவை.	(3) சமாதானம், சுதந்திரம், நீதி இவற்றிற்காக உழைத்த பெரியார்கள் —வாஷிங்டன், லிங்கன், வால்டேர், ருஸோ, உட்ரோ வில்ஸன் காந்தி, நேரு.
(4) தர்க்கமும், வாக்குவாதமும் ; அன்றுட நிகழ்ச்சிக் கூட்டத்திற்கு ஒரு தலைவர், காரியதரிசி, இவர்களைத் தேர்ந்தெடுத்தல (தலைவர், ஆசிரியரின் நாற்காலியில் அமருதல்) தலைவர், காரியதரிசி இவர்களின் கடமைகள் தர்க்கத்துக்குரிய விஷயங்களின் ஜாபிதா தயாரித்தல்; வாதம் செய்யப் பிள்ளைகளை நியமித்தல் — சில விஷயங்களுக்காக, ஆராய்ச்சிக் குழுக்களை நியமித்தல் — அன்றுட நிகழ்ச்சிக் கூட்டத்துக்கு ஓர் குறிப்புத் தயாரித்துக் கொடுத்தல்—முக்கிய மனிதர்களைக் குறிக்கும் படங்களைப் பார்த்து அவர்களை அறிதல் — வார்த்தைகளின் அட்டவணை	(4) கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல்கள் தயாரித்தல் — ஓர் நல்ல குடிமகன் இருக்க வேண்டிய முறையைப் போல, எல்லாவற்றையும் திறமையுடன் அறிதல்.	(4) ஆண்டு முழுவதும், ஆன்றுட நிகழ்ச்சிகள், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது செய்திகளைப் பற்றி விவாதித்தல்— ஆண்டு முழுவதும் 30 பிரியட்களை நிறவுதல்.

பயிற்சிக்காக நினைப்பூட்டுபவை	சமூகப் பயிற்சி	சமூக அறிவு
செய்திகளில் முக்கிய வாக்கியங்கள்—உள்ளூரில் செய்தித்தாள் நிலையம் இருந்தால் அங்கு சென்று பார்த்தல்—ஒலி பரப்பியில் செய்திகளைக் கேட்டல்; அன்றாட நிகழ்ச்சிக்காக ஓர் விளம்பரப் பலகையைத் தயாரித்தல்—உலக நிகழ்ச்சி இடங்களைக் காட்டும் உலகப் படம் சமூகத்திலுள்ள பலரின் அபிப்பிராயங்களைச் சேகரித்தல் — படங்களை சேகரித்து, அவற்றை அட்டைகளில் ஒட்டி, ஒவ்வொன்றின் கீழும் குறிப்பு வரைதல்—பிரசாரம் செய்யும் முறை, பிரசாரத்தை அறிதல் இவற்றை ஆராய்தல்.		

1. நம் நாடு

ஆசியா படத்தைப் பாருங்கள். அதன் தென் பகுதியில் மத்தியில் அமைந்துள்ள தீபகற்பப் பிரதேசமே நமது தாய் நாடாகிய **இந்தியா** ஆகும். ஆதிகாலம் முதல், பல்வேறு நாட்டினர்கள் இங்கு வந்துள்ளார்கள். அவர்களில் பலர் இங்கேயே ஸ்திரமாகக் குடியேறிவிட்டார்கள். சிலர் இங்கிருந்து ஏராளமான பொருள்களை வாரிச் சென்றனர். கடல் மார்க்கமாகப் பல ஐரோப்பிய நாட்டவர்களும் இங்கு வாணிபத்திற்காக வந்தனர். அவர்களில் ஒரு வகுப்பினரான ஆங்கிலேயர்கள், இங்கு ஆட்சி புரியவும் செய்தனர். இறுதியாக 1947-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் மீண்டும் சுதந்திரம் பெற்றோம்:

ஓர் நாட்டின் சரித்திரம் அதன் பூகோள அமைப்பினால் வெகுவாக மாறுதல் அடைகின்றது. ஆகையால் நம் நாட்டின் சரித்திரத்தை நன்கு அறிந்துகொள்வதற்காக, முதன் முதலில் அதன் இயற்கையமைப்பைக் கவனிப்போம்.

இந்தியாவின் வடக்கில் ஓர் மாபெரும் மலைத்தொடர் இருப்பதைக் கவனியுங்கள். இது **இமயமலை** எனப்படும். இது பல தொடர்களைக் கொண்டது. இம்மலை நம்நாட்டிற்குப் பெரிய அரண்போல அமைந்திருப்பதுடன், மத்திய ஆசியாவினின்றும் வீசும் கடுங்குளிர் காற்று நம் நாட்டுக்குள்ளும் வீசி அதன் வெப்பநிலையைக் குலைக்காமல் தடுக்கின்றது. மேலும் வட இந்தியாவை வளம்பெறச் செய்யும் பல நதிகளும் இம்மலையிலிருந்தே உற்பத்தியாகின்றன. இம்மலைத்தொடர் மிக



இந்தியா பாகிஸ்தான் இயற்கை யமைப்பு.

உயரமாக இருப்பினும், ஆங்காங்கு சில **கணவாய்கள்** இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை, இந்நாட்டின் வட மேற்கிலுள்ள **கைபர், போலன்** கணவாய்கள் ஆகும். முன் நாட்களில் இவற்றின் வழியாகவே பலர் இங்கு படையெடுத்து வந்தனர். இந்தியாவின் வடகிழக்கிலுள்ள **பிரம்மபுத்திரா நதிப்** பள்ளத்தாக்கின் வழியாகவும் சில அன்னியர்கள் இங்கு வந்து குடியேறினர்கள்.

இந்தியாவின் கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் இந்துமகா சமுத்திரமும், மேற்கில் அரபிக் கடலும் இதன் இதர எல்லைகளாகும்.

இமயமலைத் தொடருக்குத் தெற்கில் ஓர் அகன்ற செழிப்புள்ள சமவெளி இருக்கின்றது. இதன் வழியே **சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா நதிகள்** பாய்கின்றன. இவை ஆண்டு தோறும் ஏராளமான வண்டல் மண்ணை அடித்துவந்து, இச் சமவெளியைப் பெரிதும் வளம்பெறச் செய்கின்றன. நம் நாட்டின் வளமே பல்வேறு படையெடுப்புகளுக்குக் காரணமாக இருந்துள்ளது. சிந்து நதிச் சமவெளியானது கங்கைச் சம வெளியினின்றும் **அரவல்லிக் குன்றுகள், தார்பாலைவனம்** இவற்ருல் பிரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்கூறிய கணவாய்கள் வழியே நம் நாட்டுக்கு வந்தவர்கள் முதன் முதலாக சிந்துநதிச் சமவெளியிலேயே குடியேறினர்கள். மேலும் பலர் வந்து அவர்களைத் தாக்கிய பின்னர் தான் அவர்கள் கங்கைச் சமவெளிக்குச் சென்றனர். சிந்து நதிச் சமவெளியிலிருந்து கங்கைச் சமவெளிக்குச் செல்லும் குறுகிய பாதையில், இந்நாட்டின் தலைநகரமாகிய **டில்லி** அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

சிந்து கங்கைச் சமவெளிக்குத் தெற்கில், **பழைய பாறைகளாலாகிய தட்சிணப் பீடபூமி** உள்ளது. இவை இரண்டிற்

கும் மத்திய எல்லையாக உள்ளது கரடு முரடான **விந்திய மலை** ஆகும். முற்காலத்தில் இம்மலையைக் கடப்பது சுலபமாக இல்லாமல் இருந்த காரணத்தினலேயே, இம் மலையின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் அதிகமாகக் கலந்து உற வாட முடியாமலிருந்தது. இக்காரணம் பற்றியே உணவு, உடை, மொழிகள் இவற்றில் வட இந்தியர்களுக்கும் தென் இந்தியர்களுக்கு மிடையே வேற்றுமைகள் தோன்றுகின்றன.

தட்சிணப் பீடபூமி பெரும்பாலும் வறண்ட பிரதேசம். இங்கு பாயும் ஆறுகளின் போக்கைக் கொண்டு, இப்பீடபூமி கிழக்காகச் சரிந்திருக்கின்றதென அறிகின்ருேம். இப்பீடபூமியின் வடமேற்குப் பகுதி கரிசல் மண் பூமியாகும். ஆகவே அங்கு பருத்தி அபரிமிதமாக விளைகின்றது. இப் பீடபூமியின் கிழக்கு மேற்கு, விளிம்புகள் மலைத்தொடர்கள் போலக் காண்கின்றன. மேற்கிலுள்ளது **மேற்குத் தொடர்ச்சி மலை** என்றும் கிழக்கிலுள்ளது, **கிழக்குத் தொடர்ச்சி மலை** என்றும் பெயர் பெற்றுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை சற்று அதிக உயரமாயும், தொடர்ந்தும் இருக்கின்றது. எனினும் அதில் சில கணவாய்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பம்பாய்க்கு அருகிலுள்ள **தால்கணவாய், போர்க்கணவாய்** இவையும் தென் பகுதியிலுள்ள **பாலக்காட்டுக் கணவாயும்** ஆகும் கிழக்குத் தொடர்ச்சி மலை சற்று உயரம் குறைந்தும், விட்டுவிட்டும் இருக்கின்றது. இப்பிளவுகளின் வழியாகவே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் நதிகளாகிய **மஹா நதி, கோதாவரி, கிருஷ்ணு, பெண்ணையாறு, காவிரி** முதலியவை ஓடி, வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இப் பீடபூமியின் வடபகுதியில் **நருமதை, தபதி** ஆகிய இரண்டு நதிகளும் மேற்காக ஓடி, அரபிக் கடலில் கலக்கின்றன. கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகள் **நீலகிரி**யில் ஒன்று கூடு

கின்றன. இதற்குத் தெற்கிலுள்ளதே பாலக்காட்டுக் கணவாய். கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரைக்குச் செல்ல இக்கணவாய் பெரிதும் அநுகூலமாக இருக்கின்றது. பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கில் உள்ள மலைத்தொடர் ஆங்காங்கு **ஆனைமலை, பழனிமலை, ஏலக்காய்மலை, அகஸ்திய மலை** என அழைக்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், கடற்கரைக்கும் மத்தியில் குறுகலான சமவெளி இருக்கின்றது. கோடைகாலத்தில் தென் மேற்குப் பருவக்காற்றால் இங்கு கனத்த மழை பொழிகின்றது. மண் வளமும் சிறப்பாக இருக்கின்றது. ஆகையால் இங்கு ஜனநெருக்கம் அதிகம். கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும், கடற்கரைக்கும் மத்தியில் உள்ள சமவெளி சற்று அகலமானது. இதன் பெரும் பகுதி நதிகளின் வண்டல் மண் படிந்த டெல்டாக்களாகும். மேலும் இங்கு குளிர் காலத்தில் வடகிழக்குப் பருவக்காற்றால் மழையுண்டு. ஆகவே இங்கும் ஜனநெருக்கம் அதிகமாக விருப்பதுடன், முற்காலத்தில் தமிழ் மன்னர்களின் இராஜ்யங்களும் இங்கு சீர்பெற்று விளங்கியிருந்தன.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. நாம் நம் நாட்டுச் சரித்திரத்தை நன்கு அறிய ஏன், அதன் பூகோள வசதிகளைக் கவனிக்கவேண்டும்?
2. ஆதிகாலந்தொட்டு நம் நாட்டின்மீது பலர் படையெடுத்து வரக் காரண மென்ன?
3. இமய மலையினால் உண்டாகும் அனுகூலங்கள் எவை?
4. நம் நாட்டின் முக்கிய கணவாய்கள் எவை?
5. நம் நாட்டில் எங்கு பருத்தி அதிகம் விளைகிறது?
6. நம் நாட்டில் ஜனநெருக்கம் அதிகமுள்ள பகுதிகள் எவை?
7. இந்தியா படமொன்று வரைந்து, அதில் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள இயற்கைப் பிரிவுகள், மலைகள், நதிகள், கணவாய்கள் இவற்றைக் குறிப்பிடுக.

2. நம் நாட்டின் பூர்வீக மக்கள்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் நம் நாட்டில் வசித்து வந்ததாகக் கருதப்படுகின்றது. முற்காலத்தில் இவர்களுடைய சரித்திரத்தையும், வாழ்க்கை வரலாற்றையும் எழுதிவைக்கச் சாதனங்கள் கிடையா. ஆனால் ஆங்காங்கு தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்களினின்றும், அவர்களைப் பற்றி நாம் ஓரளவு அறிந்துகொள்கிறோம்.

(i) கற்கால மனிதர்கள்

நம் நாட்டின் பூர்வீக மக்கள் சிறிதும் நாகரிகமின்றி வாழ்ந்து வந்தனர். அவர்கள் குட்டையாய்க் கறுத்துப் பருத்த உருவமும், சப்பை மூக்கும், தடித்த உதடுகளும் உடையவர்கள். வீடுகளை அமைத்துக் கொள்ளத் தெரியாத அவர்கள் மிருகங்களைப்போலக் குகைகளில் வசித்துவந்தனர். காட்டில் கிடைக்கும் காய்கனி வகைகள், தாங்கள் வேட்டையாடிக் கொன்ற மிருகங்களின் இறைச்சி ஆகியவையே இவர்களின் உணவாகும். தாங்கள் வேட்டையாடிய மிருகங்களின் தோல்களும், மரப்பட்டைகளுமே இவர்களின் உடைகளாகும். கொடிய விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், வேட்டையாடவும் இவர்கள் கற்களையே உபயோகித்தனர். ஏனெனில் அவர்களுக்கு உலோகங்களைப் பற்றித் தெரியாது. ஆகையால் இவர்களுக்குப் **பழைய கற்கால மனிதர்கள்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

காலப்போக்கில், பழைய கற்கால மனிதர்களிடையே நாகரிக வளர்ச்சி தோன்றலாயிற்று. அவர்கள் தங்களுடைய கற்களைத் தேய்த்து, மழமழப்பாக்கி உபயோகிக்க ஆரம்பித்தனர். இதனால் இவர்களுக்குப் **புதிய கற்கால மனிதர்கள்** என்ற பெயர் ஏற்பட்டது. மேலும் இவர்கள் பயிர்த் தொழில்



நம் நாட்டின் பூர்வீகக் குடிகளும் கற்கால கருவிகளும்

புதிய கற்கால மனிதர்கள்

செய்தல், நெருப்பின் உபயோகம், உணவை சமைத்து உண்ணுதல், மண் பாண்டங்கள் செய்தல் இவற்றையும் அறிந்தனர். பயிர்த்தொழில் செய்துவந்ததால் இவர்கள் நாடோடிகளாக இல்லாமல், மரங்கள், இலைகள் இவற்றால் வீடுகளை அமைத்துக்கொண்டு, சிறு கூட்டங்களாக வசித்து வந்தனர். இவ்வாறு கிராமங்கள் ஏற்படலாயின. இவர்கள் இறந்தவர்களின் சடலங்களைப் பெரிய தாழிகளில் வைத்து, மூடியிட்டு, பூமிக்குள் புதைப்பது வழக்கம். தென்இந்தியாவில் சில விடங்களில் இவ்வகையான தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

புதிய கற்கால மனிதர்களுக்குப் பின் வந்தவர்கள் செம்பு, இரும்பு முதலிய உலோகங்களைக் கண்டுபிடித்து, அவற்றால் கருவிகள் முதலியவற்றை அமைத்துக் கொண்டனர். ஆகையால் அவர்கள் வசித்த காலத்திற்கு **உலோக காலம்** எனப் பெயர்.

இன்றும் நம் நாட்டுப் பூர்வீக மக்களின் சந்ததியார்கள் ஆங்காங்கு வசித்து வருகின்றனர். அவர்களுள் முக்கியமானவர்கள் வங்காளம், சோட்டா நாகபுரி ஆகியவிடங்களில் வசிக்கும் **சாந்தலர்கள்**, மத்திய இந்தியாவில் வசிக்கும் **காண்டுகள்**, இராஜபுதனம்,பம்பாய் ஆகிய விடங்களில் வசிக்கும் **பீலர்கள்**, நீலகிரி மலையிலுள்ள **தோதவர்கள்** ஆகியவர்கள். இவர்கள் பெரும்பாலும் நாகரிகமற்றவர்கள். பழங்கால மக்கள் நடத்திவந்த வாழ்க்கையையே இவர்களும் பின்பற்றி வருகின்றனர். மரங்களில் பிசாசுகள் வசிக்கின்றன என்று பயம் கொண்டு, அம்மரங்களைத் தெய்வங்களாக வணங்கி வருகின்றனர்.

(ii) சிந்துவெளி நாகரிகம்

சுமார் - 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் நாட்டில் சிந்துநதி தீரத்தில், அதிக நாகரிகமுள்ள மக்கள்

வாழ்ந்து வந்ததாகப் பல சான்றுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. சமீபகாலத்தில் சிந்துநதிச் சமவெளியில் ஆங்காங்கு பூமியைத் தோண்டுகையில், சிந்து மாகாணத்திலுள்ள மொஹஞ்சோ தாரோ, மேற்குப் பஞ்சாபிலுள்ள ஹரப்பா ஆகியவிடங்களில் அழகிய நகரங்கள் புதைந்திருக்கக் கண்டனர். அங்குள்ள வீதிகள் ஒழுங்காகவும், அகலமுள்ளவை



மொஹஞ்சோ தாரோ சிதைவு சின்னங்கள்

களாகவும், கழிவுநீர்க் கால்வாய்களை உடையனவாயும் இருக்கின்றன. வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்வீடுகளில்தற்காலவீடுகளைப்சதிபோன்றசகலவசதிகளும் அமைந்திருக்கின்றன. அங்கு வசித்த மக்கள் பொன், வெள்ளி இவற்ருலாகிய ஆபரணங்கள், பருத்தி ஆடைகள், இரும்புக் கருவிகள் இவற்றை உபயோகப்படுத்தி வந்ததாகத் தெரிகின்றது. அவர்கள் கடவுள் பக்தியும் மதப்பற்றும் கொண்டவர்கள். அவர்கள் அளவு கருவிகளையும் உபயோகப்படுத்தி வந்திருக்கின்றனர். அவர்கள் உபயோகித்த பாத்திரங்களில் கப்பல்களின் உருவங்கள் வரையப்பட்டிருப்பதால் அவர்கள்

கப்பல்கள் கட்டுவதில் வல்லவர்கள் என்றும், பிறநாடுகளுடன் கடல் கடந்தும் வாணிபம் செய்து வந்தனர் என்றும் ஊகிக்க இடமிருக்கின்றது. அம்மக்கள் அழகிய உருவச் சிலைகள், முத்திரைகள் இவற்றையும் செய்தனர். அவர்



சிந்து வெளிப் பிரதேசம்

களிடையே வழங்கிவந்த மொழி தமிழைப் போன்று இருந்ததாகக் குறிப்புகள் காணப்படுவதால், அவர்கள் **திராவிடர்களாக** இருக்கக்கூடுமென ஒரு சாரார் கருதுகின்றனர்.

சிந்து நதி, வெள்ளப் பெருக்கால் அடிக்கடி தனது போக்கை மாற்றிக்கொள்வதால், இந்நகர்கள் அந்நதியின் மணலில் புதைந்திருக்கக் கூடுமென்றும் நம்பப்படுகின்றது.

(iii) திராவிடர்கள்

நம் நாட்டுப் பூர்வீக மக்களில் அதிக நாகரிக மேம்பாடு அடைந்தவர்கள் **திராவிடர்கள்.** இவர்களது பூர்வீக வாசஸ் தலம் எது என்பதைப்பற்றி, சரித்திர ஆராய்ச்சியாளர் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இவர்கள் மேற்கு ஆசியாவிலிருந்து இங்கு வந்ததாக ஒரு சாரார் கருதுகின்றனர். வேறு சிலர் இவர்கள் சிந்துநதி தீரத்திலிருந்து தென் இந்தியா விற்கு வந்ததாகவும் மற்றும் சிலர் இவர்கள் தென்னிந்தியா விலேயே வசித்து வந்ததாகவும் கூறுகின்றனர்.

திராவிடர்கள் நிலங்களை உழுது பயிர் செய்தல், ஆடு மாடுகளைப் போஷித்தல், சிறந்த இல்லங்களை அமைத்துக் கொள்ளுதல், உயர்ந்த துணி வகைகளைச் செய்தல், உலோ கங்களைக் கொண்டு பாத்திரங்கள், போர்க் கருவிகளான கத்தி, ஈட்டி முதலியவற்றைச் செய்தல் ஆகியவற்றை நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் போர் செய்வதிலும் தீரர்கள். தேர்கள், யானைகள், குதிரைகள் இவற்றின்மீது அமர்ந்து போர் செய்வார்கள். தானிய வகைகள், பழங்கள், இறைச்சி, பால், தயிர் முதலியன அவர்களது ஆகாரப் பொருள்களாகும். அவர்கள் கப்பல்களைக் கட்டி, ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளுடனும் வாணிபம் செய்து வந்தார்கள். தென் இந்தியாவில் சில விடங்களில், பூமிக்கு அடியில் சுமார் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய உரோமானிய நாணயங்கள் புதைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருப்பதால், இவர்கள் உரோமபுரியுடனும் வாணிபம் செய்திருக்கக்கூடும். இங் கிருந்து மெல்லிய பருத்தி ஆடைகள், பவழங்கள், முத்துக் கள், பொன், மிளகு முதலியவை ஏற்றுமதியாகி வந்தன.

திராவிடர்கள் மரங்கள், பாம்புகள், சூரியன், பூமி இவற்றைத் தெய்வங்களாகத் தொழுது வந்தனர். பிற்காலத்

தில் இவர்கள் முருகக் கடவுளேயும் வழிபட்டு வந்தனர். தற்காலத்தில் தென் இந்தியாவில் வழங்கும் மொழிகளாகிய **தமிழ், தெலுங்கு, மலேயாளம் கன்னடம்**, ஆகியவை திராவிட மொழிகளெனக் கூறப்படுகின்றன.

(iv) ஆரியர்கள்

திராவிடர்களுக்குப் பின், நம் நாட்டு மக்களுக்குள் அதிக நாகரிகம் படைத்தவர்கள் ஆரியர்கள். இவர்களது பூர்வீக வாசஸ்தலம் மத்திய ஆசியா. அங்கு அவர்களது தொழில் ஆடுமாடுகளே மேய்த்தல் ஆகும். அவர்கள் அங்கு ஓரிடத்தில் நிலேயாக வசியாமல், புல் வெளிகளேத் தேடி அலேந்து கொண்டிருந்தனர். நாளடைவில் அங்கு புல் அதிகமாகக் கிடைக்காமையால் அவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, வெளியேறினர்கள். ஒரு பிரிவினர் ஐரோப்பாவிற்கும், மற்ருெரு பிரிவினர் பாரசீகம் முதலிய நாடுகளுக்கும் சென்றனர். மூன்ருவது பிரிவினர் கைபர் கணவாய் வழியே இந்தியாவிற்கு வந்து, சிந்து நதியும் அதன் உபநதிகளும் பாயும் நாடாகிய பஞ்சாபில் குடியேறினர்கள். நாளடைவில் மேலும் மேலும் பல ஆரியர்கள் கூட்டம் கூட்டமாக வரவே அவர்கள் கங்கைச் சம வெளியிலும் குடியேற ஆரம்பித்தனர். இவ்வாறு அவர்கள் குடியேறிய இடங்களுக்குப் பொதுவாக **ஆர்யா வர்த்தம்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

தோற்றத்தில் ஆரியர்கள் உயர்ந்த உருவம், சிவந்த மேனி, நீண்ட மூக்கு, பரந்த நெற்றி இவற்றை உடையவர்கள். இவர்கள் போர் செய்வதில் வல்லவர்கள். கத்தி, ஈட்டி, வில் இவற்றை எடுத்துக்கொண்டு, புரவிகள், மாடுகள் கட்டிய தேர்கள் இவற்றிலும் சென்று போர் புரிவார்கள்.

பயிர் செய்தல், ஆடுமாடுகளேப் போஷித்தல் ஆகியவை அவர்களது முக்கியத் தொழில்களாகும். அவர்கள்

கோதுமை ரொட்டி. பழங்கள், இறைச்சி, பால், தயிர், ஒரு வகைக் கொடியினின்றும் தயாரிக்கப்படும் சோம பானம். என்னும் ஒருவகைப் பானம் இவற்றை உட்கொண்டனர் பருத்தி ஆடைகள், கம்பள ஆடைகள் இவற்றைத் தயாரித்துத் தரித்துக்கொண்டனர்.

ஆரியர்கள் இந்திரன், சந்திரன், சூரியன், அக்கினி, வருணன், வாயு முதலிய தெய்வங்களைத் தொழுது வந்தனர். தங்களது நலத்துக்காகவும், சமூக நலத்துக்காகவும் இத் தெய்வங்களை வணங்கினார்கள். தங்களுடைய பிரார்த்தனைகளைத் தெரிவிப்பதற்காக பல தோத்திரப் பாக்களை இயற்றினார்கள். இப் பாக்களின் தொகுதிகளே **வேதங்கள்** எனப்படும். வேதங்கள் நான்கு. அவற்றில் மிகப் பழமையானது **இருக்கு வேதம்** எனப்படும். ஏனைய வேதங்கள் **யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்** ஆகியவை. இவ் வேதங்கள் புத்தக ரூபமாக எழுதி வைக்கப்படாமல், கர்ண பரம்பரையாகவே வழங்கி வந்தன. அக்காலத்திற்கு **வேத காலம்** எனப் பெயர் ஏற்பட்டது.

ஆரியர்கள் சிந்து நதித் தீரத்திலிருந்து, கங்கை நதித் தீரத்திற்கும் பரவினார்கள் என அறிந்தீர்கள் அல்லவா? அவர்கள் அங்கு பல இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள் முக்கியமானவை **ஹஸ்தினாபுரம், இந்திரப் பிரஸ்தம், பாஞ்சாலம், கௌரவம், காசி, விதேஹம், மிதிலை, மகதம்,** ஆகியவை. ஆரியர்கள் சிறந்த அரசியல் முறையையும் பின்பற்றி வந்தனர். அவர்களுடைய இராஜ்யங்களில் சில, மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன. சில, குடியரசுகளாக விளங்கின. மன்னர்களுக்கு எல்லா வகையான அதிகாரங்களும் இருந்தபோதிலும், அவர்கள் **சமிதி** என்னும் பொதுக் கூட்டத்தினர், மந்திரிகள் இவர்களின் ஆலோசனைப் படிக்கே

அரசு செலுத்தி வந்தனர். மன்னர்கள் குடிகளின் க்ஷேமத்தி லேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

ஆரியர்கள் மத்திய ஆசியாவில் வசிக்கையில், அவர் களிடையே எவ்வகையான பாகுபாடும் கிடையாது. இந்தியா விற்கு வந்தபின் அவர்கள் இங்குள்ள பூர்வீக மக்களுடன் போர்புரிய வேண்டியிருந்ததாலும், வேறு பல அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்ததாலும், அவர்களிடையே நான்கு வருணங்கள் தோன்றலாயின. ஆதியில் இவ் வருணத்தவர் களிடையே எவ்வித வேற்றுமைகளும் இல்லாம லிருப்பினும், காலப்போக்கில் அவர்கள் உணவு கொள்ளுதல். கொள்வினை கொடுப்பினை இவற்றில் வேற்றுமை பாராட்டி, ஒவ்வொரு வருணத்தவர்களும் தனியே இருக்க ஆரம்பித்தனர்.

ஆரியர்கள் வட இந்தியாவில் பல இராஜ்யங்களை ஸ்தா பிக்கையில், அவர்களிடையே இரண்டு பெரிய காவியங்கள் வழங்கலாயின. இவற்றிற்கு **இதிகாசங்கள்** எனவும் பெய ருண்டு. இவை வால்மீகி என்னும் கவி இயற்றிய **இராமா யணமும்,** வியாசர் இயற்றிய **மகா பாரதமும்** ஆகும். இவை இரண்டும் மக்களுக்குப் பல அரிய நீதிகளைப் புகட்டுகின் றன. இக்காலத்தை **இதிகாச காலம்** எனவும் கூறு வார்கள்.

ஆரியர்கள் ஆதியில் பல இயற்கைத் தோற்றங்களை தெய்வங்களாகத் தொழுது வந்தபோதிலும், நாளடைவில் இத்தெய்வங்களை எல்லாம் ஆட்டிவைக்கும் முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டு என்றும், அவரே பரம்பொருள் என் றும் கருதினார்கள்.

(V) மங்கோலியர்கள்

ஆரியர்கள் வடமேற்குப் பக்கத்திலிருந்து இந்தியாவிற் குள் வந்தது போல, மங்கோலியர்கள் என்பவர்களும் வட

கிழக்கிலிருந்து, இந்தியாவிற்குள் வந்தனர். முதன் முதலில் இவர்கள் சீனு, ஜப்பான் முதலிய நாடுகளில் வசித்து வந்தனர். பிறகு அவர்கள் திபேத்துக்கு வந்து, அங்கிருந்து பிரம்மபுத்ரா நதிப் பள்ளத்தாக்கு வழியே வந்து பர்மாவிலும் அஸ்ஸாம் வங்காளம் ஆகிய விடங்களிலும் குடியேறினுர்கள்.

மங்கோலியர்கள் தோற்றத்தில் குள்ளமாயும் மஞ்சள் வர்ணமாயும் அகன்ற நெற்றி, சாய்ந்த சிறிய கண்கள் இவற்றை யுடையவர்களாயும் இருக்கின்றுர்கள். இந்தியாவில் குடியேறிய மங்கோலியர்கள் இங்குள்ள பூர்வீக மக்களுடன் கலந்துகொண்டனர்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. பழைய கற்கால மனிதர்கள், புதிய கற்கால மனிதர்கள் இவர்களைப்பற்றி குறிப்பு வரைக.
2. இந்தியாவின் பூர்வீக மக்களின் சந்ததியார்கள் இப்பொழுது எங்கெங்கு வசிக்கின்றனர்? அவர்களின் வெவ்வேறு பெயர்கள் யாவை?
3. சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி நீ அறிந்ததைக் கூறுக.
4. திராவிடர்களின் வாழ்க்கை வரலாறுகள் எவை?
5. ஆரியர்களின் அரசியல், சமூக, சமய வழக்கங்களைக் கூறுக.
6. நம்நாட்டின் இரண்டு பெரிய இதிகாசங்கள் எவை? அவை எவ்வாறு முக்கியமானவை?
7. மங்கோலியர்கள் எவ்வழியாக இந்தியாவிற்குள் வந்தனர்? அவர்களது தோற்றத்தைப் பற்றிக் கூறுக.
8. இந்தியா படம் ஒன்றில் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுக:- இந்தியாவின் பூர்வீகக் குடிகளின் சந்ததியார்கள்: வசிக்குமிடங்களும் அவர்கள் பெயர்களும், சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா நதிகள்: மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா, கைபர் கணவாய், ஆரியர்கள், மங்கோலியர்கள் இவர்கள் வந்த மார்க்கங்கள்; ஆரியர்களின் இராஜ்யங்கள்.

3. நம் நாட்டின்மீது படையெடுத்து வந்த அன்னிய நாட்டினர்

முற்காலத்தில் அன்னிய நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய சிலரைப்பற்றி, முன் பாடத்தில் படித்தீர்கள். இங்கு படையெடுத்து வந்த மற்றும் சிலரைப்பற்றி இப் பாடத்தில் அறிந்து கொள்ளுங்கள்.

(i) கிரேக்கப் படையெழுச்சி

முற்காலத்தில் நாகரீகம், கலைகள், கல்வி, கேள்வி இவற்றில் சிறந்த நாடு **கிரீஸ்** ஆகும். இது ஐரோப்பாவின் தென்கிழக்கிலுள்ள ஒரு மலைநாடு. கிரேக்க மக்கள் போரில் மிகவும் வல்லவர்கள்: அதிக நாட்டுப் பற்று கொண்டு தாய்நாட்டிற்காக எவ்விதத் தியாகமும் செய்யத் தயாரகாஇருந்தனர்.

அத்தகைய நாட்டின் வடபகுதி **மாஸிடோனியா** எனப் படும். கி. மு. மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியில் அங்கு **அலெக்ஸாந்தர்** என்னும் இளம் வயதுடைய மன்னர் ஆட்சி புரிந்தார். சிறு வயதிலிருந்தே அவருக்குப் பல நாடுகளைப் போரில் வென்று, பேரும் புகழும் பெறவேண்டுமென்றபேரவா தலைதூக்கி நின்றது. ஆகவே: பட்டத்துக்கு வந்த சிறிது காலத்துக்குள் அவர் ஓர் பெரும் படையைத் திரட்டி முதலில் கிரிஸ் நாடு முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டார். பிறகு **ஸிரியா, ஆசியா மைனர்**,, தற்போது ஈரான் 'எனப்படும் **பாரசீகம், ஆப்கானிஸ்தானம்** முதலிய

மஹாஅலெக்ஸாந்தர்

அலெக்ஸாந்தரது படையெழுச்சி மார்க்கம்

நாடுகளை வென்றார். பிறகு கைபர் கணவாய் வழியே அவர் இந்தியாவிற்குள் புகுந்தார். அங்கு **தக்ஷசீலம்** என்னுமிடத்தில் ஆட்சி புரிந்த **அம்பி** என்னும் மன்னர் அலெக்ஸாந்தரின் பராக்கிரமச் செயல்களைப் பற்றிக் கேள்வியுற்று, அவரிடம் போர் செய்யாது பணிந்து, கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டார்.

தக்ஷசீலத்துக்குக் கிழக்கிலுள்ள பகுதிகளை **புருஷோத்தமன்** என்ற மன்னர் ஆட்சி புரிந்து வந்தார். கிரேக்கர்கள் அவரைப் **போரஸ்** என அழைப்பார்கள். அவர் மற்றும் சில சிற்றரசர்களின் உதவியைக்கொண்டு, **ஜீலம்** நதிக் கரையில் அலெக்ஸாந்தரை எதிர்த்து நின்று, வீராவேசத்துடன் போர் புரிந்தார். அவ்வாறு இருப்பினும், அவர் தோல்வியுற்றுக் கைதியானார். அவரது வீரத்தை மெச்சிய அலெக்ஸாந்தர் அவருக்கு சுதந்திரமளித்து, அவரைத் தன் நண்பராக்கிக் கொண்டு, அவரது இராஜ்யத்தை அவருக்குத் திரும்ப அளித்தார்.

இதன் பிறகு, அலெக்ஸாந்தர் **பீயஸ்** நதிக்கரை சென்று இடையிலுள்ள நாடுகளை எல்லாம் வென்றார். அதற்கு மேலும் அவர் செல்ல விரும்பினார். ஆனால் அவருடைய போர் வீரர்கள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லப் பெரிதும் இச்சை கொண்டிருந்ததால், அலெக்ஸாந்தரும் திரும்ப வேண்டியதாயிற்று. அவர் சிந்து நதிக்கரை யோரமாகத் தெற்கு நோக்கி வந்து, கடற்கரையை யடைந்து, கப்பலில் பிரயாணம் செய்து, பாரசீகத்தை அடைந்தார். அங்கு **பாபிலோனியா** என்னுமிடத்தில் கி. மு. 323-ம் ஆண்டில், கொடிய விஷசுரம் கண்டு, மரணமடைந்தார்.

அலெக்ஸாந்தரின் மரணத்துக்குப் பின் அவரது பரந்த சாம்ராஜ்யம் அவருடைய படைத் தலைவர்களால் பகிர்ந்து

கொள்ளப்பட்டது. அவர்களுள் ஒருவரான **செலியூகஸ் நிக்கட்டார்** என்பவர் அந்த சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதிகளைப் பெற்றார்.

கிரேக்கர்களது படையெழுச்சியினால் பல விளைவுகள் ஏற்பட்டன. பஞ்சாபிலுள்ள பல சிறு இராஜ்யங்களை அலெக்ஸாந்தர் வென்று ஐக்கியப்படுத்தினார். இதனால் மௌரிய மன்னர்கள் பஞ்சாபைக் கைப்பற்ற எளிதாயிற்று. அலெக்ஸாந்தருடன் இந்தியாவிற்கு வந்த கிரேக்க சரித்திர ஆசிரியர்கள் இந்தியாவின் அக்கால நிலையைப் பற்றிய குறிப்புக்களை வரைந்துள்ளார்கள். சரித்திர சம்பந்தமாக, இக்குறிப்புகள் நமக்கு உதவியாக இருக்கின்றன. கிரேக்கர்கள் இந்திய கலாசாரங்களை மேல்நாடுகளில் பரப்பினார்கள். இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு மிடையே வாணிபம் வளரலாயிற்று. கிரேக்கர்களின் கட்டிடக் கலை முதலியன இந்தியர்களால் பின்பற்றப்பட்டன.

(ii) குஷானர்களின் படை யெழுச்சி

சுமார் கி. மு. முதல் நூற்றாண்டில், மற்றொரு வகுப்பினர் இந்தியாவிற்குக் கைபர் கணவாய் வழியே வந்தனர். இவர்களுக்குக் **குஷான்** வகுப்பினர் எனப் பெயர். இவர்களுள் கீர்த்திபெற்ற அரசர் **கனிஷ்கர்**.

கனிஷ்கர் சுமார் கி. பி. 120-ம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். இவரது தலைநகரம் **புருஷபுரம்.** அதுவே இக்காலத்தில் **பிஷாவர்** என அழைக்கப்படுகின்றது. கனிஷ்கர் ஒரு சிறந்த போர்வீரர். இவர் வடக்கிலுள்ள **யார்கண்டு, காஷ்கர், கோட்டான், காஷ்மீரம்** முதலிய இடங்களை ஜெயித்தார். மேலும் இவர் **கனிஷ்கபுரம்** என்னும் புதிய நகரை நிருமாணித்தார்.

மௌரிய மன்னரான அசோகரைப் போலவே கனிஷ்கரும் புத்தமதத்தில் அதிகப் பற்றுக் கொண்டவர். இவர் காலத்திய புத்த மதத்திற்கு **மஹாயானம்** எனப் பெயர். அசோகர் காலத்தில் புத்தர் கடவுளின் தூதரெனக் கருதப் பட்டார். இதற்கு **ஹீனயானம்** எனப் பெயர். ஆனால் கனிஷ்கர் காலத்தில்; புததர் கடவுளெனக் கருதப்பட்டு, அவரது சிலை கோயில்களில் வைக்கப்பட்டு, வழிபடப்பட்டு வந்தது. இதுவே மஹாயானம் என்பதாகும். மேலும் இவர் அடிக்கடி பௌத்த சமயப் பெரியார்களை அழைத்து மத விசாரணை செய்தார். மத்திய இந்தியா, சீனு, ஜப்பான், ஆகிய நாடுகளுக்கு பௌத்த சன்யாசிகளை அனுப்பி, புத்த மதத்தை அங்கு பரப்பினர்.



கனிஷ்கரது சாம்ராஜ்யம்

கனிஷ்கர் கலைப் பிரியர். அவர் காலத்தில் கிரேக்கக் கட்டிடக் கலை, இந்தியக் கட்டிடக் கலை இவை கலப்புற்று,

காந்தாரக் கலை என்னும் புதிய கட்டிடக் கலை உருவாகியது. அவருடைய சபையில் **அசுவகோஷர், நாகார்ஜுனர், சரகர்** முதலிய கல்விமான்கள் இருந்தனர். அசுவகோஷர் பௌத்த சமய நூலையும், நாகார்ஜுனர் ஓர் ஞான நூலையும், சரகர் ஓர் வைத்திய நூலையும் எழுதியுள்ளார்கள்.

கனிஷ்கருக்குப் பின் பட்டத்துக்கு வந்த குஷான் மன்னர்கள் பலவீனமானவர்கள், ஆதலால் அவர்களது சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது.

குஷானர்களது படையெடுப்பால், பல விளைவுகள் தோன்றலாயின. இந்தியாவிற்கும், புதிதாக புத்தமதம் பரவிய நாடுகளுக்கு மிடையே வாணிபம் பெருகலாயிற்று. மத்திய ஆசியாவினின்றும் பல புதிய பழவகைகள் இங்கு கொண்டு வரப்பட்டன. புதிய கட்டிடக் கலையாகிய காந்தாரக் கலை நாடெங்கும் பரவலாயிற்று. புத்த மதமும் புத்துயிர் பெற்றது.

(iii) ஹூணர்களின் படையெழுச்சி

ஹூணர்கள் என்னும் முரட்டு வகுப்பினர் மத்திய ஆசியாவில் வசித்து வந்தனர். அவர்களும் ஆரியர்களைப் போலவே ஆடுமாடுகளைப் போஷித்து ஜீவித்து வந்தனர். பிறகு அங்கு புல் கிடைக்காமல் போகவே, அவர்களில் ஒரு பகுதியினர் வடமேற்குக் கணவாய் வழியே இந்தியாவிற்கு வந்தார்கள்.

ஹூணர்களின் தலைவர் **தோரமானன்** என்பவராகும். இவர் மிகவும் கொடுங்கோலரசர். இங்கு இவர் பல மக்களைக் கொன்றும், கிராமங்களையும் நகரங்களையும் தீயிட்டும் நாசமாக்கினர். அக்காலத்தில் இந்தியாவில் கீர்த்திபெற்றிருந்த **குப்த சாம்ராஜ்யத்தையும்** வீழ்ச்சியுறச் செய்தார். மாளவத்தில் தனது இராஜ்யத்தை நிலைபெறச் செய்தார்.

தோரமானனுக்குப்பின் அவரது குமாரரான **மிகிரகுலன்** பட்டத்துக்கு வந்தார். இவர் தன் தந்தையைக் காட்டிலும் கொடுமை வாய்ந்தவர். இவரது அட்டூழியங்களைப் பொருது பல இந்திய சிற்றரசர்கள் **யசோதர்மன்** என்பவரின் தலைமையில் மிகிரகுலனைத் தோற்கடித்தனர். அவர் காஷ்மீருக்கு ஓடி, அந்நாட்டு மன்னரை வஞ்சித்து, சிங்காதனத்தைக் கைப்பற்றி சிறிது காலம் ஆட்சிபுரிந்து இறந்தார். இவருக்குப் பின் இந்தியாவில் ஹூண இராஜ்யம் அழிவுற்றது. ஆனால் அவர்களில் சிலர் சிலகாலம் ஆங்காங்கு வசித்து வந்தனர்.

ஹூணர்கள் குப்த சாம்ராஜ்யத்தை அழித்ததுமன்றி, புத்த மதத்தையும் நசிக்கச் செய்தனர். அவர்களில் பலர் இந்து மதத்தைத் தழுவினார்கள்.

(iv) முகம்மதியர்களின் படையெழுச்சி

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரேபியா நாட்டில் ஓர் புதிய மதம் தோன்றியது. இதுவே **இஸ்லாமிய மதம்** ஆகும். இதைத் தோற்றுவித்தவர் **முகம்மது நபி நாயகம்** என்னும் தீர்க்கதரிசி ஆவார். அவர், கடவுள் ஒருவரே என்றும், அவர் உருவமற்றவர் ஆதலால் விக்கிரஹ ஆராதனை கூடாது என்றும், மக்கள் எல்லாரும் சகோதரர்கள் போலவும், சீலமுள்ளவர்களாகவும் வாழவேண்டுமென்றும் போதித்தார். இவர் பிறந்த ஊராகிய **மெக்காவில்** இருந்த மக்கள் இவரது போதனைகளை வெறுத்து, இவருக்குக் கேடு விளைவிக்க முயன்றனர். ஆதலால் இவர் மெக்காவை விட்டு **மதீனா** என்னும் நகரத்துக்கு விஜயம் செய்தார். இச் சம்பவத்தை முஸ்லீம்கள் **ஹிஜிரி** எனக் கூறுவார்கள். அவர்களது சகாப்தம் இதிலிருந்தே கணக்கிடப்படுகின்றது. முகம்மது காலத்திலேயே இஸ்லாமிய மதம் அரேபியா நாடு முழுவதும்

பரவியது. அவருக்குப் பின் அவரது சீடர்கள் இம் மதத்தை மேலும் பல நாடுகளில் பரப்பினார்கள்.

பல நூற்றாண்டுகளாக, அரேபியாவிற்கும் இந்தியாவிற்குமிடையே வாணிபம் நடைபெற்று வந்தது. ஆகவே அராபியர்கள் இந்தியாவைப்பற்றி நன்கு அறிந்திருந்தனர். கி.பி.712-ம் ஆண்டில் **முகம்மது பின்காஸிம்** என்ற அராபிய வீரர், சிந்து நாட்டின் மீது படையெடுத்து வந்து, அதைக் கைப்பற்றி, சிறிது காலம் ஆட்சி புரிந்தார். ஆனால் சிந்து நாட்டில் அராபியர்களது ஆட்சி வெகு காலம் நீடிக்கவில்லை.

சிந்து நாட்டில் அராபியர்கள் சிறிது காலமே ஆட்சி புரிந்தபோதிலும், அவர்களது ஆட்சியால் பல விளைவுகள் ஏற்பட்டன. அவர்கள் வைத்தியம், கணிதம், வானசாஸ்திரம் இவற்றை இந்தியர்களிடமிருந்து கற்று அவற்றை மேல் நாடுகளில் பரப்பினார்கள். இந்தியாவில் வழங்கி வந்த 1, 2, 3 ஆகிய எண்கள் அரேபியர்களால் ஐரோப்பிய நாடுகளில் பரப்பப்பட்டதால், ஐரோப்பியர்களால் அவற்றை **அராபிய எண்கள்** எனக் கூறினார்கள். முகம்மது பின் காஸிம்முடன் இந்தியாவிற்கு வந்த அராபிய சரித்திர ஆசிரியர்கள் அக்காலத்திய இந்தியாவின் நிலையைப்பற்றிக் குறிப்புகள் வரைந்துள்ளார்கள். இக்குறிப்புகள் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. மேலும், இந்தியாவிற்கும், மேல் நாடுகளுக்குமிடையே வாணிபம் பெருகலாயிற்று.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. அலெக்ஸாந்தர் வென்ற நாடுகள் யாவை?
2. கனிஷ்கர் சாதித்தவைகளைக் கூறுக.
3. தோரமானன், மிகிரகுலன் இவர்களைப்பற்றிக் குறிப்புகள் வரைக.
4. இஸ்லாமிய மதத்தின் போதனைகள் யாவை ?

5. சிந்து நாட்டின்மீது அராபியர்களின் படையெழுச்சியைப்பற்றி குறிப்புகள் வரைக.

6. கீழ்க்கண்ட அட்டவணை யொன்றைத் தயார் செய்து, பூர்த்தி செய்யவும்.

நம் நாட்டின் மீது படையெடுத்த வர்கள்	படையெடுப்பின் காலம்	படையெடுப்பின் விளைவுகள்

7. இந்தியா படமொன்றை வரைந்து, அதில் கனிஷ்கருடைய சாம்ராஜ்யத்தின் பரப்பு, அவரது தலைநகர், அவர் கைப்பற்றிய இடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

4. வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த முக்கிய இந்துப் பேரரசர்கள்

(*i*) சந்திரகுப்த மௌரியர்

ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் பரவுங்கால், ஆங்காங்கு பல இராஜ்யங்களை அமைத்தார்கள் என அறிந்தீர்கள் அல்லவா? அவற்றுள் ஒன்று **மகத இராஜ்யம்** எனப்படும். தற்காலத்திய பீஹார் இராஜ்யத்தின் பெரும் பகுதி இதில் அடங்கியிருந்தது.

கிரேக்க மன்னராகிய அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது, மகத இராஜ்யத்தில் **நந்த மன்னர்கள்** ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களது உறவினரான சந்திரகுப்தர் என்பவர் பராக்கிரமம் வாய்ந்தும், மக்களால்

பெரிதும் விரும்பப்பட்டும் இருந்ததால், அவர்மீது பொருமை கொண்ட நந்த மன்னர்கள் அவரை நாடு கடத்திஞர்கள். அவர் பஞ்சாபுக்குச்சென்று, அலெக்ஸாந்தரைச் சந்தித்து, மகத இராஜ்யத்தைப்பெற, தனக்கு உதவிபுரியும்படி கேட்டுக் கொண்டார். அலெக்ஸாந்தரின் போர் வீரர்கள் தம் தாய் நாடு செல்ல பேரவாக் கொண்டிருந்ததால் அவர் சந்திரகுப்த ருக்கு உதவி செய்ய முடியவில்லை.

அலெக்ஸாந்தர் இந்தியாவை விட்டுச் சென்றவுடன் பஞ்சாபில் குழப்பம் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, சந்திரகுப்தர் ஓர் படையைத் திரட்டி பஞ்சாபைக் கைப்பற்றிஞர். இதன் பிறகு இவர் **சாணக்கியர்** என்னும் மதியூகியின் உதவியைக் கொண்டு, நந்தமன்னரைக் கொன்று மகதராஜ்யத்தின் தலைநகராகிய **பாடலீபுரத்தில்** சிங்காதன மேறிஞர். (கி. மு. 323) சந்திரகுப்தரின் தாய் **முரா** என்பவ ராதலால் சந்திரகுப்தர் ஸ்தாபித்த வமிசத்திற்கு **மௌரிய வமிசம்** எனப் பெயர் ஏற்படலாயிற்று.

அலெக்ஸாந்தரின் மரணத்துக்குப்பின் அவருடைய சாம்ராஜ்யம் அவரது படைத் தலைவர்களால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது என்றும் கீழ்ப்பகுதி நாடுகள் செலியூகஸ் நிக்கட்டார் என்பவர் வசம் வந்தன என்றும் படித்தீர்கள். சந்திரகுப்தர் காலத்தில் செலியூகஸ் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தார். ஆனல் அவர் தோல்வியுற்ருர். இதன் விளைவாக அவர் சந்திரகுப்தருக்குத் தனது இராஜ்யத்தின் ஒரு பகுதியை யளித்து, தன் மகளையும் சந்திரகுப்தருக்கு மணம் புரிவித்தார். மேலும் அவர் **மெகஸ்தனிஸ்** என்ற இராஜதூதரையும் சந்திரகுப்தரின் சபைக்கு அனுப்பிஞர். இவர் பலகாலம் இந்தியாவில் வசித்திருக்கையில் தான் இந்தி யாவில் கண்ட, கேட்டவற்றை ஓர் நூலாக எழுதியுள்ளார்.

இதற்கு **இந்திகா** எனப் பெயர். இந்நூலும் சாணக்கியர் எழுதிய ஆட்சிமுறை நூலாகிய **அர்த்த சாஸ்திரம்** என்ற நூலும், மௌரியர்களைப்பற்றி நாம் அறிந்துகொள்ளப் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

மௌரிய மன்னர்களின் ஆட்சிமுறை பெரிதும் சிறப்புற்றிருந்தது. தமது பரந்த சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க அவர்களிடம் ஒரு பெரும்படை இருந்தது. அதைக் கவனித்துக் கொள்ள முப்பதின்மர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அது ஐந்து பெயர்கள் கொண்ட ஆறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சிறு குழுவும் படைகளின் வெவ்வேறு அங்கங்கள், போக்கு வரவு, உணவு, உடை முதலியவற்றைக் கவனித்து வந்தன.

தலைநகராகிய பாடலிபுத்ரம் பெரிதும் சிறப்புற்று விளங்கியது. அதையும் அதைப் போன்ற ஏனைய நகரங்களையும் கவனித்துக்கொள்ள முப்பதின்மர் அடங்கிய சபைகள் இருந்தன. இவையும் ஆறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு அலுவல்களைக் கவனித்து வந்தன.

மௌரிய சாம்ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றையும் ஒரு வைஸ்ராய் அல்லது அரசப்பிரதிநிதி கவனித்து வந்தார். இவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், இவர்களின் நடவடிக்கைகளை இரகசிய ஒற்றர்கள் கவனித்து வந்தனர்.

சந்திரகுப்தர் கி. மு. 297-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

(ii) அசோகர்

சந்திரகுப்த மௌரியருக்குப் பின் அவருடைய குமாரரான **பிந்துசாரர்** பட்டத்துக்கு வந்து, சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் அரசுபுரிந்தார். இவர் காலத்தில் தட்சிணமும் மௌரியர்களது ஆதிக்கத்தின்கீழ் வந்தது. இவருக்குப்பின்

இவரது குமாரரும், மிகப்பிரசித்தி பெற்றவருமான **அசோகர்** என்பவர் கி. மு. 272-ம் ஆண்டில் பட்டம் பெற்ருர்.

நம் தாயின் மணிக்கொடியின் மத்தியில் அசோக சக்ர மும், தபால் பில்லையில் அசோக ஸ்தூபியின் மூன்று சிங்கச்சின்னமும் திகழ் கின்றன அல்லவா? இவற்றை ஏன் நமது அரசாங்கம் இப்பொழுது விளம் பரப் படுத்துகின்றது? அசோகர் அஹிம்சையையே மேற்கொண்டு போரினுலன்றி, அன்பினுல் பிறநாடு களை ஆட்கொண்டார். அந் நாடுகளி லும் அன்பைப் பரப்பினுர். தற்போதுள்ள நமது அரசாங்கமும் காந்தி மஹான் வகுத்த வழியாகிய அஹிம் சையையே பின்பற்றுவதால், மேற் கூறிய அசோக சின்னங்கள் இப்பொ ழுது கையாளப்படுகின்றன.

அசோகர்

அசோகர் பட்டத்துக்கு வந்தவுடன் தனது முன்னோர் களைப் போலவே போரில் கீர்த்தியும், வெற்றியும் பெறப் பெரி தும் விரும்பினுர். ஆகையால் இவர் பட்டம் பெற்ற சில ஆண்டுகளுக்குப்பின் ஓர் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு **கலிங்கம்** என்னும் நாட்டைத் தாக்கினுர். கலிங்க மக்கள் வீராவேசத்துடன் போர் புரிந்தனர். அவ்வாறு இருந் தும் இறுதியில் அவர்கள் படுதோல்வியடைந்தனர். கலிங்கப் போரே அசோகரின் முதல் போரும் இறுதிப்போரும் ஆகும். ஏனெனில் இப்போரில் இருதரத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்துறந்தனர். மேலும் பல ஆயிரக்கணக்கான வர்கள் காயமுற்றுக் கதறியழுதனர். இவற்றைக் கண்ணுற்ற



இந்தியா — அசோக சாம்ராஜ்யம்

அசோகர் பெரிதும் மனம்வருந்தி இனிப் போரிடுவதில்லை என விரதம் பூண்டார். வெற்றிக்குப்பின் போரை வெறுத்த இந்த உத்தமர் உலக மகா சக்ரவர்த்திகளுள் ஒருவராகக் கருதப்படுவது விந்தையல்ல.

கலிங்கப் போருக்குப்பின் அசோகர் புத்தமதத்தைத் தழுவி, மஞ்சள் உடை தரித்து ஒரு சன்யாசியானார். தனது எஞ்சிய நாட்களை, புத்தமதக் கொள்கைகளை நாட்டில் பரப்புவதிலும் குடிகளுக்குப் பல நன்மைகள் புரிவதிலும் செலவிட்டார். தானே பிறருக்கு ஒரு வழி காட்டியாக இருக்க வேண்டுமெனக் கருதி, தன் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொண்டார். வேட்டையாடுதல், புலால் உணவு இவற்றைக் கைவிட்டார்.

இவர் நாடெங்கும் பாறைகளிலும் கற்றூண்களிலும் புத்தமதக் கொள்கைகளையும் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான நீதிகளையும் செதுக்குவித்தார். நாடு முழுவதும் மதப் பிரசாரம் செய்ய புத்தசன்யாசிகளை அனுப்பினார். தனது மகனையும் மகளையும் இலங்கைக்கு அனுப்பி அங்கு மதப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தார். மக்கள் நெறியுடன் வாழ்கின்றார்களா என்பதைக் கவனிக்க **தர்ம மகா மாத்திரர்கள்** என்ற உத்தியோகஸ்தர்களை நியமித்தார்.

அசோகர் தன் குடிகளுக்குப் பல நன்மைகள் புரிந்தார். நாடெங்கும் சாலைகள் அமைத்து, வழிப்போக்கர்களுக்கு நிழலும், பழங்களும் அளிப்பதற்காக அவற்றின் இருபுறங்களிலும் மரங்களை நட்டுப் பயிராக்கினார். ஆங்காங்கு கிணறுகள் தோண்டி சத்திரங்களையும் அமைத்தார். கல்வியைப் பரப்புவதற்காக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்விச்சாலைகளை அமைத்தார். மனிதர்களுக்கேயன்றி மிருகங்களுக்கும் மருத்துவச்சாலைகளை அமைத்தார். நீர்ப்

பாசனத்திற்காக குளங்களையும், கால்வாய்களையும் அமைத்தார்.

அசோகருக்குப்பின் வந்தவர்கள் பலவீனமானவர்களாதலால் அவர்கள் காலத்தில் மௌரிய சாம்ராஜ்யம் மங்கி, இறுதியாக மறைந்தது.

மௌரிய மன்னர்களது ஆட்சியில் கட்டிடக் கலை பேராதரவு பெற்றது. இந்தியக் கலைகள் பண்பாடு இவை இதர நாடுகளிலும் பரவின.

(iii) குப்த மன்னர்கள்

மகத நாட்டில் மௌரியர்கள் ஆதிக்கம் குன்றிய பின் சிலகாலம்வரை வட இந்தியாவில் குழப்பமே இருந்தது. பல சிறு இராஜ்யங்கள் தோன்றுவதும் அழிவதுமாக இருந்தன. கடைசியாக கி. பி. நான்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் மகதநாட்டில் மீண்டும் ஓர் புதிய சாம்ராஜ்யம் எழுச்சிபெற்றது. இந்த சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்தவர்கள் குப்த **மன்னர்கள்** ஆவார்கள்.

முதலாம் சந்திரகுப்தர் : குப்த சாம்ராஜ்யத்துக்கு அடிகோலியவர் முதலாம் சந்திரகுப்தர் ஆவார். இவர் கி. பி. 320-ல் பட்டத்துக்கு வந்தார். இவரது தலைநகரம் பாடலிபுத்ரமே ஆகும். பட்டத்துக்கு வந்த சிறிதுகாலத்திலேயே இவர் சுற்றியுள்ள சில நாடுகளை வென்றுர். மேலும் இவர் **குமாரிதேவி** என்ற **லிச்சவி** இளவரசியை மணந்தார். அவள் மூலமாக இவருக்குச் சில நாடுகள் கிடைத்தன. குப்த சகாப்தம் இவர் காலத்திலேயே ஏற்பட்டது. இவர் கி. பி. 330-ம் ஆண்டில் மரண மடைந்தார்.

சமுத்திர குப்தர்: சந்திர குப்தருக்குப் பின் அவருடைய குமாரர்களுள் ஒருவரான சமுத்திரகுப்தர் பட்டத்துக்கு வந்

தார். இவர் சிறந்த போர்வீரர். இவர் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு கிழக்குக்கரை யோரமாகச் சென்று, பல்லவர்களைத் தாக்கி வெற்றிகொண்டார். பிறகு



இந்தியா—குப்த சாம்ராஜ்யம்

மேற்கே சென்று அங்கும் சில நாடுகளைத் தோற்கடித்து ஏராளமான செல்வத்துடன் தன் தலைநகருக்குத் திரும்பினர்.

தன் வெற்றிகளைக் கொண்டாடவும், சக்ரவர்த்தி எனப் பட்டம் பெறவும், இவர் ஒரு **அசுவமேத யாகத்தைச்** செய்தார்.

சமுத்திரகுப்தர் கல்வி, கலைகள் இவற்றில் ஆர்வம் கொண்டவர். இவர் சங்கீதத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந் தார். இவருடைய நாணயங்களில் இவர் வீணை வாசிப்பது போல சித்திரம் உள்ளது. இவர் இந்துமதத்திலும் அதிகப் பற்றுக் கொண்டவர். இவர் 380ம் ஆண்டில் மரணமடைந்தார்.

இரண்டாம் சந்திரகுப்தர்: சமுத்திர குப்தருக்குப்பின், மிகக் கீர்த்தி பெற்ற அவரது குமாரரான **இரண்டாம் சந்திர குப்தர்** பட்டத்துக்கு வந்தார். இவரும் போரில் வெகு தீரர்.

குப்த நாணயங்கள்

ஆகையால் இவர் **விக்கிரமாதித்தியர்** என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். இப்பதத்திற்கு "பலத்தில் சூரியனுக்கு ஒப்பானவர்" என்பது பொருள். இவர் பட்டத்துக்கு வந்த சில காலத்துக்கெல்லாம் பெரும் படையொன்றைத் திரட்டிச் சென்று **மாளவம், கூர்ஜ்ஜரம்** முதலிய இடங்களைக் கைப் பற்றினார். மாளவத்திலுள்ள **உஜ்ஜயினி** இவருடைய இரண் டாவது தலைநகரமாயிற்று. கூர்ஜரத்தைக் கைப்பற்றியதால், இவரது சாம்ராஜ்யம் மேற்குக் கடற்கரை வரை பரவியது.

இதனால் அந்நிய நாடுகளுடன் வாணிபப் பெருக்கு ஏற்பட்டது. நாட்டின் செல்வ நிலையும் அபிவிருத்தியடைந்தது. இந்தியாவின் மேற்குப் பகுதியில் குடியேறி இருந்த **சாகர்களையும்** இவர் வென்றார். இதனால் இவருக்குச் **சாகாரி** (சாகர்களின் சத்துரு) என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டது.

இரண்டாம் சந்திரகுப்தரும் தன் தந்தையைப் போலவே கல்வி, கலைகள் இவற்றை ஆதரித்தார். அவரது சபையில் பல கல்விமான்கள் இருந்தனர். அவர்கள் காலத்தில் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்த சீனயாத்ரிகரான **பாஹியான்**என்பவர் இரண்டாம் சந்திர குப்தருடைய ஆட்சியைப்பற்றி சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர்கள் திறமை வாய்ந்தவர்கள் அல்ல. கடைசியாக, ஹூணர்களின்படையெடுப்பால் குப்த சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றதைப்பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது.

குப்த மன்னர்களுடைய ஆட்சிகாலத்தை, இந்திய சரித்திரத்தின் பொற்காலம் எனக்கூறுவது வழக்கம். இதன் காரணங்களை அறிவோம். குப்தமன்னர்கள் காலத்தில் இந்து மதம் மீண்டும் புத்துயிர் பெற்றது. புராணங்களும், இதிகாசங்களும் திருத்தியமைக்கப்பட்டன. சம்ஸ்கிருத மொழி வளர்ச்சியுற்றது. இரண்டாம் சந்திரகுப்தருடைய சபையில் ஒன்பது சிறந்த கல்விமான்கள் இருந்தனர். இவர்களை **நவரத்தினங்கள்** எனக் கூறுவது வழக்கம். இவர்களுள் சிறந்தவர் **காளிதாஸர்**. இவர் ஸம்ஸ்கிருத மொழியில் பலகாவியங்களையும் நாடகங்களையும் இயற்றியுள்ளார். அவற்றுள் சிறந்தவை **சாகுந்தலம், ரகுவம்சம்** முதலியன. **அமரஸிம்மர், வராஹமிகிரர், தன்வந்திரி** முதலியவர்கள் வேறு முக்கிய

அறிஞர்களாவார்கள். மலும் குப்த மன்னர்கள் கலைகளையும் ஆதரித்தனர். உலகப்பிரசித்திபெற்ற **அஜந்தா குகை ஓவியங்**

அஜந்தா சித்திரங்கள்

கள் இவர்கள் காலத்தில் ஏற்பட்டன. அவை இன்றும் புதியன போல் காண்கின்றன. குப்தர்களின் ஆட்சிகாலத்தில் பல இந்தியர்கள் **சுமத்திரா, ஜாவா** முதலிய விடங்களில் குடியேறினர்கள். அவ்விடங்களுக்கும் தாய்நாட்டிற்கு மிடையே வாணிபம் பெருகலாயிற்று.

(iv) ஹர்ஷவர்த்தனர்

வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த, சிறப்புற்ற இந்து மன்னர் களுள் கடைசியானவர் ஹர்ஷவர்த்தனர் ஆவார். அவர் பட்டத்துக்கு வந்த விதத்தையும். ஆட்சிபுரிந்த விதத்தையும் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

குப்தர்களில் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பல ஆண்டு களுக்குப் பின், இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள

தானேஸ்வரம் என்னுமிடத்தில் **பிரபாகரவர்த்தனர்** என்பவர் ஓர் புதிய இராஜ்யத்தை ஸ்தாபித்தார். இவருக்கு **இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷவர்த்தனர்** என்ற இரண்டு குமாரர்களும், **இராஜ்யஸ்ரீ** என்ற மகளும் இருந்தனர். இராஜ்யஸ்ரீ **கன்னோசி** அரசனான **கிருஹவர்மன்** என்பவரை மணம் புரிந்திருந்தாள்.

பிரபாகரவர்த்தனர் மரணமடைந்தபின் இராஜ்ய வர்த்தனர் பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது **மாளவ** மன்னன் கிருஹவர்மனைக்கொன்று, இராஜ்யஸ்ரீயையும் கைதியாக்கிச் சென்றான். பிறகு இராஜ்யஸ்ரீ தப்பியோடி, விந்தியமலைச் சாரலிலுள்ள காடுகளில் ஒளிந்துகொண்டாள். தன் சகோதரிக்காகப் பழிவாங்குவதற்கு, இராஜ்யவர்த்தனர் ஒரு பெரும்படையுடன் மாளவத்திற்குச் சென்று, அம்மன்னனை போரில் வென்று, திரும்பினார். திரும்புங்கால், மாளவ மன்னனின் நண்பனான வங்காளமன்னன் இராஜ்ய வர்த்தனரைக்கொன்றான். ஆகவே, கி.பி.606-ம் ஆண்டில் ஹர்ஷர் மன்னரானார்.

அவர் முதன் முதலாக விந்தியமலைக்காட்டிற்குச் சென்று, தன் சகோதரியை தேடிக்கண்டு, அழைத்து வந்தார். பிறகு இவர் ஒரு பெரும்படையைத்திரட்டி, **வங்காளம், மாளவம், கூர்ஜ்ஜரம், ஒரிஸ்ஸா** முதலிய இடங்களை வென்று, வட இந்தியாவின் பெரும்பகுதியைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து சக்ரவர்த்தி எனப் பட்டம் பெற்றார். **நேபாளம், காமரூபம்,**(அஸ்ஸாம்)இந்த இராஜ்யங்களை ஆட்சி புரிந்த மன்னர்களும் இவருடைய சிறந்த நண்பர்களாக இருந்தனர். பிறகு ஹர்ஷர் தென் இந்தியாவையும் தனது ஆதிக்கத்தில் கொண்டுவருவதற்காக, **நருமதை** நதியைக் கடந்த பொழுது, தக்காணத்தில் **வாதாபியைத்** தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சாளுக்கிய மன்னரான **இரண்டாம்**



இந்தியா —ஹர்ஷரது சாம்ராஜ்யம்

புலிகேசி என்பவர் ஹர்ஷரை நருமதை நதிக்கரையில் தோற்கடித்தார். இந்நதியே இருவர்களுடைய இராஜ்யங்களுக்கும் நடு எல்லையாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஹர்ஷருடைய காலத்தில் **யுவானசுவாங்** என்ற சீனயாத்திரிகர் இந்தியாவிற்கு விஜயம் செய்தார். அவர் எழுதிவைத்துள்ள குறிப்புகளிலிருந்து, நாம் ஹர்ஷரைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்கிறோம். ஹர்ஷர் தன் தலைநகரை கன்னோசிக்கு மாற்றினார். ஆட்சியில் அவருக்கு உதவிபுரிய, மந்திரிகள் இருந்தார்கள். மழைக்காலம் தவிர, இதர காலங்களில் அவர் தனது இராஜ்யத்தில் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து குடிகளின் குறைகளை நேரில் அறிந்து, ஆவன செய்தார். வரிகள் குறைவாக விதிக்கப்பட்டன. குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். சத்திரங்கள், சாலைகள் இவைகளை அமைத்தும் குடிகளுக்கு உதவினார். குடிகள் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

ஹர்ஷர் சிறந்த கல்விமான். அவர் **இரத்னாவளி, நாகானந்தம்** முதலிய நூல்களை ஸம்ஸ்கிருத மொழியில் எழுதினார். அவர் சபையிலிருந்த **பாணர்** என்பவர் ஹர்ஷருடைய சரித்திரத்தையும் எழுதியுள்ளார். கல்வியைப் பரப்புவதற்காக, அவர் **நலாந்தா, காசி** முதலிய விடங்களில் சர்வகலா சாலைகளை ஸ்தாபித்தார். நலாந்தா சர்வகலாசாலையில் 1800 ஆசிரியர்களும் 10,000 மாணவர்களும் சேர்ந்து வசித்து, கல்வி கற்றதாகக் கூறப்படுகிறது.

ஹர்ஷர் புத்தமதத்தில் பற்றுக்கொண்டபோதிலும், ஏனைய சமயத்தவர்களிடமும் பிரியமாக இருந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர் **பிரயாகையில்** ஓர் பெரிய விழாக்கொண்டாடுவார். அதில் எல்லா சமயத்தவர்களும் சமமாகப் பங்குகொள்வார்கள். அச்சமயத்தில் பல நாட்கள் வரை ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவு இலவசமாக அளிக்கப்படும். மன்னர் தனது செல்வம் அனைத்தையும் ஏழைகளுக்குப் பங்கிடுவார். யுவான் சுவாங்கும் இவ்வாறான ஓர் கூட்டத்திற்கு விஜயம் செய்தார்.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்ற ஹர்ஷர் கி. பி. 648-ம் ஆண்டில் காலமானார். இவருடன் இவரது சாம்ராஜ்யமும் வீழ்ச்சியுற்றது. இவருக்குப்பின் இந்தியாவின் மேற்குப் பகுதியில் **இராஜபுத்திரர்கள்** என்பார் பல இராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டு ஒருவரோடொருவர் எப்பொழுதும் போரிட்டுக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, முகம்மதியர்கள் இங்கு படையெடுத்து வந்து, இவர்களை வென்று, வடஇந்தியாவில் தமது ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொண்டனர்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. மௌரியர்களின் ஆட்சி காலத்தைப்பற்றிய ஆதார நூல்கள் எவை ?
2. சந்திரகுப்த மௌரியர் எவ்வாறு மகத நாட்டின் மன்னர் ஆனார் ?
3. சந்திரகுப்தருடன் போரிட்ட கிரேக்க வீரர் யார் ? அப்போரின் விளைவுகள் யாவை ?
4. மௌரியர்களின் ஆட்சிமுறையைப்பற்றிக் கூறுக.
5. அசோகர் புத்தமதத்தை எவ்வாறு பரப்பினார் ? அவர் குடிகளுக்குச் செய்த நன்மைகள் யாவை ?
6. சமுத்திர குப்தர், இரண்டாம் சந்திர குப்தர் இவர்களைப் பற்றிக் கூறுக.
7. குப்த மன்னர்களின் ஆட்சி காலம் இந்திய சரித்திரத்தின் பொற்காலம் எனக்கூறப்படுவது எவ்வாறு பொருந்தும் ?
8. ஹர்ஷருடைய ஆட்சிமுறையை விளக்குக.
9. இந்தியா படமொன்றை வரைந்து, அதில் மௌரிய சாம்ராஜ்யத்தின் பரப்பையும், அக்காலத்திய முக்கிய நகரங்களையும் குறிப்பிடுக.
10. சரித்திர சம்பந்தமான ஓர் நிகழ்ச்சியை வகுப்பில் நடித்துக் காட்டவும். சரித்திரத்தில் பிரசித்திபெற்ற ஒருவரைப்போலவும் நடிக்கவும்.
11. கீழ்க்கண்ட காலக் கோட்டுப் படத்தைப் பூர்த்தி செய்யவும் :-

கி. மு.

327 அலெக்ஸாந்தரது படையெழுச்சி
322

300

298
279
232

200

185

100

0

கி. பி.

100

120
162

200

300

320
330
380

400

500

600

606
620
648

700 ஹர்ஷரின் மரணம்

5. தென் இந்தியாவில் ஆட்சிபுரிந்த இந்துப் பேரரசர்கள்

முன் பாடத்தில், வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த பேரரசர்களைப் பற்றிப் படித்தீர்கள். இப்பாடத்தில் தென் இந்தியாவில் ஆட்சி புரிந்த பேரரசர்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

விந்திய மலைக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடையிலுள்ள பீடபூமிப் பிரதேசம் **தக்காணம்** அல்லது **தக்ஷிணம்** எனப்படும். இதன் கிழக்குப் பகுதியில் கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கு இடையில் முற்காலத்தில் **ஆந்திரர்களின்** இராஜ்யம் இருந்தது. இதற்குத் தெற்கில் முறையே **பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள்** ஆகியோர் தங்களது இராஜ்யங்களை ஸ்தாபித்திருந்தனர். இப்பொழுது இந்த இராஜ்யங்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

(i) ஆந்திர ராஜ்யம்

இந்த இராஜ்யம் கோதாவரி கிருஷ்ணா நதிகளுக்கு இடையே, தக்ஷிணப் பீடபூமியின் கிழக்குப்பகுதியில் அமைந்திருந்தது என அறிந்தீர்கள் அல்லவா? இவர்களுடைய தலைநகர் ஸ்ரீ **காகுளம்.** இங்கு ஆட்சிபுரிந்த முதல் முக்கிய பரம்பரையினர் **சாதவாகனர்கள்** எனப்படுவார்கள். சுமார் கி.மு. 500-ம் நூற்றுண்டில் ஆந்திரர்கள் வலிமை பெற்றிருந்தார்கள். பிறகு வட இந்தியாவில், மௌரிய சாம்ராஜ்யம் உன்னத நிலையில் இருக்கையில், ஆந்திர இராஜ்யமும், மௌரிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அசோகருக்குப்பின் ஆந்திரர்கள் சுயேச்சை பெற்றனர். அக்காலத்தில் அரசு புரிந்த மன்னர்களுள் கீர்த்திபெற்றவர் **கௌதமி புத்திரசாதகரணி** என்பவர். சுமார் கி. பி. 225-ம் ஆண்டில் ஆந்திர சாம்ராஜ்யம் வீழ்ச்சி யடைந்தது.

ஆந்திர மன்னர்கள் கட்டிடக் கலையை மிகவும் அபி விருத்தி செய்தனர். இவர்கள் பல குகைக் கோயில்களைக்



தென் இந்திய இராஜ்யங்கள்

கட்டினார்கள். இவர்கள் இந்து மதத்தைப் பின்பற்றி யிருந்தனர். எனினும், ஹர்ஷரைப் போல, எல்லா சமயத்தவர்களிடமும் சகிப்புத் தன்மை காட்டினார்கள். இவர்கள் கைத்தொழில், வாணிபம் இவற்றிற்குப் பேராதரவு அளித்ததால், நாட்டின் செல்வநிலை அபிவிருத்தி அடைந்திருந்தது.

(ii) பல்லவ இராஜ்யம்

ஆந்திரர்களது ஆதிக்கம் வீழ்ச்சியுற்ற பின் அவர்களது இராஜ்யத்திற்குத் தெற்கில் மற்றொரு புதிய இராஜ்யம் தோன்றியது. இதைத் தோற்றுவித்தவர்கள் **பல்லவர்கள்** எனப்படுவார்கள். இவர்கள் வெளியேயிருந்து இங்கு வந்து குடியேறினார்களென்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர்

இவர்கள் இந்தியாவிலேயே வசித்து வந்தவர்களெனக் கருது கின்றனர். இவர்களது ஆதிக்கம் கி. பி. நாலாம் நூற்ருண்டு முதல் சுமார் எட்டாம் நூற்ருண்டு வரை நிலேத்திருந்தது.



மகாபலிபுரத்து குகைச் சிற்பங்கள்

இவர்களுடைய இராஜ்யம் கிருஷ்ண நதி முதல் காவிரி நதி வரை பரவியிருந்தது.

பல்லவ மன்னர்களுள் முதல் முக்கியமானவர் **சிம்ம விஷ்ணு** என்பவர். இவர் காஞ்சீபுரத்தைத் தலேநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். மேலும் இவர் சேரர்களேயும், பாண்டியர்களேயும் போரில் வென்று, தனது இராஜ்யத்தை விஸ்தரித்தார். இவரது ஆட்சி காலம் ஆரும் நூற்ருண்டின் இறுதியாகும்.

சிம்ம விஷ்ணுவிற்குப் பின் பட்டத்துக்கு வந்தவர் அவருடைய குமாரரான **மஹேந்திர வர்மன்** என்பவர். இவரது ஆட்சி காலம் 600 முதல் 630 வரை ஆகும். இவர் முதலில் சமண மதத்தைத் தழுவி யிருந்தபோதிலும், பிறகு சைவப் பெரியார்களில் ஒருவரான **அப்பர் சுவாமி**களின் முயற்சியால் மீண்டும் சைவ மதத்தைத் தழுவினர். இவர் **மஹேந்திரவாடி** என்ற ஊரை அமைத்தார். நீர்ப்பாசனத்திற்காக குளங்கள் கால்வாய்கள் ஆகியவற்றை அமைத்தார். ஆங்காங்கு பல கோயில்களையும் கட்டினர். இவர் சோழர்களையும் வென்று, திரிச்சிராப்பள்ளியையும் தனது இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். சாளுக்கிய மன்னரான **இரண்டாம் புலிகேசி** மஹேந்திர வர்மனைத் தோற்கடித்து, அவரிடமிருந்து **வெங்கி** நாட்டைக் கைப்பற்றினர்.



மஹாபலிபுரம் கல் ரதங்கள்

மஹேந்திர வர்மனுக்குப் பின் அவரது குமாரரான **நரசிம்ம வர்மன்** பட்டத்துக்கு வந்தார். பல்லவ மன்னர்களுள் மிகக் கீர்த்தி பெற்றவர் இவரே. இவர் சிறந்த போர் வீரர்

தன் தந்தையாருக்கு ஏற்பட்ட இழுக்கைப் போக்குவதற்காக இரண்டாம் புலிகேசியின் இராஜ்யத்தின் மீது படையெடுத்துச் சென்று, அவரைக் கொன்று, அவரது தலைநகராகிய **வாதாபி**யைத் தீயிட்டுக் கொளுத்தினர். இவர் மல்யுத்தத்தில்



மஹாபலிபுரம் கடற்கோயில்

சிறப்புற்றிருந்ததால் **மாமல்லர்** என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். இவரும் கலைகளை வெகுவாக ஆதரித்தார். கடற் கரையில் கற்கோயில்களை அமைத்து, அவற்றில் சித்திரங்களைச் செதுக்குவித்தார். இவ்விடத்திற்கு அவரது பெயரையொட்டி, **மாமல்லபுரம்** என்று பெயர் கொடுக்கப்பட்டது. இதுவே இப்பொழுது **மஹாபலிபுரம்** என அழைக்கப் படுகின்றது. இந்நகரம் பல்லவர்களின் சிறந்த துறைமுகமாக விளங்கியது.

நரசிம்ம வர்மன் பல முறை சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் இவர்களைத் தோற்கடித்தார்.

மாமல்லருக்குப் பின் வந்த பல்லவ மன்னர்கள் திறமை யற்றவர்கள். ஆகவே, அவர் இறந்த, சுமார் இருநூறு

ஆண்டுகளுக்குப் பின் பல்லவ இராஜ்யம் சோழர்களால் கைப்பற்றப்பட்டது.

பல்லவ மன்னர்கள் கலைகளைப் போற்றி வளர்த்தனர். மாமல்லபுரம் அமைக்கப்பட்டதைப் பற்றி அறிந்தீர்கள். திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் முதலிய இடங்களில் குகைக் கோயில்களும் அமைக்கப்பட்டன. நீர்ப்பாசனத்துக்காகப் பல குளங்களும் ஏரிகளும் வெட்டப்பட்டன. கல்வியும் விருத்தி பெற்றது. **சம்பந்தர், அப்பர்** போன்ற சைவப் பெரியார்களும், **திருமங்கையாழ்வார்** போன்ற வைஷ்ணவ ஆழ்வார்களும் இக்காலத்தில் வசித்து வந்தனர்.

(iii) சோழ இராஜ்யம்

பல்லவ இராஜ்யத்திற்குத் தெற்கில் சோழ இராஜ்யம் இருந்தது. இதில் தற்காலத்திய **திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென் ஆற்காடு** முதலிய ஜில்லாக்கள் அடங்கி யிருந்தன. முதல் முதலாக சோழர்களின் தலைநகரம், காவிரி நதிக் கருகில், திருச்சிராப்பள்ளியை யொட்டிய **உறையூர்** ஆகும். பிறகு, காவிரி நதியின் முகத்துவாரத்துக்கு அருகிலுள்ள **காவிரிப்பூம் பட்டினம்** அல்லது **புகார்** என்பதாகும். பின்னர் அந்நகரம் கடல்கொண்டு விட்டபடியால், பிந்திய சோழ மன்னர்கள் காலத்தில் **தஞ்சாவூர் தலைநகராக** விளங்கியது.

முதலாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முக்கிய சோழ மன்னர் **கரிகாலர்** என்பவர். இவர் சிறு வயதாயிருக்கையில் இவரது தாயத்தவர்கள் இவரைக் கொல்லக் கருதி, இவர் இருந்த வீட்டிற்குத் தீயிட்டனர். இவர் தப்பிச் செல்லுகையில் இவரது கால் வெந்து, எப்பொழுதும் கருப்பாகவே இருந்ததால், இவருக்குக் கரிகாலர் என்ற பெயர் ஏற்பட்டது. இவர் சிறந்த போர்வீரர். இவர் **சேரர்களையும், பாண்டியர்களையும்**

போரில் முறியடித்தார். இவர் இலங்கை மன்னரையும் தோற்கடித்து, அந் நாட்டிலிருந்து ஏராளமான கைதிகளைக் கொண்டு வந்தார். அவர்களின் உதவியைக் கொண்டு காவிரி

பிருஹதீசுவரர் ஆலயம்

நதியின் இருபுறங்களிலும் வழிநெடுக உயரமான கரைகளை அமைத்து, வெள்ளப் பெருக்கால் நஷ்டம் ஏற்படுவதைத்

தவிர்த்தார். மேலும், இவர் தன் நாடுகளின் வாணிபத்தையும் அபிவிருத்தி செய்தார்.

கரிகாலருக்குப் பின் வந்த சோழமன்னர்கள் திறமையற்றவர்களாதலால் அவர்களின் இராஜ்யம் பல்லவர்களால் கைப்பற்றப்பட்டது.

கி. பி. பத்தாம் நூற்றுண்டில், பல்லவர்களின் ஆதிக்கம் குன்றியதும், சோழர்கள் மீண்டும் தலைதூக்கி, தஞ்சாவூரினின்றும் ஆட்சிபுரிய ஆரம்பித்தனர். அவர்களுள் முதலாவதாக ஆட்சி புரிந்தவர் **விஜயாலய சோழர்.**

பிந்திய சோழ மன்னர்களுள் கீர்த்திபெற்றவர் **இராஜராஜசோழர்.** இவர் கி.பி. 985-ல் பட்டத்துக்கு வந்தார். இவர் சிறந்த போர்த் திறன் உடையவர். இவர் தனது பெரும் படையின் உதவியைக் கொண்டு **சேரர்களை**யும், **பாண்டியர்களை**யும் வென்றதுடன், **மைசூர்**, குடகு, **கலிங்கம், சாளுக்கிய நாடு** இவற்றையும் கைப்பற்றித் தன்னுடைய நாட்டில் சேர்த்துக் கொண்டார். இவ்வாறு இவரது இராஜ்யம் தற்காலத்திய சென்னை, ஆந்திரா இராஜ்யங்கள் முழுவதும் பரவி யிருந்தது. மேலும், இவரிடம் ஓர் கப்பற்படை இருந்தது. அதன் உதவியைக் கொண்டு, **இலங்கை, இலட்சத்தீவுகள்** ஆகியவற்றையும் கைப்பற்றினர். காவிரி நதியின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கி பாசனத்துக்கு உதவும்படி செய்தார். இவர் சைவ மதத்தில் மிகுந்த பற்று உடையவராயினும், பிற சமயங்களை வெறுக்கவில்லை. இவர் தஞ்சாவூரிலே **பிருஹதீசுவரர்** ஆலயம் என்ற சிறந்த ஆலயத்தைக் கட்டுவித்தார். நாகப்பட்டினத்தில் ஓர் புத்தர் கோயிலையும் அமைத்தார்.

இராஜராஜர் கி. பி. 1013-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

இராஜராஜருக்குப் பின் அவரது பிரசித்திப்பெற்ற குமாரராகிய **இராஜேந்திரர்** பட்டம் பெற்ருர். தன் தந்தையைப்

போலவே, இவரும் போர்த்திறன் உள்ளவர். இவர் கங்கை நதிக்கரை வரை படையெடுத்துச் சென்று, வழியிலுள்ள நாடுகளை எல்லாம் வென்றார். இதன் அடையாளமாக அவர் **கங்கை கொண்ட சோழர்** என்ற சிறப்புப் பெயரும் பெற்றார். தன் வெற்றியின் ஞாபகார்த்தமாக இவர் **கங்கை கொண்ட சோழபுரம்** என்னும் நகரையும் நிருமாணித்து, அங்கு ஓர் கோயில், குளம் இவற்றை அமைத்தார். இவரிடம் ஓர் பெரும் கப்பற்படை இருந்தது. அதன் உதவியைக் கொண்டு இவர் வங்காள விரிகுடாவைக் கடந்து, **அந்தமான், நிக்கோபார் தீவுகள், பர்மாவின் ஓர் பகுதி, கிழக்கிந்தியத் தீவு** களில் சில, ஆகியவற்றைக் கைப்பற்றினர். தனது மகளைக் கீழை சாளுக்கிய இளவரசருக்கு மணம் செய்வித்தார்.

சோழ மன்னர்களின் ஆட்சி மிகவும் சிறப்புற்றிருந்தது. அவர்கள் தம் இராஜ்யத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்திருந் தனர். ஆட்சி முறைக்கு அடிப்படையாக இருந்தது கிராமமே. கிராமங்கள் தோறும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப் பட்டு அவற்றிற்கு சர்வ அதிகாரங்களும் அளிக்கப்பட் டிருந்தன.

சோழர்கள் கலைப்பிரியர்கள். இவர்கள் பல கோயில் களைக் கட்டி, அவற்றின் மதில் சுவர்களில் தமது வெற்றிகளை யும் இதர செயல்களையும் பற்றிய விபரங்களைச் செதுக்குவித் தார்கள். இவர்கள் பல கல்விமான்களையும் ஆதரித்தனர். **ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி** முதலிய மாபெரும் தமிழ்ப் புலவர்கள் இவர்களது ஆதரவு பெற்றிருந்தனர். இக் காலத்தில் இயற்றப்பட்டசிறந்த நூல்கள் **கம்பஇராமாயணம், கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம்** ஆகியவை.

(iv) பாண்டிய இராஜ்யம்

சோழ நாட்டிற்குத் தெற்கில், தற்காலத்திய **மதுரை, இராமனுதபுரம் திருநெல்வேலி** ஜில்லாக்கள் அடங்கிய பகுதி, முற்காலத்தில் பாண்டிய நாடு என வழங்கி வந்தது. பாண்டிய மன்னர்களின் தலைநகரம் **மதுரை**. அவர்களது துறைமுகம் **கொற்கை**. பாண்டிய மன்னர்கள் ஐரோப்பாவி லுள்ள **உரோமாபுரியு**டனும் வாணிபம் செய்தார்கள் என் பதைக் காட்ட, அக்காலத்திய உரோமாபுரி நாணயங்களில் பல இப்பொழுது பாண்டிய நாட்டில் கண்டெடுக்கப்பட்டிருக்கின் றன.

பாண்டிய மன்னர்களில் முக்கியமான முதல் அரசர் **நெடுஞ்செழியன்** என்பவர். இவர் ஒரு சிறந்த போர் வீரர். நீங்கள் சிலப்பதிகாரக் கதையை அறிவீர்களன்றோ? அக் கதையில் கோவலனைக் கள்வன் எனக் கருதி அவனுக்கு மரண தண்டனை விதித்தவர் நெடுஞ்செழியனே. பின்பு கண்ணகியால் தன் தவறை யுணர்ந்த இவர் தன் சிம்மாச னத்திலிருந்தபடியே கீழே விழுந்து உயிர் துறந்தார். இவ ருக்குப் பின் வந்த முக்கிய அரசன் **நெடுமாறன்** என்பவர். இவர் முதன்முதலில் சமண மதத்தைத் தழுவி, **கூன்பாண்டி யன்** என்ற பெயரைப் பெற்றிருந்தார். இவரது மனைவியும், மந்திரியும், சைவப்பெரியாரான **ஞானசம்பந்தரை** மதுரைக்கு அழைத்து வந்து, அவரது உதவியால், மன்னரை சைவ மதத்தைத் தழுவச் செய்தனர். இதன் பின்பு மதுரையில் சமணர்களின் செல்வாக்கு குன்றியது.

பிற்காலத்தில் மதுரை விஜயநகர மன்னர்களின் ஆதிக் கத்தின் கீழ் வந்தது. விஜய நகர சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பின்னர், மதுரையில் அரசு புரிந்த **நாயக்க மன்னர்கள்** என் னும் சிற்றரசர்கள் சுயேச்சை பெற்று ஆட்சி புரிந்தனர். இவர்களுள் சிறந்தவர்கள் **திருமலை நாயக்கர், இராணி மங்**

கம்மாள் ஆகியவர்கள். இவர்கள் பல அழகிய கட்டிடங்களைக் கட்டுவித்தனர். அவற்றுள் முக்கியமானவை **மஹால், புது மண்டபம்** ஆகியவை.



மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

பாண்டிய மன்னர்கள் வாணிபம், கலை, கல்வி இவற்றைப் பெரிதும் ஆதரித்தனர். இவர்களது கடல் கடந்த வாணிபத்தைப் பற்றி முன்பு கூறப்பட்டது. மேலே கூறிய கட்டிடங்களைத் தவிர, பிரசித்திப் பெற்ற **மீனாட்சி அம்மன் கோயிலும்** பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது.

பாண்டியர்கள் தமிழ் மொழியைப் பெரிதும் ஆதரித்தனர். கீர்த்தி பெற்ற தமிழ்ச் சங்கம் மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தமிழ்ப் புலவர்களாகிய **ஔவை, திருவள்ளுவர்** முதலியவர்கள் பாண்டிய மன்னர்களின் ஆதரவு பெற்றனர். பல சிறந்த நூல்களும் வெளியிடப்பட்டன.

(v) சேர இராஜ்யம்

சேர இராஜ்யம் தென் இந்தியாவின் மேற்குப் பகுதியில் இருந்தது. இதில், தற்காலத்திய **மலையாளம், கோயம்பத்தூர், சேலம்** ஜில்லாக்களும், **திருவாங்கூர், கொச்சி** இராஜ்யங்களும் அடங்கியிருந்தன. சேர மன்னர்களின் தலைநகர் **வஞ்சி.** அவர்களது துறைமுகம் **முசிறி.** பாண்டியர்களைப் போலவே, சேரர்களும் கடல் கடந்து இதரநாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர்.

சேரமன்னர்களுள் கீர்த்தி பெற்றவர் **சேரன் செங்குட்டுவன்** என்பவர். இவர் பாண்டியர்களை வென்றார். மேலும் இவர் இமயமலை வரை படையெடுத்துச் சென்று வழியிலுள்ள எல்லா மன்னர்களையும் தோற்கடித்தார். இவர் இமயமலையிலிருந்து கற்கள் கொண்டுவந்து, பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயிலை அமைத்து, அவளது சிலையையும் அதில் வைத்தார்.

சேர மன்னர்கள் தமிழ் மொழியைப் பெரிதும் ஆதரித்தார்கள். செங்குட்டுவனின் சகோதரன் இளங்கோவடிகள். **சிலப்பதிகார** நூலை இயற்றினார். **சாத்தனார், பரணர், கபிலர்** முதலிய தமிழ்ப் பெரும்புலவர்கள் இவர்களின் ஆதரவு பெற்றனர்.

சேரமன்னர்கள் நீதிவழுவா ஆட்சியை அமைத்தனர். அந்நாட்டுப் பெண்டிரும் தீரம் வாய்ந்தவர்கள்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. ஆந்திரர்களைப் பற்றிக் குறிப்பு வரைக.
2. நரசிம்மவர்மனது வெற்றிகள் யாவை?
3. பல்லவர்கள் நாட்டுக்குச் செய்த தொண்டு யாது?
4. இராஜராஜர், இராஜேந்திரர் இவர்களைப்பற்றிக் கூறுக.
5. நெடுமாறனைப் பற்றிக் குறிப்பு வரைக
6. சேரமன்னர்கள் காலத்திய சில புலவர்களின் பெயர்களைக் கூறுக.
7. தென் இந்தியா படத்தில் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள இராஜ்யங்கள், தலைநகரங்கள், துறைமுகங்கள் இவற்றைக் குறிப்பிடுக.

6. நம் நாட்டிற்கு வந்த இதர நாட்டுப் பார்வையாளர்கள்

ஆதிகாலந்தொட்டு, பலவகைகளில் நம் நாடு சிறப்புற்றிருந்ததன் காரணமாக, அவ்வப்பொழுது பல்வேறு நாட்டினர் பல்வேறு நோக்கங்களுடன் இங்கு விஜயம் செய்தார்கள். தங்களுடைய இதர அலுவல்களுக்கு இடையே இவர்கள் தாங்கள் இந்நாட்டில் கண்ட, கேட்டவைகளைப் பற்றிக் குறிப்புகள் எழுதியுள்ளார்கள். அக்காலத்திய நாட்டின் நிலையை அறிந்து கொள்ள இக்குறிப்புகள் நமக்கு ஓரளவு உதவியாயிருக்கின்றன.

அவர்களில் மூவரான **செயின்ட் தாமஸ், பாஹியான், யுவான்சுவாங்** இவர்களைப் பற்றி இப்பொழுது அறிந்து கொள்வோம்.

செயிண்ட் தாமஸ்: இயேசு கிறிஸ்து மஹான் கிறிஸ்தவ மதத்தைப் போதித்தார் அன்றோ ? அவருக்குப் பன்னிரண்டு சீடர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவரான

செயிண்ட்தாமஸ் என்பவர் கிறிஸ்தவ மதத்தை நம் நாட்டில் பரப்புவதற்காக, கி. பி. 46-ம் ஆண்டில் இங்கு வந்தார். அக்காலத்தில் இந்தியாவின் வடமேற்கில், தக்ஷசீலத்தில்

இயேசு கிறிஸ்து

கோண்டாபர்னிஸ் என்னும் மன்னர் ஆட்சிபுரிந்தார். செயிண்ட் தாமஸ் முதன்முதலாக அவரது சபைக்கு வந்ததாக ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனல் வேறு சிலர் அவர் முதலில் மலையாளக் கரைக்கு வந்து, அங்கு மதப்பிரசாரம் செய்து பலரைக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவும்படி செய்ததாகக் கூறுகின்றனர். பிறகு அவர் தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைக்கு வந்து சென்னைக்கருகில் சில

காலம் வசித்திருந்து, மதப்பிரசாரம் செய்தார். அதை விரும்பாத சிலர் அவரைக் குத்திக்கொன்றனர். மைலாப்பூருக்கு சமீபத்திலுள்ள **ஸான்தோம்** இவரது ஞாபகார்த்தமாக அப்பெயரைப் பெற்றது. இவருடைய சவத்தை ஓர் குன்றின்மீது அடக்கம்செய்து, அங்கு ஓர் மாதா கோயிலையும் கட்டினார்கள். அந்த இடம் இப்பொழுது அவருடைய பெயரையொட்டி, **செயிண்ட்தாமஸ் மௌண்ட்** (பரங்கிமலை) என அழைக்கப்படுகின்றது.

சீன யாத்திரிகர்கள்:—இந்தியாவில் புத்தமதம் தோன்றியது. பின்பு அசோகர், கனிஷ்கர் ஆகிய மன்னர்களின் ஆதரவால் அம்மதம் வெளிநாடுகளிலும் பரவியது என அறிந்தீர்கள். அவ்வாறான நாடுகளில் சீனாவும் ஒன்று. ஆகையால் சீனாவிலிருந்து பல பௌத்த சமயத்தினர் நம் நாட்டுக்கு வந்தனர். அவர்களுடைய முக்கிய நோக்கமானது புத்த புனித ஸ்தலங்களைத் தரிசிப்பது, புத்த நூல்கள், சின்னங்கள் இவற்றைத் தம் நாட்டிற்கு எடுத்துச் செல்வது ஆகும். இவர்களது வருகை நம்நாட்டுச் சரித்திர சம்பந்தமாக எவ்வாறு முக்கியமானது என்பது முன்பு கூறப்பட்டது. இவர்களுள் முக்கியமான இருவர்களைப் பற்றி அறியலாம்.

பாஹியன் :—இவர் இரண்டாம் சந்திரகுப்தர் அல்லது விக்கிரமாதித்தியர் காலத்தில், சீனாவிலிருந்து புறப்பட்டு, **மங்கோலியா, துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம்** ஆகிய நாடுகளின் வழியே இந்தியாவிற்கு வந்து ஆறு ஆண்டுகள் தங்கினார். அவற்றுள் மூன்று ஆண்டுகளைப் பாடலிபுத்திரத்திலேயே கழித்தார். இவர் அங்கு பல நூல்களைக் கற்றதுமன்றி, சிலவற்றைச் சீனமொழியில், மொழி பெயர்த்தார். இவருடைய குறிப்புகளினின்றும் நாம் குப்தர்களின் ஆட்சியைப்பற்றி அறிவதாவது: இந்து மதம் சீர்பெற்றிருப்பினும்.

புத்தமத மும் பலரால் பின்பற்றப்பட்டது. சாலைகளில் திருடர் கள் பயம் கிடையாது. வாணிபம் தழைத்தோங்கியது. மக்கள் நன்னடக்கை உள்ளவர்களாகவும், சந்தோஷமாக வும் வாழ்ந்து வந்தனர். அரசாங்கமும், பொது மக்களும் தருமம் செய்வதில் போட்டியிட்டனர். அக்காலத்தில் பல நூல்களும் இயற்றப்பட்டன. சில புத்தக்ஷேத்திரங்கள் க்ஷீணித்திருந்தன.

யுவான் சுவாங்—இந்தியாவிற்கு வந்த சீனயாத்திரிகர் களில் இவர் மிகவும் முக்கியமானவர். இவரும் ஆப்கானிஸ் தானத்தின் வழியாகவே, கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற் பகுதியில் நம் நாட்டுக்கு வந்து, இங்கு சுமார் பதிமூன்று ஆண்டுகள் தங்கி, பலநூல்களையும், புத்தசின்னங்கள், சிலைகள் இவற்றையும் சேகரித்தார். இவர் இங்கு வந்த சமயம், வட இந்தியாவில் ஹர்ஷர் ஆட்சிபுரிந்தார். அவர் யுவான் சுவாங்கை நன்கு வரவேற்று ஆதரித்தார். **பிரயாகை** யில் ஹர்ஷர் கூட்டுவிக்கும் கூட்டங்கள் ஒன்றிலும் இவர் விஜயம் செய்திருந்தார். மேலும் இவர் **கன்னோசி, காஷ்மீரம், நலாந்தா** முதலிய விடங்களையும் பார்வை யிட்டார். பிறகு இவர் **இரண்டாம் புலிகேசி, நரசிம்மவர்மன்** முதலிய மன்னவர்களின் சபைக்கும் விஜயம் செய்து, அவர் களைப்பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும் இவ ருடைய குறிப்புகளினின்றும், ஹர்ஷரது ஆட்சியைப்பற்றி விபரமாக அறிகின்றோம். அக்காலத்தில் மக்களும் பரிசுத்த மாகவும், ஆடம்பரமற்றும் வாழ்க்கையை நடத்தி வந்ததாக அறிகின்றோம். இறுதியாக, இவர் மத்திய ஆசியாவின் வழியே தன் நாட்டிற்குத் திரும்பினார்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. செயிண்ட் தாமஸ் நாட்டில் எங்கெங்கு மதப்பிரசாரம் செய்தார்?
2. சென்னையில் அவரது ஞாபகச் சின்னங்கள் எவை ?

3. சீன யாத்திரிகர்கள் நம் நாட்டுக்கு வந்த நோக்கமென்ன? அவர்களது வருகை நமக்கு எவ்வாறு முக்கியமானது?
4. பாஹியான், யுவான்சுவாங் இவர்கள் எழுதியுள்ள குறிப்புகள் யாவை?

7. நம் நாட்டின்மீது படையெடுத்துவந்த அன்னிய நாட்டினர் (தொடர்ச்சி)

கஜினி முகம்மது :—அராபியர்கள் சிந்து நாட்டின்மீது படையெடுத்து வந்து, அதைக் கைப்பற்றி, சிறிது காலம் ஆண்டதைப்பற்றி, முன்னொரு பாடத்தில் அறிந்து கொண்டீர்கள். இதன்பின் கி. பி. பத்தாம் நூற்றாண்டில், இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானத்தில் **கஜினி** என்னுமிடத்தில் **ஆல்ப்டிஜின்** என்பவர் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபித்தார். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் சுல்தான் **முகம்மது** என்பவர் கஜினியை ஆண்டார், இவரே பிரசித்தி பெற்ற **கஜினிமுகம்மது** என்பவராகும்.

முகம்மது வீர தீரமுள்ளவர். சிறு வயதிலேயே அவர் இந்தியாவின் அளவற்ற செல்வத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தார். அச்செல்வத்தை வாரி வந்து, மத்திய ஆசியாவில் ஓர் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினார். ஆகவே பட்டத்துக்கு வந்தபின் இவர் சுமார் பதினேழு முறை நம் நாட்டின்மீது படையெடுத்து வந்ததாகக் கூறப்படுகின்றது. முதன்முதலில் இவர் பஞ்சாபைத்தாக்கி, அங்கு ஆட்சிபுரிந்த **ஜெயபால்** என்பவரைக் தோற்கடித்தார். அவர் அவமானம் தாளாது உயிர் துறந்தார். பிறகு அவரது குமாரனான **அனங்கபால்** என்பவரும் தோல்வியுற்றார். இதன் பிறகு பஞ்சாப் **முகம்மது வசம் ஆயிற்று.** இதர படையெடுப்புகளில் இவர்

வடமதுரை, நாகர்கோட்டை, குவாலியர்,கங்கரா, கலஞ்சர்

கஜினி முகம்மது

முதலிய விடங்களையும் தாக்கி அவ்விடங்களினின்றும் ஏராள மான பொருள்களை எடுத்துச் சென்ருர். இவர் தாக்கிய விடங் களில் முக்கியமானது **சோமநாத புரம்** ஆலயமாகும். இது கத்தி யவார் தீபகற்பத்தின் தென் கோடியிலுள்ளது. முகம்மது வெகு பிரயாசையுடன் தார் பாலை வனத்தைக் கடந்து திடீரென அவ்வாலயத்தைத் தாக்கித் தகர்த்து, ஏராளமான பொன்னும், மணியும் எடுத்துச் சென்ருர்.

நம் நாடு சுதந்திரம் பெற்றபின், காலஞ்சென்ற **சர்தார் படேல்** அவர்களின் முயற்சியால் இந்த ஆலயம் புதுப்பிக்கப் பட்டுவருகின்றது.

முகம்மது. கலை, கல்வி இவற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவர் இந்தியாவினின்றும் எடுத்துச் சென்ற பொருள்களின் உதவியைக் கொண்டு, தன் தலைநகராகிய கஜினியை அழகு படுத்தினுர். அங்கு பல அரண்மனைகள், பூங்காக்கள், பொருட்காட்சிசாலைகள், மசூதிகள் இவற்றைக் கட்டுவித்தார். **ஆல்பருனி** என்ற வான சாஸ்திரியும், **பர்தௌஸி** என்ற பாரசீகக் கவியும் இவருடைய ஆதரவு பெற்றனர். பர்தௌஸி இயற்றிய **ஷாநாமா** என்னும் நூல் சரித்திரப்புகழ் பெற்றது.

முகம்மது கி. பி. 1030-ல் மரணமடைந்தார். அதன் பிறகு அவரது சாம்ராஜ்யமும் வீழ்ச்சியுற்றது.

கோரி முகம்மது:—கஜினி இராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின், ஆப்கானிஸ்தானத்தில் கோரி சாம்ராஜ்யம் தலை தூக்கியது. அங்கு ஆட்சிபுரிந்த மன்னர்களுள் சிறந்தவர் **கோரி முகம்மது** ஆவார். கஜினி முகம்மதுவைப் போலவே இவரும் இந்தியாவின் மீது, படையெடுக்க விரும்பினார். ஆனால் அவரைப் போலன்றி, இவர் இங்கு ஓர் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினார். அக்காலத்தில் வட இந்தியாவில் பல இராஜபுத்திர மன்னர்கள் சிறு சிறு இராஜ்யங்களை ஆண்டு வந்தனர். அவர்கள் ஒற்றுமையின்றி எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர். இச்சூழ்நிலை கோரி முகம்மதுவுக்கு மிக அநுகூலமாக இருந்தது.

கோரிமுகம்மது

அக்காலத்தில் வட இந்தியாவிலிருந்த மன்னர்களுள் முக்கியமானவர்கள், **டில்லி**, **ஆஜ்மீர்** இராஜ்யங்களை ஆண்ட **பிருதிவிராஜரும்**, **கன்னோசியை** ஆண்ட **ஜெய சந்திரரும்** ஆவார்கள். இவர்கள் உறவினர்களாக இருந்தும், இவர்களிடையே கொடிய விரோதம் இருந்தது. ஜெயச்சந்திரர் தனது மகளான **சம்யுக்தைக்குச்** சுயம்வரம் ஏற்பாடு செய்ததையும், பிருதிவி இராஜர் அவளைத் தூக்கிச் சென்றதையும் பற்றிய கதையை அறிவீர்கள் அல்லவா ? இதனால் கடுங் கோபமும் அவமானமும் உற்ற ஜயச்சந்திரர் பிருதிவியை ஒழிக்க முகம்மது கோரியின் உதவியை நாடினார். முகம்மது 1191-ம் ஆண்டில் இங்கு படையெடுத்து வந்து, **தானேஸ்**

வரம் என்னுமிடத்தில் பிருதிவி மன்னரால் தோற்கடிக்கப் பட்டு, நாடு திரும்பினர். ஆனல் அவர் அடுத்த ஆண்டி லேயே மிகப்பெரும்படையைத் திரட்டி வந்து, அதே தானேஸ் வரத்தில் பிருதிவி இராஜரைத் தோற்கடித்துக் கொன்றர். டில்லி, ஆஜ்மீர் இராஜ்யங்கள் முகம்மது வசம் ஆயின. அடுத்த முறை அவர் கன்னேசியையும் தாக்கி, கைப்பற்றி ஞர். இவ்வாறு இராஜபுத்திரர்களின் ஒற்றுமையின்மையே முகமதியர்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. பிறகு முகம்மது வட இந்தியாவில் மேலும் சில விடங்களைக் கைப் பற்றினர். இந்த இராஜ்யங்களை எல்லாம் தன் பெயரால் ஆளும்படி இவர் தனது அடிமையும் தளகர்த்தரில் ஒருவரு மான **குத்புத்தீன்** என்பவரை டில்லியில் நியமித்து விட்டு, தன் நாடு திரும்பினர். வழியில் இவர் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டவுடன், குத்புத்தீன் சுயேச்சைப் பெற்று, தனது வமிசத்தை டில்லியில் ஸ்தாபித்தார். இவரும் இவருக் குப்பின் வந்தவர்களில் சிலரும், தங்களுடைய சிறுவயதில் அடிமைகளாக இருந்தமையால், இவ்வமிசத்திற்கு **அடிமை வமிசம்** எனப்பெயர்.

இவ்வாறு டில்லியில் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி துவங்கியது.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. கஜினி முகம்மது, கோரிமுகம்மது இவர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த நோக்கங்கள் எவ்வாறு மாறுபட்டவை ?
2. கஜினி முகம்மதுவின் குணதிசயங்கள் யாவை?
3. கோரிமுகம்மதுவின் படையெடுப்பு வெற்றி பெறக் காரண மென்ன?
4. டில்லியில் முஸ்லிம்மன்னர்களின் ஆட்சி எவ்வாறு ஏற்பட்டது.
5. நீ கஜினிமுகம்மதுவின் போர்வீரர்களுள் ஒருவரெனக் கருதி அக்காலததில் நீ கண்டிருக்கக் கூடிய இந்தியாவைப் பற்றிக் கூறுக.

8. நம் நாட்டை ஆண்ட முக்கிய முஸ்லீம் மன்னர்கள்

டில்லியில் குத்புத்தீன் என்பவர் அடிமை வமிசத்தை ஸ்தாபித்ததைப்பற்றி, முன் பாடத்தில் அறிந்தீர்கள். இவர் டில்லியில் **குதுப்மினுர்** என்னும் மிக உயரமான ஸ்தூபியைக் கட்டினுர். இது இன்றும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

பால்பன்: அடிமை அரசர்களுள் மிகச் சிறந்தவர் **பால்பன்.** இவர் 1266-ம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். அதற்குமுன் சுமார் இருபது ஆண்டுகள் அமைச்சராயிருந்து, நிர்வாக முறைகளை நன்கு அறிந்திருந்தார். சிறு வயதில் இவர் ஒரு அடிமையாக இருந்து, தனது முயற்சியாலேயே இப்பதவியை அடைந்தார்.

இவர் காலத்தில மங்கோலியர்கள் வடமேற்கிலிருந்து, இந்தியாவை அடிக்கடி தாக்கிக் கொள்ளையிட்டனர். பால்பன் அவர்களைத் தோற்கடித்துவிட்டு, மேலும் அவர்களின் படையெடுப்புகளைத் தவிர்க்க, எல்லைப் புறத்தில் பல கோட்டைகளைக் கட்டினுர். குற்றம், கலகம் இவற்றைச் செய்தவர்கள். எவராயிருப்பினும் அவர்களுக்கு இவர் கடுந்தண்டனை விதித்தார். குடிமக்களுக்குப் பல வகைகளிலும் நன்மை புரிந்தார். ஆங்காங்கு காடுகளை அழித்து, அவற்றை விளை நிலங்களாக்கினுர். நாட்டில் கள்வர் பயத்தைப் போக்கினுர். மக்கள் பிரயாணம் செய்வதற்காகப் பல சாலைகளை அமைத்தார்.

பால்பனுக்குப் பின் வந்தவர்கள் திறமையற்றவர்கள்: ஆதலால் அடிமை வமிசம் வீழ்ச்சியுற்றது.

அலாவுத்தீன் கில்ஜி: அடிமை அரசர்களில் கடைசியான **கைகுபாத்** என்பவர் கில்ஜி வமிசத்தைச் சேர்ந்த **ஜலாலுதீன்** என்பவரால் கொல்லப்பட்டார். இவ்வாறு டில்லியில் கில்ஜி வமிசம் ஸ்தாபிக்கப்பட்டது.

கில்ஜி மன்னர்களுள் கீர்த்தி பெற்றவர் **அலாவுதீன் கில்ஜி** என்பவர். இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன்பே, **தேவகிரி** என்னும் நகரைத் தாக்கி அங்கிருந்து ஏராளமான பொருள்களை டில்லிக்கு எடுத்துச் சென்றார். பிறகு இவர் 1296-ம் ஆண்டில் தனது பெரியப்பனை **ஜலாலுதீனைக்** கொன்று, பட்டம் பெற்றார்.

அலாவுத்தீன் ஒரு சிறந்த போர் வீரர். அவர் இந்தியாவின் பெரும்பாகத்தைக் கைப்பற்ற விரும்பினார். மீண்டும் இந்தியாவின் மீது படையெடுத்த **மங்கோலியர்களைச்** சிதற அடித்தார். பிறகு ஒரு பெரும்படை திரட்டி, வடஇந்தியாவில் **மாளவம், கூர்ஜரம், ரான்தம்பூர்** முதலிய விடங்களைக் கைப் பற்றினார். பின்பு இவர் இராஜபுதனத்தில் **மீவார்** நாட்டின் தலைநகராகிய **சித்தூரைத்** தாக்கினார். இதன் காரணம் அங் கிருந்த, அழகுமிகுந்த அரசியான **பத்மினி** என்பவளை மணந்து கொள்வதேயாகும். அக்கதையை நீங்கள் அறிவீர் களல்லவா?

இதன் பிறகு இவர் தன் படைத்தலைவரான **மாலிக் காபூர்** என்பவரை ஓர் பெரும் படையுடன் தென் இந்தியாவிற்கு அனுப்பினார். அவர் **தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம், மதுரை, இராமேஸ்வரம்** முதலிய இடங்களைத் தாக்கி ஏராளமான பொருள்களுடன் டில்லிக்குத் திரும்பினார்.

அலாவுத்தீன் ஒரு கொடுங்கோல் மன்னன். ஆகையால் தனக்கு எதிராகக் கலகங்கள் விளையாவண்ணம் அவர் பல நடவடிக்கைகளைக் கைக்கொண்டார். நாடெங்கும் ஒற்றர்களை அனுப்பி, குடிகள், பிரபுக்கள் இவர்களின் இரகசியங்களையும் அறிந்தார். மேலும், மதுபானம் உற்பத்தி செய்தல், உபயோகித்தல், பிரபுக்கள் தன் உத்திரவின்றிக் கூடுதல், விவாக உறவு வைத்துக் கொள்ளுதல், இவற்றைத் தடை

செய்தார். எல்லோருக்கும் கடும் வரி விதித்து, அவர்களின் செல்வங்களின் பெரும் பகுதியைக் கைக்கொண்டார். ஆனால் இவர் உணவுப் பொருள்களின் விலை, அளவு இவற்றைக் கட்டுப்பாடு செய்து, மீறியவர்களுக்குக் கடுந் தண்டனை விதித்தார்.

அலாவுத்தீன் 1316-ம் ஆண்டில் இறந்தார். அவருக்குப் பின் அவரது குமாரர்களுள் ஒருவரான **முபாரக்** என்பவர் அரசுபெற்றார். அவர் சிற்றின்பத்தில் பிரியம்கொண்டு திறமையற்றவராக இருந்ததால், **கியாஸுத்தீன் துக்ளக்** என்பவர் அவரைக் கொன்றுவிட்டு துக்ளக் வமிசத்தை டில்லியில் ஸ்தாபித்தார். (1320)

முகம்மது துக்ளக் : துக்ளக் வமிசத்தில் கீர்த்திபெற்ற அரசர் **முகம்மது துக்ளக்** என்பவர். இவர் கி. பி. 1325-ம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார்.

முகம்மது துக்ளக் சிறந்த கல்விமான். மிகவும் தயாள சிந்தனையுடையவர். எல்லா சமயத்தவர்களையும் பிரியமாகவே நடத்தினார். இவ்வாறு இருப்பினும் அவரது முன்கோபம், அவசரபுத்தி, பிடிவாதம் இக்குணங்களால் அவர் நன்மைக்காகச் செய்த காரியங்களும் தீமையாகவே முடிந்தன.

தலைநகராகிய டில்லி, இராஜ்யத்தின் மத்தியில் இல்லாமல், வடகோடியில் இருப்பதாலும் அங்கு சமீபத்தில் எல்லைப் புறத்திலுள்ள விரோதிகள் அதை அடிக்கடி தாக்குவதாலும், தலைநகரை இராஜ்யத்தின் மத்தியிலே ஏற்படுத்த விரும்பினார். இதற்காக **தேவகிரி** என்னும் நகரைத் தேர்ந்தெடுத்து அதன் பெயரை **தௌலதாபாத்** என மாற்றி, டில்லியிலுள்ளவர்கள் எல்லோரையும் அங்கு போகும்படி உத்தரவிட்டார். டில்லியில் அவர்களுக்குச் சொந்தமான வீடு, நிலம் இவற்றை விலைகொடுத்து வாங்கிக்கொண்டு, புதிய நகரில் வீடு முதலிய

வற்றை இலவசமாகக் கொடுத்தார். ஆனால் புதிய தலைநகரில் சீதோஷ்ணநிலை முதலியவை அனுகூலமில்லாமலிருந்ததால், அவர் எல்லோரையும் மீண்டும் டில்லிக்குப் போகும்படி உத்தரவிட்டார். இதனால் மக்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன.

கங்கை, யமுனை நதிகளுக்கிடையேயுள்ள பிரதேசம் மிகவும் செழிப்புற்றதாக இருந்ததால் அங்கு நிலவரியை உயர்த்தினர். ஆனால் அச்சமயம் அங்கு மழையின்மையால் குடிகள் வரிசெலுத்த முடியவில்லை. பலர் தங்கள் நிலங்களை விற்றுவிட்டுக் காடுகளுக்கு ஓடி கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தனர். இதையறிந்த முகம்மது, வரியைக் குறைத்ததுமின்றி விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவும் வசதி செய்தார். ஆனால் சில உத்தியோகஸ்தர்களின் வஞ்சத்தால் குடிகள் அரசாங்க உதவிபெற்றுப் பயனடைய முடியாமல் போயிற்று.

இதன் பிறகு முகம்மது பாரசீகம், சீனு முதலிய நாடுகளைக் கைப்பற்றுவதற்காகப் பெரும் படைகளை அனுப்பினர். ஆனால் அப்படைகளில் பெரும்பகுதி, குளிர், வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்டு அழிந்தது. ஆகையால் இவ் விஷயத்திலும் அவருடைய எண்ணம் கைகூடவில்லை.

மேற்கூறிய நிகழ்ச்சிகளால் அரசாங்கத்தின் பொக்கிஷம் காலியாயிற்று. ஆகையால் அரசர் பொன், வெள்ளி நாணயங்களுக்குப் பதில் செம்பு நாணயங்களை அச்சிட்டு வழங்கினர். ஆனால் அயல்நாட்டு வியாபாரிகள் இதை வாங்க மறுத்தனர். மேலும் குடிகளில் பலரும் அதேவிதமான நாணயங்களை இரகசியமாக அச்சிட்டு வழங்க ஆரம்பித்தனர். இதனால் அதிகக் குழப்பங்கள் ஏற்படவே, முக்ம்மது செம்பு நாணயங்களைத் திரும்பிப் பெற்றுக்கொண்டு மீண்டும் பொன், வெள்ளி நாணயங்களை வழங்கினர்.

இச்செயல்களால் குடிகளுக்கு அதிக வெறுப்பு ஏற்பட்டு, அவர்கள் ஆங்காங்கு கலகங்களை விளைவித்தனர். அவர் ஒவ்வொரு இடமாகச் சென்று, கலகங்களை அடக்கி வருகையில், வழியில் ஜுரம் கண்டு 1351-ம் ஆண்டில் இறந்தார்.

இந்தியவாழ்க்கையில் இஸ்லாமியம் : இந்தியாவில் முஸ்லீம்களது ஆட்சி எவ்வாறு பரவியதென்பதை அறிந்து கொண்டோம். நாளடைவில் இந்தியாவில் முஸ்லீம்களது தொகை அதிகரித்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, மேலும் பல முஸ்லீம்கள் அன்னிய நாடுகளினின்றும் இங்கு வந்தனர். இரண்டாவதாக, முஸ்லீம் அல்லாதவர்களுக்கு அரசாங்கத்தில் பெரும்பதவிகள் அளிக்கப்படவில்லை. அவர்கள்மீது **ஜஸியா** போன்ற புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. முஸ்லீம்களுக்கு மட்டும் வாணிபத்திலும் சில விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆகையால் இவ்வசதிகளைப் பெற, பலர் இஸ்லாமிய மதத்தைத் தழுவினர்கள்.

இந்துக்களும், முஸ்லீம்களும் வாணிபம், சமூக வாழ்க்கை இவற்றில் கலந்து உறவாட வேண்டியிருந்ததால், அவர்களிடையே உருது என்ற புதிய மொழியொன்று தோன்றலாயிற்று. **இராமானந்தர், கபீர்தாஸ், நானக்** போன்ற மஹான்கள் இரு சமயத்தவர்களிடையேயும் ஒற்றுமையை நிலைநாட்ட முயற்சி செய்தார்கள்.

முகலாய மன்னர்கள் : முகம்மது துக்ளக் இறந்தபின், அவரது சுற்றத்தவரான **பிரோஸ்ஷா** பட்டத்துக்குவந்து, குடிகளுக்குப் பல நன்மைகளைப் புரிந்தார். அவருக்குப் பின் **துக்ளக்** வமிசம் வீழ்ச்சியுற்றது. இதற்குப் பிறகு **சையத், லோடி** என்ற இரண்டு வமிசத்தினர் சிறிது காலம் ஆட்சி

புரிந்தனர். லோடி வமிசத்தின் கடைசி மன்னனுன **இப்ராஹிம் லோடி** என்பவர் பல வகைகளிலும் தன் குடிகளின் வெறுப்பைச் சம்பாதித்ததால், பஞ்சாப் கவர்னரான **தௌலத்கான் லோடி** என்பவர், அப்பொழுது காபூலையாண்ட **பாபர்** என்னும் முகலாய மன்னரை இந்தியாவின்மீது படையெடுத்து வரும்படி கேட்டுக்கொண்டார். இத்தகைய சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்த பாபர், இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, 1526-ம்ஆண்டில் **பானிபட்டு** என்னுமிடத்தில் இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்துக் கொன்று விட்டு, டில்லியைக் கைப்பற்றினர். இவ்வாறு முகலாய வமிசம் ஸ்தாபிக்கப் பட்டது.

பாபர் : பாபர் மத்திய ஆசியாவிலுள்ள துருக்கிஸ்தானத்தில், **பர்காஞ** என்னுமிடத்தை ஆண்ட அரசனின் புதல்வராக, 1483-ம் ஆண்டில் பிறந்தார். இவரது பதின்மூன்ருவது வயதிலேயே இவருடைய தந்தை இறந்ததால், அவ் வயதிலேயே பாபர் முடிசூட்டிக் கொண்டார். ஆனல் தன்னுடைய தாயத்தவர்களின் கொடுமை பொறுக்க முடியாமல் இவர் பர்காஞவைக் கைவிட்டு, இந்துகுஷ்மலையைக் கடந்து, காபூலுக்குச் சென்ருர். அங்கிருந்த மன்னரைத் தோற்கடித்துத் துரத்திவிட்டு, தானே காபூலில் முடிசூட்டிக் கொண்டார்.

பாபர் சிறந்த தீரரும், பலசாலியும் ஆவார். எவ்வகையான கஷ்டங்கள் வரினும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியுடையவர். இயற்கை வனப்புகளில் பெரிதும் விருப்பம் கொண்டவர். இவர் தனது ஜீவிய சரித்திரத்தையும் தானே எழுதி வைத்துள்ளார்.

காபூலில் ஆட்சி புரிந்து கொண்டிருக்கையில், பாபர் இந்தியாவின் சிறப்பைப் பற்றிக் கேள்வியுற்று, அந் நாட்டையும் கைப்பற்ற விரும்பி, தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து

திருந்தார். இதனால் தௌலத்கான் லோடியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, டில்லியில் எவ்வாறு தனது ஆட்சியை அமைத்தார் என்பதைப்பற்றி அறிந்து கொண்டீர்கள்.

பானிப்பட்டுப் போருக்குப் பின், பாபருடைய போர் வீரர்கள் தம் நாடு திரும்ப, பெரிதும் ஆவல் கொண்டிருந்தனர். ஆனால் பாபர் அவர்களுக்கு நல்லுபதேசம் கூறி, அவர்களை இவ்விடத்திலேயே தங்கியிருக்கும்படி செய்தார். இதன் பிறகு தென் மேற்கில், **மேவார்** நாட்டின் மன்னரான **இராணா சங்கரம் சிங்** என்பவரின் தலைமையில் இராஜபுத்திரர்களும், கிழக்கில் இப்ராஹிம் லோடியின் நண்பர்களான, ஆப்கானியர்களும் பாபரைத் தாக்கினார்கள். ஆனால் அவர் அவர்கள் எல்லோரையும் தோற்கடித்து, தன் பதவியை ஸ்திரப்படுத்திக் கொண்டார்.

பாபர்

பாபர் இந்தியாவில் நான்கு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். தன்னுடைய பிரியமுள்ள மகன் **ஹுமாயூன்** உயிரைக் காப்பாற்றுவதற்காக, தன் உயிரையே அர்ப்பணம் செய்தார். இந்த அதிசயக் கதையை நீங்கள் அறிவீர்கள் அல்லவா?

அக்பர்: பாபருக்குப் பின், அவருடைய குமாரரான ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தார். ஆனால் 1540-ம் ஆண்டில் அவர் சூர் வமிசத்தைச் சேர்ந்த **ஷெர்ஷா** என்பவரால், தோற்கடிக்கப்பட்டு, இந்தியாவை விட்டு ஓடி, கடைசியாக, காபூலில் ஆட்சி புரிந்து வந்தார். ஷெர்ஷா டில்லியில் சூர் வமிசத்தை ஸ்தாபித்தார். ஷெர்ஷாவும் அவருக்குப் பின்

அக்பர்

வந்தவர்களும் பதினைந்து ஆண்டுகள் டில்லியில் ஆட்சி புரிந்தனர்: 1555-ம் ஆண்டில் ஹுமாயூன் மீண்டும் டில்லியைக் கைப்பற்றினர். ஆனால் அடுத்த ஆண்டிலேயே அவர், ஓர் விபத்துக்கு உள்ளாகி மரணமடைந்தார். பிறகு அவருடைய பிரசித்திபெற்ற குமாரரான **அக்பர்** பட்டம் பெற்றார்.

ஹுமாயூன் இறந்த சமயத்தில் அக்பர் தன்னுடைய அத்தை புருஷரும் போஷகருமான **பைராம்கான்** என்பவ



இந்தியா—அக்பரது சாம்ராஜ்யம

ருடன் பஞ்சாபில் இருந்தார். ஹுமாயூன் மரண சங்கதி யைக் கேட்டவுடனேயே பைராம்கான் அக்பரை மன்ன ரெனப் பிரகடனம் செய்தார். ஆனால் கடைசி சூர் மன்னரின் மந்திரியான **ஹீமு** என்பவர், **விக்கிரமாதித்தியர்** என்ற சிறப் புப் பெயரைப் பூண்டு, டில்லியைக் கைப்பற்றி அங்கு மன்ன ரானார். உடனே அக்பரும், பைராம்கானும் படை திரட்டி வந்து, 1556-ம் ஆண்டில் இரண்டாம் பானிபட்டுப் போரில் ஹீமுவைத் தோற்கடித்துக் கொன்று, டில்லியைக் கைப்பற் றிக் கொண்டார்கள். அக்பருக்கு வயது வரும்வரை பைராம் கானே அக்பர் பெயரால் அரசு செலுத்தினார். பின்பு அக்பர் தானே அதிகாரம் வகிக்க ஆரம்பித்தார்.

அக்பர் சிறந்த போர் வீரர். அவர் ஒரு பெரும் படை யைத் திரட்டி, சில ஆண்டுகளில் ஏறக்குறைய வட இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார். இதற் குப்பின் இவர் தக்ஷிணத்திலுள்ள **ஆமதுநகரைத்** தாக்கினார். முதல் முறை அங்கு ஆட்சிபுரிந்த **சாண்ட்பிபி** என்னும் அரசி மிகத் தீவிரமாகப் போர் புரிந்ததால் அக்பர் அவ்விடத்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் அடுத்த முறை அவளு டைய குடிகளில் சிலர், அவளைச் சிறையிட்டதால், அக்பர் சுலபமாக வெற்றி பெற்றார். இவ்வாறாக அவரது சாம்ராஜ்யம் மேற்கே ஆப்கானிஸ்தானத்திலிருந்து, கிழக்கே வங்காளம் வரையிலும், வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கோதா வரி நதி வரையிலும் பரவியிருந்தது.

அக்பரின் அரசியல் முறை: ஆட்சி முறைக்காக அக்பர் தனது இராஜ்யத்தை பதினெட்டு **சூபாக்கள்** அல்லது மகா ணங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு சூபாவையும் பரிபாலிக்க ஒரு **சுபேதார்** என்னும் அதிகாரியை நியமித்தார். சுபேதா ருக்கு உதவியாக, வரிவசூல் செய்ய **திவான்** என்னும் அதி

காரியையும், நீதி விசாரணை செய்ய **காஜியையும்,** போலீஸ் படைகளைக் கவனிக்க, **கொத்தவால்** என்பவரையும் நியமித்தார். படைகளைக் கவனிக்க **மான்ஸப்தார்கள், அமீல்கள்** முதலியவர்களையும் நியமித்தார்.

நிலவரி வசூல் விஷயத்தில், அக்பர் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்தார். சிற்சில மாறுதல்களுடன் அவை இன்றும் நம் நாட்டில் வழங்குகின்றன. இவர் **இராஜா தோடர்மால்** என்னும் இராஜபுத்திரரின் உதவியைக் கொண்டு, நிலங்களையெல்லாம் அளந்து விளைவுக்குத் தக்கபடி அவற்றைத் தர வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலுள்ள நிலங்களிலும், பல ஆண்டுகளின் சராசரி விளைவைக் கணக்கிட்டு, அதில் மூன்றில் ஒரு பகுதியை வரியாக வசூலித்தார். பஞ்சகாலங்களில் வரியைத் தள்ளுபடி செய்வதும், நீண்ட தவணைக்கு கடன் கொடுப்பதும் வழக்கம். விவசாயிகள் வரியைப் பணமாகவோ, தானியமாகவோ கொடுக்கலாம். இந்த தானியமும் அரசாங்கத்தாரால், பஞ்ச காலத்தில் மக்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

அக்பர் சில சமூக சீர்த்திருத்தங்களையும் செய்தார். நம் நாட்டில் இந்துக்களிடையே இருந்த கொடிய வழக்கமாகிய சதியை ஒழிக்க முயன்றார். ஆனால் எதிர்ப்பு அதிகமாக இருந்ததால், கட்டாய சதியை மட்டும் ஒழித்தார். பாலிய விவாகத்தைத் தடுத்து, விதவா விவாகத்தையும் ஆதரித்தார்.

ஒரு அரசர் நன்கு ஆட்சி புரிய விரும்பினால், அவர் குடிகளின் அன்பைப்பெற வேண்டுமென்ற உண்மையை அக்பர் அறிந்திருந்தார். ஆகையால், அவர் இராஜபுத்திரர்களின் அன்பைப் பெறப் பல முயற்சிகள் செய்தார். இவருக்கு முன்பு இருந்த முஸ்லீம் அரசர்களில் சிலர் இந்துக்களின்மீது விதித்திருந்த **ஜஸியா** வரியை இவர் நீக்கினார். தான் பல

இராஜபுத்திர அரசகுமாரிகளை மணந்ததன்றி, தன் குமாரர்களும் பிரபுக்களும்கூட, அவ்வாறு செய்யும்படி செய்தார். அரசாங்கத்திலும் படையிலும் இராஜபுத்திரர்களுக்குப் பல உயர்ந்த பதவிகளை அளித்தார். **இராஜா தோடர்மால், மான் ஸிங், பகவான்தாஸ், பிர்பால்** முதலிய இராஜபுத்திரத் தலைவர்கள் அவருக்குப் பெரும் சேவை செய்தனர்.

அக்பருக்கு எழுதப்படிக்கத் தெரியாத போதிலும், பல அரிய நூல்களைச் சேகரித்து, தன் நண்பர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். மேலும் அவர் அவ்வப்பொழுது பல சமயத்தவர்களைக் கூட்டி, மதவிசாரணை செய்தார். இதன் விளைவாக அவர் எல்லா சமயங்களிலும் உயர்ந்த உண்மைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, எல்லா சமயத்தவர்களையும் அன்புடன் நடத்தினார்.

அசோகரைப் போலவே, அக்பரும் உலக மகா சக்ரவர்த்திகளுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

ஜிஹாங்கீர் : அக்பர் இறந்த பின் அவருடைய மகனான **சலீம்** என்பவர், **ஜிஹாங்கீர்** என்ற பெயருடன் மன்னரானார். இவர் மதுபானம் செய்தல், கேளிக்கைகள் இவற்றில் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் குடிகளுக்கு நீதி வழங்குவதில் சிறிதும் பிறழாதவர்.

இவர் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான சம்பவம், **நூர்ஜஹான்** என்பவளை மணந்ததாகும். அவள் ஒரு ஏழைப் பாரசீக வர்த்தகரின் மகள். அவர் அக்பருடைய சபையில் பதவி வகித்து வந்தார். அக்காலத்தில் நூர்ஜஹானுக்கு **மெஹருன்னிஸா** எனப் பெயர். சிறுவயதில் அவளைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்த சலீம் அவளுடைய பேரழகைக் கண்டு, அவளையே மணந்து கொள்ள விரும்பினார். அக்பர் இதை விரும்பாமல், அவளை **ஷெர்ஆப்கன்** என்பவனுக்கு

மணம் புரிவித்து, அவர்கள் இருவரையும் வங்காளத்துக்கு அனுப்பிவிட்டார். ஜிஹாங்கீர் பட்டத்துக்கு வந்த சிறிது காலத்துக்குப் பின் ஷெர்ஆப்கன் தற்செயலாகக் கொல்லப்பட்டார். நூர்ஜஹானும் அவளுடைய மகளும் டில்லிக்குக் கொண்டுவரப் பட்டனர். சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஜிஹாங்கீரின்வேண்டுகோளுக்கிணங்க, நூர்ஜஹான் அவரை மணந்தாள். அவளுடைய திறமையை உத்தேசித்து ஜிஹாங்கீர் அரசியல் நிர்வாகம் முழுவதையும் அவளுடைய கையிலேயே விட்டுவிட்டார்.

ஜிஹாங்கீர்

ஜிஹாங்கீரின் மூன்றுவது குமாரன் **குர்ரம்** என்பவர். இவர் தட்சிணத்தில் சில கலகங்களை அடக்கியதுமன்றி, இராஜபுதனத்திலுள்ள **மேவார்** நாட்டையும் வென்ருர். இதனல் ஜிஹாங்கீர் இவருக்கு **ஷாஜஹான்** எனப் பெயரளித்தார். இப்பெயருக்கு "உலக அரசர்" என்பது பொருள். மேலும், ஜிஹாங்கீர், தனக்குப் பின் ஷாஜஹானே பட்டத்துக்கு வர வேண்டு மென்றும் விரும்பினர்.

நூர்ஜஹானுக்கு ஷெர்ஆப்கனிடம் பிறந்த ஒரு மகள் இருந்தாளென அறிந்தீர்கள் அல்லவா ? இவளை நூர்ஜஹான், ஜிஹாங்கீரின் மற்றெரு புதல்வனை **ஷாரயர்** என்பவனுக்கு மணம் புரிவித்திருந்தாள். ஜிஹாங்கீருக்குப் பின் ஷாரயரே பட்டத்துக்கு வரவேண்டுமென விரும்பினுள். ஆனல் ஷாஜஹான், நூர்ஜஹானின் சகோதரனை **அஸப்கான்** என்பவரின்

மகளாகிய **மும்தாஜ்மஹால்** என்பவளை மணந்திருந்தார். அஸப்கான், ஷாஜஹானே மன்னராக வரவேண்டுமென விரும்பினர். இதன் விளைவாக அடிக்கடி கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. 1627-ம் ஆண்டில் ஜிஹாங்கீர் பஞ்சாபில் இருக்கும்பொழுது, அங்கு திடீரென மரணமடைந்தார். அப்பொழுது தட்சிணத்தில் இருந்த ஷாஜஹான் உடனே தலைநகருக்கு வந்து, முடிசூட்டிக் கொண்டார்.

ஜிஹாங்கீர் மன்னராக இருக்கையில், ஆங்கிலேயர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்ய விரும்பி ஒரு வர்த்தக

ஷாஜஹான்

நூர்ஜஹான்

சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இச்சங்கத்தினர் இந்தியாவில் வாணிபம் செய்ய உரிமை பெறும்பொருட்டு, அப்பொழுது இங்கிலாந்தில் மன்னராக இருந்த **முதலாம் ஜேம்ஸ்** என்பவர் **ஹாக்கின்ஸ், ஸர் தாமஸ் ரோ** என்பவர்களை ஜிஹாங்கீரிடம் தூதாக அனுப்பினர். அவ்வாறே, ஆங்கில வர்த்தகர்களுக்கு சில உரிமைகள் அளிக்கப்பட்டன. ரோ தான் இங்கு தங்கியிருந்த காலத்தில், இந்நாட்டைப் பற்றிய குறிப்புகள் எழுதியுள்ளார்.

ஷாஜஹான்: ஷாஜஹான் பட்டத்துக்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே, தன் சுற்றத்தவர்களில் பலரைக் கொன்று, தன் பதவிக்குப் போட்டி ஏற்படாமல் கவனித்துக் கொண்டார். பிறகு, தட்சிணத்தில் **ஆமதுநகரம், பீஜபூர்**



தாஜ்மஹால்

முதலிய இடங்களைக் கைப்பற்றினர். அக்காலத்தில் போர்ச்சுக்கீஸியர் இந்தியாவுடன் வாணிபம் செய்து வந்தனர். ஆனல் அவர்கள் இந்தியாவில் பலரைக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவும்படி வற்புறுத்தினர்கள். இதனல் கோபமுற்ற ஷாஜஹான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமைகளில் பலவற்றைப் பறித்துக் கொண்டார்.

ஷாஜஹான் ஆடம்பரப் பிரியர். கட்டிடக் கலையைப் பெரிதும் ஆதரித்தார். அவர் **ஷாஜஹானுபாத்** என்ற ஓர் புதிய நகரை நிருமாணித்தார். அவர் கட்டிய இதரக் கட்டிடங்கள், **ஜும்மா மசூதி, முத்து மசூதி, திவானிகாஸ், திவானிஆம்** முதலியவை. ஆனல் அவருடைய கட்டிடங்களில் மிகச் சிறந்தது **தாஜ் மஹால்.** இது அவர் மனைவி இறந்தபின் அவளுடைய

ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. இது சலவைக் கற்களால் கட்டப்பெற்று, இன்றும் புதிதுபோலத் தோற்றமளிக்கின்றது. மேலும், ஷாஜஹான் அதிகப் பொருட் செலவில், **மயிலாசனம்** ஒன்றையும் அமைத்தார்.

ஷாஜஹானுக்கு நான்கு குமாரர்கள் இருந்தனர். 1657-ம் ஆண்டில் அவர் நோயுற்றபொழுது, அவர்களிடையே பட்டத்துக்காகப் போர் ஏற்பட்டது. இறுதியில், அவர்களில் ஒருவரான **ஔரங்கசீப்** தன் சகோதரர்களைக் கொன்று, பட்டம் பெற்றார். ஷாஜஹான் சிறையிடப்பட்டு, 1666-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

ஔரங்கஸீப் : ஔரங்கஸீப் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்து, மிகவும் எளிய வாழ்க்கையையே நடத்தி வந்தார் புலால், மதுபானம், சங்கிதம் இவற்றை வெறுத்து ஒதுக்கினார். அதிக மதப் பற்றுக்கொண்டு, திருக்குரானில் கூறியுள்ளபடியே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். தனது சொந்தச் செலவுக்காக, அரசாங்கப் பணத்தைத் தொடாமல் குல்லாய்கள் செய்தும், குரான் பிரதிகளை எழுதியும் விற்று ஜீவித்து வந்தார்.

ஔரங்கஸீப்

இவ்வளவு நற்குணம் படைத்த இவரிடம் சில தீய குணங்களும் இருந்தன. இவர் பிற சமயங்களைப் பெரிதும் வெறுத்தார். இஸ்லாமிய மதத்தின் ஓர் பிரிவாகிய **ஷீயா** வகுப்பினரையும் துவேஷித்தார். இந்துக்களின்மீது மீண்டும் ஜஸியாவரி, யாத்திரைவரி, போன்றவற்றை விதித்தார். அவர்

களை உயர்ந்த பதவிகளினின்றும் நீக்கினர். தட்சிணத்தில் இருந்த மஹாராஷ்டிரர்களையும், அவர்களது தலைவரான **சிவாஜி**யையும் துன்புறுத்தினர். சிவாஜியின் மகனான **சாம்பாஜி**யையும் கொல்லுவித்தார். பஞ்சாபிலிருந்த சீக்கியரின் குருவாகிய **தெஜ்பகதூர்** என்பவரை இஸ்லாமிய மதத்தைத் தழுவும்படி வற்புறுத்தினர். ஆனால் அவர் இணங்க மறுக்கவே, அவரையும் கொலை செய்தார். இவ்வகைகளில் அவருக்கு எங்கும் தீவிர எதிர்ப்புகள் தோன்றின. இவர் காலத்தில் இந்தியாவில், முகலாய சாம்ராஜ்யம் மிகப் பெரியதாக இருந்த போதிலும், இவர் காலத்திலேயே அது க்ஷீண தசை அடையவும் ஆரம்பித்தது.

ஔரங்கஸீப் பட்டத்துக்கு வந்த சிறிது காலத்துக்கெல்லாம், இராஜபுத்திர மன்னரான, மீவார் நாட்டு அரசருடன் போர் தொடங்கியது. நீண்ட போருக்குப் பின் ஔரங்கஸீப் அந்நாட்டைக் கைப்பற்றினர். இதனால் இராஜபுத்திரர்கள் அவருக்குக் கொடிய விரோதிகளாகி, முகலாய சாம்ராஜ்யத்தை வேரறுக்கத் தொடங்கினர்கள்.

இதன் பிறகு ஔரங்கஸீப் தட்சிணத்திலுள்ள **பீஜப்பூர் கோல்கொண்டா** இராஜ்யங்களைத் தாக்கினர். இதன் காரணம் அங்கு ஆட்சி புரிந்த மன்னர்கள் ஷியாக்களாக இருந்ததும், அவர்கள் மஹாராஷ்டிரர்களுக்கு அடிக்கடி உதவி செய்ததுமாகும். இந்த இராஜ்யங்களைக் கைப்பற்றியபின் அவர் மஹாராஷ்டிரருடன் போரிட்டு, அவர்களுடைய மன்னரும், சிவாஜியின் குமாரருமான **சாம்பாஜி** என்பவரைக் கொன்று, அவருடைய மகனான **சாஹு**வைச் சிறைப்பிடித்து, டில்லிக்கு அனுப்பினர். இவ்வாறு தட்சிணத்தில் சுமார் இருபது ஆண்டுகள் போர் புரிந்தபின், டில்லிக்குத் திரும்புகையில் வழியிலேயே இறந்தார். அவருடன் முகலாய சாம்ராஜ்யத்தின் கீர்த்தியும் மங்கியது.



இந்தியா — ஔரங்கஸீப்பின் சாம்ராஜ்யம்

முகலாய மன்னர்களும், இந்தியக் கலாசாரப் பண்பாடுகளும் : முகலாய மன்னர்களில் பெரும்பாலோர் கலைகளைப் போற்றி வளர்த்தது மன்றி, கலைஞர்களுக்கும் பேராதரவு அளித்தனர். அக்பருடைய சபையிலிருந்த **அபுல்பஜல்** என்பவர் பாரசீக பாஷையில் பல நூல்களை எழுதினர். **தான் ஸேன்** என்பவர் மிகப்பிரசித்திபெற்ற சங்கீத விற்பன்னர். **துளசிதாஸர்** என்பவர் இராமாயண நூலை ஹிந்தி மொழியில் எழுதினர். அக்பர், ஜிஹாங்கீர். ஷாஜஹான் ஆகியவர்கள் பாரசீக ஓவியங்களைப் பெரிதும் ஆதரித்துச் சேகரித்தனர். ஷாஜஹான் கட்டுவித்த கட்டிடங்களைப் பற்றி முன்பே கூறப்பட்டது. கட்டிடக்கலையில் பாரசீகக்கலை, இந்தியக்கலை இவை இரண்டும் புதுமுறையில் கையாளப்பட்டன. பல சமஸ்கிருத நூல்களும பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. பலர் அக்காலத்திய சரித்திரக் குறிப்புகளையும் எழுதியுள்ளார்கள்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. அடிமை வமிசத்தை ஸ்தாபித்தவர் யார் ? அவ்வமிசத்துக்கு ஏன் அப் பெயர் வந்தது ?
2. அடிமை வமிசத்தில் கீர்த்திபெற்ற மன்னர் யார் ? அவரைப் பற்றிக் குறிப்பு கூறுக.
3. அலாவுதீன் கில்ஜி எவ்வாறு ஆட்சிபுரிந்தார் ?
4. முகம்மது துக்ளக்கின் செயல்களையும், அவை பயனளிக்காத காரணங்களையும் கூறுக.
5. கீழ்க்கண்டவற்றைப் பற்றிக் குறிப்பு கூறுக:
   அக்பருடைய நிலவரி வசூல் திட்டம், சமூக சீர்திருத்தம், சமயக்கொள்கை.
6. நூர்ஜஹானைப் பற்றி நீ அறிந்ததைக் கூறுக.
7. ஷாஜஹான் கலைப் பிரியர் என்பதற்கு உதாரணங்கள் கூறுக.
8. ஒளரங்கசீப்பின் குணாதிசயங்களைக் கூறுக.
9. முகலாய மன்னர்களின் கலை ஆதரவைக் கூறுக.
10. இந்தியா படத்தில் அக்பரின் சாம்ராஜ்யத்தைக் குறிப்பிடு.

9. முகம்மதிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு

இந்தியாவில் ஆட்சி புரிந்த முஸ்லீம் மன்னர்களில் பெரும்பாலோர் இந்துக்களைத் துன்புறுத்தினர்களென அறிந்தீர்கள். இதனால் முஸ்லீம் ஆட்சிக்கு ஆங்காங்கு எதிர்ப்புத் தோன்றி புதிய இராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்படலாயின. அவற்றுள் சிலவற்றைப் பற்றி, இப்பொழுது அறிந்து கொள்ளலாம்.

விஜயநகரப் பேரரசு : அல்லாவுதீன் கில்ஜி காலத்தில் முஸ்லீம் துருப்புகள் முதன் முதலாகத் தென் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தன என்றும், அவற்றின் தலைவரான **மாலிக் காபூர்** இங்கிருந்து ஏராளமான பொருள்களை எடுத்துச் சென்றார் என்றும் அறிந்தீர்கள். வருங்காலத்தில் இத்தகைய படையெடுப்புகளைத் தடுக்க அரச குடும்பத்தைச் சேர்ந்த **ஹரிஹரர், புக்கர்** என்ற இரண்டு சகோதரர்கள் **துங்கபத்திரை** நதியின் தென்கரையில் **விஜய நகரம்** என்னும் பெயர் கொண்ட ஒரு நகரத்தை 1336-ல் அமைத்தார்கள். அக்காலத்தில் அந்நிய நாடுகளிலிருந்து இங்கு விஜயம் செய்தவர்கள் இந்நகரைப்பற்றி வெகு சிறப்பாகக் கூறியுள்ளார்கள்.

விஜய நகர மன்னர்களுள் மிகக் கீர்த்திபெற்றவர் **கிருஷ்ண தேவராயர்.** இவர் 1509 முதல் 1530 வரை ஆட்சிபுரிந்தார். விஜயநகர சாம்ராஜ்யத்துக்கு வடக்கிலிருந்த **பாமினி சுல்தான்**களுக்கும், விஜய நகர மன்னர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தது. அந்த இராஜ்யத்தின் ஓர் பகுதியாகிய **பீஜப்பூரைத்** தாக்கி, கிருஷ்ணதேவராயர் அதன் ஒரு பகுதியைக் கைக் கொண்டார். **மைசூர், ஒரிஸ்ஸா, கலிங்கம்** ஆகிய நாடுகளையும் கைப்பற்றி, தெற்கில் மதுரை வரை தன் சாம்ராஜ்யத்தைப் பரப்பினர். **கோவா**வில் வியாபாரம் செய்து வந்த



பாமினி, விஜயநகர இராஜ்யங்கள்

போர்ச்சுக்கீசியருடன் நட்புக்கொண்டு, அதிக லாபமடைந்தார்.

கிருஷ்ணதேவராயர் கல்வி, கலைகள் இவற்றில் ஆர்வமுள்ளவர். இவர் தானே பல சமஸ்கிருத நூல்களையும் இயற்றியுள்ளார். தெலுங்கு மொழிக்கும் அதிக ஆதரவு அளித்தார். இவருடைய சபையில் எட்டு அறிஞர்கள் இருந்தனர். அவர்களை **அஷ்டதிக் கஜங்கள்** எனக் கூறுவது வழக்கம். இவர்களில் மந்திரி **திம்மரசு** அல்லது **அப்பாஜி பெத்தண்ணு, தெனலிராமன்** ஆகியவர்கள் முக்கியமானவர்கள். கிருஷ்ண தேவராயர் ஆங்காங்கு பல கோயில்களையும் அமைத்தார்.

கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ண தேவராயருக்குப் பின், விஜய நகரப் பேரரசு க்ஷீணிக்க ஆரம்பித்தது. 1565-ம் ஆண்டில் பாமினி சுல்தான்கள் ஒன்று கூடி, **தலைக்கோட்டை** என்னுமிடத்தில், விஜய நகர மன்னரைத் தோற்கடித்து, நகரையும் சூறையாடினார்கள். அந்நகரின் சிதைவுச் சின்னங்களை இன்றும் பல்லாரிக்கு அருகிலுள்ள **ஹம்பி** என்னுமிடத்தில் காணலாம். விஜய நகரப் பேரரசு வீழ்ச்சியுற்றதும், அதன் சிற்றரசர்கள் ஆங்காங்கு சுயேச்சை பெற்றனர். அவர்களுள் ஒருவரான **சந்திரகிரி** மன்னனிடமிருந்து, பிற்காலத்தில் ஆங்கிலேயர்கள் சென்னையை விலைக்கு வாங்கினார்கள்.

மகாராஷ்டிரர்களும், சிவாஜியும் : தற்காலத்திய பம்பாய் இராஜ்யத்தில், அரபிக்கடலுக்கும், மேற்குத் தொடர்ச்சி

மலைக்கும் இடையிலுள்ள பகுதி முன்னுளில் **மகாராஷ்டிரம்** எனப்பெயர் பெற்றிருந்தது. அப் பகுதியில் வசித்தமக்கள் **மகாராஷ்டிரர்கள்** எனப்பெயர்கொண்டவர்கள். அவர்கள் தேகபலமும் சுறுசுறுப்பும் கொண்டவர்கள். மலேும் அவர்கள் சிறந்த குதிரை வீரர்கள். அவர்களிடையே பிறந்த சிவாஜி அவர்களை ஒன்று சேர்த்து, ஓர் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

சிவாஜி

ஷாஜி என்னும் மகாராஷ்டிரத் தலைவர் பீஜப்பூர் சுல்தானிடம் ஒரு உத்தியோகஸ்தராக இருந்தார். அவருடைய குமாரனை சிவாஜி 1627-ம் ஆண்டில் பிறந்தார். சிறுவயதில் அவர் தன்னுடைய தாயாகிய **ஜீஜாபாய்** குருவாகிய **தாதாஜி கொண்ட தேவ்** இவர்களுடன் **புனுவில்** வசித்தார். இவருடைய குரு இவருக்கு யானை, குதிரைகளின் யேற்றம், வில், வாள்போர் இவற்றைக் கற்பித்தார். இவருடைய தாய் இவருக்கு இராமாயணம், மகாபாரதம் முதலிய காவியங்களிலிருந்து பல கதைகளையும் கூறுவாள். அக்கதைகளில் வரும் வீரர்களைப் போலத் தானும் சிறந்து விளங்க வேண்டுமென, சிவாஜி உறுதி பூண்டார். அக்காலத்திய சமயப் பெரியார்களாகிய **துக்காராம், இராமதாஸ்** முதலியவர்களின் நட்பும் சிவாஜிக்குக் கிடைத்தது. இதன் விளைவாக சிவாஜி இந்து சாம்ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்து, இந்துக்களை முஸ்லீம்களின் கொடுமையினின்றும் காப்பாற்றத் தீர்மானித்தார். எனினும் அவர் ஏனைய மதங்களையும் வெறுக்கவில்லை. விரோதிகளைத் தாக்கும்போது கூட அங்குள்ள முதியோர்கள், ஸ்திரிகள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்.

சிவாஜிக்கு சுமார் பதினாறு வயது ஆன சமயம் தாதாஜி கொண்ட தேவ் இறந்தார். பிறகு சிவாஜி பல யுவர்களைச் சேர்த்துக் கொண்டு, பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான சில கோட்டைகளைக் கைப்பற்றினார். உடனே அந்த சுல்தான் இவரைத் தண்டிப்பதற்காக **அப்ஸல்கான்** என்பவரின் தலைமையில் ஒரு பெரும்படையை அனுப்பினார். சிவாஜி அப்படையுடன் போரிட விரும்பவில்லை எனக்கூறி, சமாதானம் செய்து கொள்ள, அப்ஸல்கானைத் தன்னைத் தனியே சந்திக்குமாறு கேட்டுக்கொண்டார். இச்சந்திப்பின் பொழுது, சிவாஜி அப்ஸல்கானைக் கொன்றார். இதை யறிந்த அவரது படைகளும் சிதறியோடிவிட்டன. இதன் பிறகு சிவாஜிக்கும், பீஜப்பூர் சுல்தானுக்கும் ஏற்பட்ட சமாதான உடன்பாட்டின் படி, சிவாஜி தான் அதுவரை பிடித்த கோட்டைகளைத் தானே வைத்துக் கொள்ளவேண்டும் என்றும், இனி எக்கோட்டைகளையும் பிடிக்கக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்பொழுது டில்லியை ஆண்ட முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப், சிவாஜியைத் தண்டிக்க தன் மாமனை **ஷெயிஸ்டகான்** என்பவரின் தலைமையில் ஓர் படையை அனுப்பினார். ஷெயிஸ்டகான் பூனாவை எளிதில் கைப்பற்றினார். ஆனால் நள்ளிரவில் அவர் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது, சிவாஜி அங்கு புகுந்து அவருடைய கைவிரல்களை வெட்டி விட்டார். ஷெயிஸ்டகானும் அவருடைய வீரர்களும் தப்பியோடினார்கள்.

இதன் பின்னர் ஔரங்கசீப் மற்றொரு பெரும்படையைத் தக்ஷிணத்துக்கு அனுப்பினார். இம்முறை சிவாஜி கீழ்படிந்தார். தானும் தன் மகனான சாம்பாஜியும் டில்லிக்குச் சென்றால் அவர்கள் அங்கு மரியாதையுடன் நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி பெற்று, சிவாஜியும் அவருடைய குமாரரும்

அங்கு சென்றார்கள். ஆனால் ஔரங்கசீப் அவர்களை வஞ்சக மாகச் சிறையிட்டார். வஞ்சகத்தை வஞ்சகத்தாலேயே வெல்ல உறுதி கொண்ட சிவாஜியும், அவருடைய குமாரரும், தனித்தனியே கூடைக்குள் உட்கார்ந்துகொண்டு தப்பியோடி னார்கள். 1674-ம் ஆண்டில் சிவாஜி **சத்ரபதி** என்ற பட்டத் துடன், **ராய்க்கர்** என்னுமிடத்தில் முடிசூட்டிக் கொண்டார். இதன் பிறகு அவர் தெற்கே சென்று **வேலூர், செஞ்சி** முதலிய இடங்களைக் கைப்பற்றினார். **சூரத்** நகரையும் தாக்கி, ஏராளமான பொருள்களைப் பெற்றார். இவர் 1680-ம் ஆண்டில் காலமானார்.

குரு கோவிந்த சிங் தலைமையில் சீக்கியர்கள் எழுச்சி: சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் குரு **நானக்** என்பவர். இவர் பஞ்சாப் நாட்டிலுள்ள இலாகூருக்கு அருகில் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தார். இவர் இந்துக் களையும், முஸ்லீம்களையும் ஒன்று சேர்த்து நட்புடன் வாழச் செய்வதற்காக இப்புதிய மதத்தை ஏற்படுத்தினார். அவர் சீக்கியர்களின் முதல் குருவாக ஒப்புக்கொள்ளப்பட்டார்.

நான்காவது குருவாகிய **இராமதாஸ்** என்பவர் சீக்கியர் களின் புனிதஸ்தலமாகிய **அமிர்தசரஸ்** என்னுமிடத்தில் ஒரு பொற்கோயிலும் தடாகமும் அமைத்தார். ஐந்தாவது குரு வாகிய **அர்ஜுன்** சீக்கிய மதக்கோட்பாடுகளைத் தொகுத்து, அவர்களின் வேத நூலாக்கினார். இதற்கு **ஆதிகிரந்தம்** எனப் பெயர். அப்பொழுது முகலாய மன்னராக இருந்த ஜிஹாங் கீரின் புதல்வர்களுள் ஒருவர் தன் தகப்பனுக்கு விரோதமா கக் கலகம் விளைவிக்கையில், அர்ஜுன் அவனுக்கு ஆதரவு அளித்ததாகக் கூறப்பட்டு, ஜிஹாங்கிரால் கொல்லப் பட்டார். இது முதல் சீக்கியர்கள் முகலாயர்களை வெறுக்க ஆரம்பித்தனர்.

ஔரங்கசீப் காலத்தில் சீக்கிய குருவாக இருந்த **தேஜ் பகதூர்** என்பவர் ஔரங்கசீப்பால் கொல்லப்பட்டதைப்பற்றி அறிந்தீர்கள். இதன் விளைவாக, சீக்கியரின் பத்தாவது குருவாகிய **கோவிந்த சிங்** சீக்கியர்களுக்குப் போர்ப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு **சிங்** (சிங்கம்) எனவும் விருது அளித்தார். அவர் அமைத்த படைகளுக்கு **கால்ஸா** எனப்பெயரையும் அளித்தார். சீக்கியர்களை ஒற்றுமைப்படுத்தி, அவர்கள் எப்பொழுதும் ஆயுதம் தாங்கி, முகலாயர்களைத் தாக்கவேண்டுமெனக் கூறினார். ஔரங்கசீப் இவருடைய குமாரர்கள் இருவரையும் கொன்று, இவருக்கும் அதிகத்துன்பம் கொடுக்கவே, அவர் தக்ஷிணத்துக்குத் தப்பியோடினார். சில காலத்துக்குப்பின் அவர் மீண்டும் பஞ்சாபுக்கு வந்து, ஓர் பெரும் படையைத் திரட்டி, முகலாயர்களுக்கு அதிகத் தொல்லை கொடுத்து வந்தார் அவர் 1708-ம் ஆண்டில், ஓர் ஆப்கானியனால் கொல்லப்பட்டார்.

கோவிந்த சிங்

முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு சீக்கியர்கள் பெரிதும் காரணம் ஆவார்கள்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. விஜயநகர சாம்ராஜ்யம் யாரால், எப்பொழுது, ஏன் தோற்கடிக்கப்பட்டது ?
2. கிருஷ்ணதேவராயரின் செயல்களைக் கூறுக ?
3. சிவாஜியைப் பற்றி நீங்கள் அறிந்ததென்ன ?
4. நானக் அர்ஜுன் இவர்களைப்பற்றிக் குறிப்பு வரைக.
5. சீக்கியர்களுக்கு கோவிந்த சிங் செய்த சேவைகள் யாவை ?

10. சர்வ சமய ஒற்றுமை

ஆதிமனிதன் விலங்குகளைப் போலவே வாழ்ந்து, திரிந்து வந்தான். அவன் கடவுளை அறியவில்லை. சில இயற்கைத் தோற்றங்களைக் கண்டு அஞ்சி வந்தான். பிறகு காலப்போக்கில், நாகரிக வளர்ச்சியின் காரணமாக, மனிதனின் நடத்தையையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்த ஆங்காங்கு பல மஹான்கள் தோன்றி, பல சமயங்களைத் தோற்றுவித்தனர். உலகில் காணும் பல்வேறு சமயங்களிலும், பல பொதுவான உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. கடவுள் ஒருவரே. மக்கள் மனம், வாக்கு, காயம் இவற்றில் சுத்தி உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். பிறரை நேசித்து, அவர்களுக்கு தம்மாலியன்ற அளவு உதவி புரிதல் வேண்டும்; தூய வழிபாட்டினுல் மோட்சம் அடையக் கூடும். இவை போன்ற உண்மைகள் எல்லா சமயங்களுக்கும் பொதுவானவை.

இனி உலகில் தோன்றியுள்ள சில முக்கிய சமயங்களைப் பற்றி அறிவோம்.

ஆரியர்களின் வேதமும், உபநிஷத் பெரியார்களும்

நம் நாட்டில் ஆரியர்கள் வந்து குடியேறியதைப் பற்றி முன்னொரு பாடத்தில் அறிந்தீர்கள். அவர்கள் இயற்கை வடிவங்களாகிய சூரியன், சந்திரன், மழை, இடி, ஆகாயம், அதிகாலை, அக்கினி முதலியவற்றை கடவுளின் வடிவங்கள் எனக் கருதி, அவற்றைத் தொழுது வந்தார்கள். இத் தொழுகைக்காகப் பல பாக்களையும் இயற்றினுர்கள். அப் பாக்களின் தொகுதிகளே வேதங்கள். வேதங்கள் நான்கு. இவற்றுள் மிகப் பழமையானது **இருக்கு** வேதம். ஏனையவை, **யஜுர் வேதம், சாமவேதம், அதர்வணவேதம்** ஆகியவை. காலம் செல்லச் செல்ல, உலகில் உள்ள எல்லாவற்றையும் ஆட்டி

வைப்பவர் ஒரே கடவுள் என்ற உயர்ந்த உண்மையை அறியலாயினர். பின்னர் இவர்களுள் சில பெரியார்கள் சிந்தனையில் ஈடுபட்டனர். இதன் விளைவாக, **உபநிஷத்துக்கள்** தோன்றின. இவையே இந்து மதத்தின் பல தத்துவங்களுக்கு அடிப்படையானவை. ஜீவாத்மா, பரமாத்மா, கடவுள் வழிபாடு, முக்திக்கான மார்க்கம் இவற்றை இந்நூல்கள் கூறுகின்றன.

ஆரிய மத வழிபாட்டில் முக்கியமான விதியொன்று, யாகங்கள் செய்தல் ஆகும். இந்த யாகங்களில் உயிர்ப் பலி இடுவது வழக்கம். அஹிம்சையில் உறுதிகொண்ட சிலர் இவ்வுயிர்ப் பலியை விரும்பவில்லை. மேலும் வழிபாட்டில் எல்லா மக்களுக்கும் சம உரிமைகள் அளிக்கப் படவில்லை. இக் காரணங்களால் **புத்த மதம், சமண மதம்** இவை தோன்றின.

1. புத்த மதம்: **கோசல** நாட்டின் வட பகுதியில் முன்னளில் **கபிலவாஸ்து** என்னும் நகரம் இருந்தது. அங்கு கி. மு. ஆறும் நூற்றண்டில் **சுத்தோதனர்** என்ற மன்னர் இருந்தார். அவருடைய குமாரரான **சித்தார்த்தர்** அல்லது **கௌதமர்** என்பவரே புத்த மதத்தைத் தோற்றுவித்தார். சிறுவயதில் இவர் சகல வகையான போகங்களால் சூழப்பட்டிருந்த போதிலும், எப்பொழுதும், மக்களுக்கு ஏற்படும் துன்பங்களை நினைத்து வருந்தி, அவற்றைப் போக்குவதற்கான வழிகளைச் சிந்திப்பதில்கருத்துக் கொண்டிருந்தார். இவரது

புத்தர்

மனதை மாற்ற இவர் தந்தை செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இவர் இறுதியாக உலகைத் துறந்து, தன் மனைவி, மகன், தந்தை, இராஜ்யம் இவற்றைக் கைவிட்டு, துறவறம் பூண்டு, பல ஆண்டுகள் காடுகளில் அலைந்து திரிந்து, பல மஹான்களையும் கண்டு பேசினர். எனினும் இவர் உள்ளம் திருப்தியடையவில்லை. கடைசியாக, **கயை** என்னுமிடத்தில் ஒரு போதி மரத்தடியில் வீற்றிருந்து தவம் செய்கையில் இவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. இப்பொழுது இவர் **புத்தர்** எனப் பெயர் பூண்டு, தன் புதிய சமயமாகிய புத்த சமயத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். சீக்கிரத்திலேயே பலர் இவரது சீடர்களானர்கள். கடைசியாக இவர் தனது எண்பதாம் ஆண்டில் **குசீநகரம்** என்னுமிடத்தில் காலமானர்.

இவர் போதித்த உண்மைகளாவன : "உலகில் உள்ள துன்பங்கள் அனைத்திற்கும் காரணம் ஆசையே ; ஆசையைத் தோற்றுவிப்பவை ஐம்புலன்கள். ஆகையால், புலன்களை அடக்கி, ஆசையை ஒழித்தலே துன்பத்தை நீக்கி, மோட்சமடைவதற்கான மார்க்கம். சாதிமத பேதம் கூடாது. பிறரிடம் அன்பாயிருத்தல் வேண்டும். மனம், சொல், செயல் இவற்றில் தூய்மை வேண்டும். கருணையே மனித வர்க்கத்தின் சீரிய குணம்."

2. சமண மதம் : இம் மதத்தைத் தோற்றுவித்தவர் **வர்த்தமான மாஹாவீரர்** என்பவர். கௌதமரைப் போலவே இவரும் ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் **விதேக** நாட்டில் **வைசாலி** நகருக்கு அருகில், கி. மு. ஆறும் நூற்றுண்டின் இறுதியில் பிறந்தார். புத்தரைப் போலவே, இவரும் அரண்மனை போகங்களை வெறுத்து, சிறு வயதிலேயே துறவறம்பூண்டு, பல விடங்களில் சுற்றி யலைந்து, உண்மையைக் கண்டறிந்து, சமண மதத்தைப் போதித்தார். இவர் இதன்

பின் ஜீனர் அல்லது உலகத் துன்பங்களை ஜெயித்தவர் எனக் கூறப்பட்டார். இதனுல் இவருடைய மதமும் **ஜைன மதம்** என்றும் கூறப்பட்டது.

நாயன்மார்கள் நால்வர்

இவர் போதித்த கொள்கைகளாவன : “மக்களின் நினைவு, அறிவு, செயல் இவை உயர்ந்தவைகளாக இருக்க வேண்டும். மக்களேயன்றி, விலங்குகள், பட்சிகள் தாவரங்கள் இவை எல்லாம் ஒரே கடவுளால் படைக்கப்பட்டவை. ஆதலால் அவை எல்லாவற்றிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். பட்டினி கிடந்து இறத்தலே சாலச் சிறந்தது.”

தென் இந்திய சமயப் பெரியார்கள் : புத்த மதம் சமண மதம் இவை தழைத்தோங்கிய காலத்தில் இந்து மதம் சற்று க்ஷீணமுற்றது. ஆகையால் மறுபடியும் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளிக்க ஆங்காங்கு பல மஹான்கள் தோன்றி, மதப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் **நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமயாச்சாரியார்கள்,** ஆகியவர்கள். நாயன்மார்கள் அறுபத்து மூவர்கள் ஆவார்கள். இவர்களுள் முக்கியமானவர்கள் **ஞானசம்பந்தர், அப்பர் சுந்தரர், மாணிக்கவாசகர்** ஆகியவர்கள். இவர்கள் சைவ சமயத்தை ஏற்றம் பெறச் செய்தவர்கள். இவர்கள் பல தோத்திரப் பாக்களை இயற்றியதுமன்றி, பல ஸ்தலங்களுக்கும் விஜயஞ் செய்து, அவற்றைப் பற்றியும் பாக்கள் பாடினார்கள். ஆழ்வார்கள் பனிரெண்டு பெயர்கள் ஆவார்கள். இவர்கள் திருமாலின் தொண்டர்கள். இவர்கள் வைஷ்ணவ மதப் பிரசாரம் செய்தார்கள்.

சமயாச்சாரியார்கள் **சங்கரர், இராமானுஜர், மத்துவாச்சாரியார்** ஆகியவர்கள்.

சங்கரர் : மலையாளத்தில், **காலடி** என்னும் க்ஷேத்திரத்தில், எட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் **சங்கரர்** அவதரித்தார். இவர் தனது பதினாறும் வயதுக்குள் சகல கலைகளையும் கற்று, தாயின் சம்மதம் பெற்று, துறவறத்தை மேற்கொண்டார். பிறகு வட இந்தியாவில் பல விடங்களில் சுற்றி, பல

மஹான்களைச் சந்தித்து, அவர்களின் உதவியால் தனது ஞானத்தை விருத்தி செய்து கொண்டார். இவர் சிலகாலம் காஷ்மீரிலும் தங்கி யிருந்தார். இவர் இதன்பின் தன் கொள்



சங்கரர்

கையாகிய **அத்வைதம்** என்பதைப் போதித்தார். இதன்படி ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே. ஜீவாத்மா தன் ஒவ்வொரு பிறவியிலும் ஊழ்வினைப் பயனை அனுபவித்து, பிறகு பரிசுத்தமாகி, பரமாத்மாவுடன் கலக்கின்றது. இதுவே மோட்சம் என்பதாகும். பிறருக்காக உழைத்து, அவர்களை நேசித்தல் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இவ்வகை மார்க்கத்தை, **ஞானமார்க்கம்** எனவும் கூறுவர். இவர் போதித்தது சைவ மதமாகும்.

இராமானுஜர் : இவர் வைஷ்ணவ சமயாச்சாரியார். இவர் சென்னைக்கு சுமார் 25 மைல் தூரத்திலுள்ள **ஸ்ரீபெரும்**

இராமானுஜர்

பூதூரில் கி. பி. பதினோராம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிறந்தார். இவர் **காஞ்சிபுரம்**, **ஸ்ரீரங்கம்** ஆகியவிடங்களுக்குச் சென்று, தனது அறிவைப் பெருக்கிக் கொண்டார். இவர் போதித்தது, பக்தியே முக்திக்கான மார்க்கம் என்பதாகும். தூய்மைகொண்டு, இறைவனிடத்தில் முழுமனதுடனும் பக்தி செய்து, எல்லா உயிர்களையும் நேசித்தலே முக்கியமானவை எனக் கூறினர். இவர் ஸ்ரீரங்கத்தில் இருக்கையில், சிவ

பக்தியில் ஈடுபட்டிருந்த **குலோத்துங்கசோழன்** என்னும் அரசர் இவரைத் துன்புறுத்தியதால், இவர் சில காலம் மைசூரில் வசித்து, அங்கு வைஷ்ணவ மதத்தைப் பரப்பினர். குலோத்துங்கர் இறந்தபின் இவர் ஸ்ரீரங்கத்துக்குத் திரும்பி, சில ஆண்டுகளுக்குப் பின்னர் இறந்தார். இவரது கொள்கை **விசிஷ்டாத்வைதம்** எனப்படும்.

மத்துவாச்சாரியார்: இவர் மங்களூருக்கு அருகிலுள்ள உடுப்பி என்னும் க்ஷேத்திரத்தில், பன்னிரண்டாம் நூற்ருண்

மத்துவாச்சாரியார்

டின் முடிவில் அவதரித்தார். இவரும் ஏனைய மதாச்சாரியார் களைப் போல, சிறுவயதிலேயே சகல கலைகளையும் கற்று,

மதப்பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். இவரது கொள்கை **துவைதம்** எனப்படும். இதன்படி **ஜீவாத்மா** வேறு, **பரமாத்மா** வேறு என்றும், முக்தியடைந்த பின் **ஜீவாத்மா** பரமாத்மாவின் சமீபத்திலேயே இருந்து, பரமாத்மாவிற்குப் **பக்தி** செய்கின்றது என்றும் கூறினர். இராமநுஜரைப் போலவே, இவரும் பக்தியே முக்திக்கான மார்க்கம் எனக் கூறினர். இவர் கிருஷ்ணனையே உண்மையான கடவுள் என வழிபட்டார். இவரது போதனையைப் பின்பற்றியவர்கள் **மாத்வர்கள்** எனப்படுவார்கள்.

சர்வமத சமரசப் பெரியார்கள்: இந்தியாவில் இஸ்லாமிய மதம் தோன்றிப் பரவியதைப் பற்றி அறிந்து கொண்டீர்கள். இந்துக்கள், முஸ்லீம்கள் இவர்களிடையே அடிக்கடி கருத்து வேற்றுமைகளும், மனக் கசப்பும் ஏற்பட்டன. இதனுல், பிற்காலத்தில் பல மஹான்கள் தோன்றி, சமரச ஒற்றுமைக்காகப் பாடுபட்டனர். இவர்களில் முக்கியமானவர்கள், **இராமானந்தர், கபீர்தாஸ்,** குருநானக், **அக்பர் சக்ரவர்த்தி** ஆகியவர்கள்.

இராமானந்தர் : இவர் காசியில் வசித்து வந்தார். இவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். இராமனே முக்கிய கடவுள் என நம்பினுர். கடவுள் எல்லா உயிர்களேயும் வேறுபாடின்றிக் காப்பாற்றுகின்ருர். என இவர் கூறினர். ஆகையால் இவர் சாதி, மத வேறுபாடுகளே அறவே வெறுத்தார். இவருடைய சீடர்கள் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

கபீர்தாஸ்: இராமானந்தர் சீடர்களுள் ஒருவர் **கபீர்தாஸ்.** இவர் முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்தவர். இவரது முக்கியத்தொழில் ஆடைகள் நெய்வது ஆகும். இவர், கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் என்றும், உருவ வழிபாடு

ஆடம்பர வழிபாடு இவை கூடாது என்றும் கூறினர். இறைவனிடம் பூரண பக்தி, தூய வாழ்க்கை இவற்றின் அவசியத்தையும் மக்களுக்குப் போதித்தார். இவர் இந்து, முஸ்லீம்களை ஒற்றுமைப்படுத்த முயன்றார்.

குரு நானக்: இவர் 1469-ம் ஆண்டில், பஞ்சாபில் உள்ள இலாகூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தார்.

குருநானக்

சிறுவயது முதல் இவர் ஆழ்ந்த அறிவு, கடவுள் பக்தி, சாந்த குணம் இவற்றைப் படைத்திருந்தார். இவர் கபீர்தாஸின் போதனைகளைப் பெரிதும் விரும்பி, இந்து முஸ்லீம் ஒற்றுமைக் காகப் பாடுபட்டார். இவர் **பாரசீகம், மெக்கா, காசி** முதலிய இடங்களுக்குச் சென்று வந்தார். பல்வேறு சமய நூல் களையும் கற்றார். கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் என்றும், உருவ வழிபாடு கூடாது என்றும், எல்லோரும் ஒரே

வகையான வழிபாட்டைப் பின்பற்ற வேண்டுமென்றும் கூறினர். இவரது போதனைகளைக் கொண்ட புதிய மதம் **சீக்கிய** மதம் எனப்படும். அதைப் பின்பற்றியவர்கள் **சீக்கியர்கள்.**

அக்பர் சக்ரவர்த்தி : அக்பர் சக்ரவர்த்தி அடிக்கடி பல சமயப் பெரியார்களை அழைத்து, மதப் பிரசாரம் செய்யச் சொல்வது வழக்கம். இதனுல் அவர், எல்லா சமயங்களுக்கும் பொதுவாகப் பல அடிப்படையான கொள்கைகள் இருக்கின்றன என்பதை அறிந்தார். ஆகையால் இவர் எல்லா சமயத்தவர்களையும் ஒரே வகையாக நடத்தினர். இவருக்கு முன் இருந்த மன்னர்களில் சிலர் முஸ்லீம்கள் அல்லாதவர்கள் மீது மட்டும் விதித்திருந்த வரிகளையும் அகற்றி, தம் குடிகளில் எச்சமயத்தவர்களாக இருப்பினும், அவர்கள் எல்லோரையும் சமமாக நடத்தி வந்தார்.

சமய ஒற்றுமை கண்ட மஹான்கள்:—சமீபகாலத்திலும் நம் நாட்டில் பல மஹான்கள் தோன்றி மத ஒற்றுமைக்காகப் பாடுபட்டிருக்கின்றனர். அவர்களுள் முக்கியமானவர்களைப்பற்றி இப்பொழுது அறிவோம்.

இராமகிருஷ்ணபரமஹம்ஸர்: இவர் 1836-ம் ஆண்டில் வங்காளத்தில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார். சிறுவயது முதல் இவர் சமயநூல்களைக் கற்றல், சமயப்பெரியார்களுடன் பழகுதல், ஆத்மசிந்தனை இவற்றைப் பெரிதும் விரும்பினர். சிறிதுகாலம் ***தக்ஷிணேஸ்வரம்*** என்னுமிடத்திலுள்ள காளி கோயிலில் பூசாரியாக இருந்தார். அப்பொழுது அடிக்கடி தியானத்தில் ஈடுபட்டு தன் கடமையைச் சரிவரச் செய்ய முடியாததால் அவ்வேலையை விட்டுவிட்டார். பிறகு இதர சமய நூல்களையும் கற்று, அவற்றின் அடிப்படையான பொதுக் கொள்கை உணர்ந்தார். பிற மத தூஷணைகளை

இவர் பெரிதும் வெறுத்தார். மக்கள் ஒருவருக்கு ஒருவர் செய்துகொள்ளும் தொண்டு, கடவுளுக்குச் செய்த தொண்டுக்கு ஒப்பாகும் எனக் கூறினர். இவர் தனது 51-ம் வயதில் காலமானர்.

ராமகிருஷ்ணபரமஹம்சர்

சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர்: இவர் 1862-ம் ஆண்டில் வங்காளத்தில் பிறந்தார். இவரது முதல்பெயர் **நரேந்திரன்.** இவர் சிறுவயதிலேயே பி. ஏ. பட்டம் பெற்ருர். நாளடைவில் இவருக்குத் தெய்வ நம்பிக்கை குறையலாயிற்று. ஒரு சமயம் இவர் பரமஹம்சரைச் சந்தித்தார். அச்சந்திப்பின் விளைவாக அவர் பரமஹம்சரின் பிரதம சீடராகி, துறவறம் பூண்டு **விவேகானந்தர்** எனப்பெயர் பூண்டார். பரமஹம்ஸரின் போதனைகளை உலகினுக்கு எடுத்துரைத்த பெருமை விவேகானந்தரைச் சாரும்.

1893-ம் ஆண்டில், அமெரிக்காவிலுள்ள **சிக்காக்கோ** என்னுமிடத்தில் சர்வ சமய மகாநாடு நடைபெற்றது. அச்சமயம் விவேகானந்தர் இந்தியாவிலிருந்து இந்துமதப் பிரதிநிதியாக அங்கு சென்ருர். இவருடைய எளிய சன்யாசி உடை

யைக்கண்டவர்கள், இவரைச் சாமானியமானவர் எனக்கருதி இவருக்கு எவ்வித மரியாதையும் கொடுக்கவில்லை. வெகு பிரயாசையுடன், இக்கூட்டத்தில் இவர் பேசுவதற்காக ஐந்து நிமிஷம் அவகாசம் பெற்றார். இவருக்கு முன் பேசிய ஒவ்வொருவரும், "சீமான்களே, சீமாட்டிகளே," எனப் பிரசங்கத்தைத் தொடங்கினார்கள். ஆனால் நம் விவேகானந்தரோ முதலில் "அமெரிக்க சகோதர, சகோதரிகளே", என்று துவங்கினார். அம்மண்டபத்தில் கூடியிருந்த அனைவரும் இடியோசை எனக் கைதட்டி ஆரவாரம் செய்தனர். இவ்விரண்டு சொற்களாலேயே உலக மக்களிடையே சகோதரத்துவத்தை எடுத்துக்காட்டி விவேகாநந்தர் அந்த நிமிடமே அமெரிக்கர்களின் பேரன்பைக் கவர்ந்தார். ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளினின்றும் இவருக்குப் பிரசங்க அழைப்புகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. அங்கெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து, ராமகிருஷ்ணரின் பெயரால் மடங்களை ஸ்தாபித்து, பிறகு இந்தியாவிற்குத் திரும்பினார். மேல் நாட்டவர்கள் பலர் இவரது சீடர்களானார்கள். இந்தியாவிலும் பல மடங்களைத் தனது குரு பெயரால் ஸ்தாபித்து சமூக சேவை, கல்வி வளர்ச்சி இவற்றிற்கான தொண்டுகள் செய்ய ஏற்பாடு செய்தார். இவர் 1902-ம் ஆண்டில் பரமனடி சேர்ந்தார்.

தாயுமானவர்:-இவர் பதினேழாம் நூற்றாண்டில், சோழ நாட்டில் **கேடிலியப்பபிள்ளை** என்பவரின் திருக்குமாரராக அவதரித்தார். சிறுவயது முதல் இவர் தன்னடக்கம், கடவுளிடத்து பரிபூரணபக்தி முதலிய அருங்குணங்களை அடைந்திருந்தார். இவர் சிறிது காலம் இல்லறம் நடத்தி, பிறகு துறவறம் பூண்டு, பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து, பக்தி மயமான பாடல்களைப் பாடினார். இவர் எல்லா சமயங்களையும் ஒரே நோக்கம் கொண்டு பார்க்கும் பண்புடையவர்.

இராமலிங்க சுவாமிகள் : இவர் நம் தென்னாட்டில் **1823-ம்** ஆண்டில் **மருதூர்** என்னுமிடத்தில் பிறந்தார். இதர மஹான்களைப் போல, இவரும் சிறுவயதிலேயே சிறந்த கல்வியைக் கற்றதுடன் மத விசாரணையிலும் ஈடுபட்டார். உலகில் பலமதங்களிடையே தோன்றிய வேற்றுமைகள் இவர் மனத்தைப் புண்படுத்தின. ஆகையால் அவற்றை அறவே ஒழித்து, மக்களிடையே சகோதரத்துவத்தை நிலைநாட்ட, இவர் **சமரச சன்மார்க்கம்** என்னும்முறையைக் கையாண்டார். ஆயிரக் கணக்கான பாடல்கள் மூலம் மக்களிடையே பக்தி, சமய

இராமலிங்க சுவாமிகள்

ஒற்றுமை இவைகளை வளர்த்தார். 1875-ம் ஆண்டில், **வடலூரில்** மறைந்தார்.

வேமன்ன: இவர் பதினைந்தாம் நூற்றாண்டில், தெலுங்கு தேசத்தை யாண்ட ஓர் சிற்றரசரின் சகோதரர். சிறுவயதில் இவர் கேளிக்கைகளிலும் சிற்றின்பத்திலும் ஈடுபட்டு, தனது வாழ்நாட்களை வீணே கழித்தார். இதன் பிறகு இவர், அரசன் மனைவியின் உபதேசத்தால் தூய்மையடைந்து, பக்தியில் ஈடுபட்டார். ஒரு சைவப் பெரியாரின் சேர்க்கையும் இவருக்குக் கிட்டியது. பிறகு இவர் வேதாந்த மார்க்கங்களை எளிய நடையில் கூறும் பல பாக்களை இயற்றினர். செல்வம் அநித்தியம், அதை சேமித்தல் கூடாது; கிடைத்தவரையில் அதை தான தருமங்களில் செலவிடவேண்டும்; இவை போன்ற கொள்கைகளைப் போதித்தார்.

நாராயண குரு : இவர் திருவாங்கூரில் **வர்க்கலா** என்னுமிடத்தில் 1855-ம் ஆண்டில் பிறந்தார். மலையாள நாட்டில் தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் வெகுவாகப் பரவியிருந்தது. இதை ஒழிப்பதற்காக இவர் அரும்பாடுபட்டார். பக்திரசமான பாடல்களின் மூலம் இவர் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். இவருக்குப் பல சீடர்கள் ஏற்பட்டனர். இவரது பெயரால் மடங்களும், வைத்திய சாலைகளும் நிருவப்பட்டன.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. உபநிஷத்துக்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
2. புத்தமதம், சமணமதம் இவை ஏன் தோன்றலாயின ?
3. புத்தர், மகாவீரர் இவர்கள் போதித்த கொள்கைகள் யாவை ?
4. சமயாச்சாரியார்கள் யாவர் ? அவர்கள் செய்த மதத்தொண்டுகள் யாவை ?
5. கபீர்தாஸ், குருநானக் இவர்களது சேவையைக் கூறுக.
6. கீழ்க்கண்டவர்களைப் பற்றிக் குறிப்புக் கூறுக.
   இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், இராமலிங்க சுவாமிகள், வேமன்ன, நாராயணகுரு.
7. பிறசமயங்களின் தத்துவங்களை அறிந்துகொள்ள முயற்சி செய்க.

11. நம் நாட்டிற்கு ஐரோப்பிய வியாபாரிகளின் வருகை

பல நூற்றுண்டுகளாக அராபிய வியாபாரிகள் நம் நாட்டில் முத்து, பவழம், பருத்தி ஆடைகள் வாசனைப் பொருள்கள் இவற்றை வாங்கி, ஐரோப்பிய நாடுகளுக்கு தரைமார்க்கமாகச் சென்று, அங்குள்ள மக்களுக்கு இவற்றை

விற்று வந்தனர். ஐரோப்பிய நாடுகளிலுள்ள கிறிஸ்துவ வியாபாரிகள், அராபிய வியாபாரிகள் விற்று வந்த அப்பொருள்களை எல்லாம் வாங்கிச் செல்வார்கள். அக்காலத்தில் அந் நாடுகள் கிறிஸ்தவ மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்ததால், அவர்கள் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவ வியாபாரிகளுக்கு ஆதரவு அளித்தனர். ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிலைக் கைப்பற்றிக் கொண்டு, ஐரோப்பிய வியாபாரிகள் அங்கு வருவதைத் தடுத்தனர். இக்காரணம் பற்றி, ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு ஒரு கடல் மார்க்கம் கண்டறிய விரும்பினார்கள்.

வாஸ்கோடகாமா

இம்முயற்சியில் அதிகமாக ஈடுபட்டவர்கள் **போர்ச்சுகீசிய நாட்டைச்** சேர்ந்தவர்கள். முதலில் அவர்களும் இதர ஐரோப்பிய நாட்டாரும் செய்த பல முயற்சிகள் பயனளிக்கவில்லை. இறுதியாக, 1498-ம் ஆண்டில் **வாஸ்கோடகாமா**

என்னும் பெயரையுடைய போர்ச்சுக்கீசியர் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்துமகா சமுத்திரத்தைக் கடந்து, இந்தியாவின், மேற்குக் கடற்கரையிலுள்ள **கள்ளிக்கோட்டை**(கோழிக்கோடு)என்னு மிடத்தை அடைந்தார். அப்பொழுது அங்கு ஆட்சி புரிந்த **ஜாமொரின் மன்னர்** அவரை நன்கு வரவேற்று, போர்ச்சு கீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்ய அனுமதியும், பல வசதிகளும் அளித்தார். இதற்குப் பிறகும் இரண்டொரு முறை வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்து, பல வாணிப ஸ்தலங்களையும், பண்டகசாலைகளையும் அமைத்தார். அவருக்குப் பின் வந்தவர்களும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதன் விளைவாக, **கோவா, டையூ, டாமன்** முதலிய விடங்களில் போர்ச்சுகீசிய வாணிபஸ்தலங்கள் அமைக்கப் பெற்றன.

போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவுடன் ஏகபோகமாக வாணிபம் செய்துவந்ததன் பயனாக, அவர்களுக்கு ஏராள மான இலாபம் கிடைத்தது. இதைக் கண்ட இதர ஐரோப்பிய நாட்டவர்களும் இவ்வாணிபத்தில் கலந்து கொள்ள விரும்பினார்கள். அவர்களுள் முதல்வர் **ஹாலந்து** என்னும் நாட்டைச் சேர்ந்த **டச்சுக்காரர்கள்** என்பவர்கள். இவர்கள் வங்காளத்திலுள்ள **சின்சூரா**, கிழக்குக் கடற்கரையிலுள்ள **பழவேற்காடு, நாகப்பட்டினம்** ஆகிய விடங்களில் வாணிப ஸ்தலங்களை ஸ்தாபித்துக்கொண்டனர்.

நாளடைவில் போர்ச்சுக்கீசிய வியாபாரிகளும், அதிகாரிகளும், சோம்பேறிகளாகவும், தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டும் இருந்தனர். மேலும் அவர்கள் இந்தியாவில் பலரை பலவந்தமாகக் கிறிஸ்துவ மதத்தைத் தழுவச் செய்யலானார்கள். இதனால் அவர்கள் இந்தியர்களின் வெறுப்பு, எதிர்ப்பு இவற்றைப் பெற்றனர். இக்காரணங்களாலும்,



ஐரோப்பிய வியாபார ஸ்தலங்கள்

டச்சுக்காரர்களின் போட்டியாலும், இந்தியாவில் போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கமும், வாணிபமும் குன்றலாயின.

டச்சுக்காரர்களுக்குப் பின் இந்தியாவிற்கு வாணிபத்திற்காக வந்தவர்கள் **ஆங்கிலேயர்கள்.** 1600-ம் ஆண்டில் சில ஆங்கில வியாபாரிகள் **ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கம்** என்னுமோர் சங்கத்தை ஸ்தாபித்து, அப்பொழுது இங்கிலாந்தில் அரசுபுரிந்த **எலிஸபெத்** மகாராணியிடம் வாணிப உரிமைச் சாசனமும் பெற்றனர். அவருக்குப்பின் இங்கிலாந்தை ஆண்ட **முதலாம் ஜேம்ஸ்** என்பவர் ஜஹாங்கீரின் சபைக்கு **ஹாகின்ஸ், ஸர்தாமஸ் ரோ** என்னும் இருவரை அனுப்பியதைப் பற்றி அறிந்தீர்கள் அல்லவா ? ஆங்கிலேயர்கள் இங்கு வந்தவுடன் அவர்களுக்கும், டச்சுக்காரருக்கும் பலத்த வாணிபப்போட்டியும், அதன் விளைவாகப் போரும் நிகழ்ந்தன. இறுதியாக, டச்சுக்காரர்கள் இந்தியாவை விட்டு, **கிழக்கு இந்தியத் தீவுகளில்** பல நூற்றுண்டுகள் ஏகபோகமாக வாணிபம் செய்தனர்.

இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள், மேற்குக் கடற்கரையில் சூரத்திலும், கிழக்குக் கடற்கரையில் **மசூலிப் பட்டினத்திலும்,** உள்நாட்டில், ஆக்ராவிலும் தங்களுடைய வாணிப ஸ்தலங்களை ஸ்தாபித்துக் கொண்டனர். பிறகு 1639-ம் ஆண்டில் **ஸர் பிரான்ஸிஸ் டே** என்பவர் **சந்திரகிரி** மன்னரிடமிருந்து சென்னை நகரை விலைக்கு வாங்கினார். இதைப்பற்றி ஒன்பதாம் பாடத்தில் படித்தீர்கள். அங்கு ஆங்கிலேயர்கள் **செயிண்ட் ஜார்ஜ் கோட்டை**யைக் கட்டினார்கள். அக்கோட்டையை இன்றும் காணலாம். 1661-ம் ஆண்டில் இங்கிலாந்தின் மன்னரான **இரண்டாம் சார்லஸ்** என்பவர் போர்ச்சுகீசிய இளவரசியை மணந்தார். அப்பொழுது **பம்பாய்த்தீவு** அவருக்குச் சீதனமாக அளிக்கப்பட்டது. அதை

அவர் ஆங்கில வர்த்தகக் கம்பெனியாருக்கு ஆண்டுக்குப் பத்து பவுன் வீதம் வாடகைக்குக் கொடுத்தார். பிறகு ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் **ஹூக்ளி, டாக்கா, பாலசூர்** ஆகிய இடங்களிலும் தங்களுடைய பற்றிடங்களை அமைத்துக் கொண்டனர். 1690-ம் ஆண்டில் **ஜாப்சார்னுக்** என்பவர் ஹூக்ளி நதியின் முகத்துவாரத்துக்கு அருகில் மூன்று கிராமங்களை வாங்கி, அங்கு **போர்ட்வில்லியம்** என்னுமோர் கோட்டையை அமைத்தார். அதுவே பிறகு **கல்கத்தா** நகரமாயிற்று. இவ்வாறு ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்களுடைய பற்றிடங்களைஅமைத்துக்கொண்டு வாணிபத்தைப் பெருக்கினார்கள்.

ஆங்கிலேயர்களுக்குப் பிறகு இந்தியாவில் வாணிபம் செய்ய வந்த பிரெஞ்சுக்காரர்கள் **பிரஞ்சுக் கிழக்கிழந்திய வர்த்தகச் சங்கம்** என்னுமோர் சங்கத்தை ஸ்தாபித்து, இந்தியாவுடன் வாணிபம் செய்ய ஆரம்பித்தனர். அவர்களுடைய பற்றிடங்கள் **சூரத், புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும், சந்திரநாகூர்** ஆகியவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

டியூப்ளே

வாணிப விஷயமாக, தென் இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் பலத்த போட்டியும், விரோதமும் எற்பட்டன. 1741-ம் ஆண்டில் **டியூப்ளே** என்பவர் பிரஞ்சு கவர்னர் ஜெனரலாக, புதுச்சேரிக்கு வந்தார். இவர் ஆங்கிலேயர்களை இந்தியாவிலின்றும் அறவே துரத்தி விட்டு, பிரெஞ்சு வாணிபத்தையும்

ஆதிக்கத்தையும் பலப்படுத்த விரும்பினர். இக்காரணத்துக்காக, இவர் புதுச்சேரிக் கோட்டையைப் பலப்படுத்தி, ஓர் சிறந்த படையையும் தயாரித்தார். பிறகு தென் இந்தியாவில் ஆட்சிபுரிந்த இந்திய மன்னர்களின் விஷயங்களில் தலையிட்டு, அவர்களது உதவி பெற்று, ஆங்கிலேயர்களை இந்தியாவினின்றும் ஒழிக்கத் திட்டமிட்டார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும், பல காரணங்களால் போர் மூண்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள நினைத்த டியூப்ளே, உடனே ஆங்கிலேயர்கள் மீது தென் இந்தியாவில் போர் தொடுத்து, சென்னை நகரை எளிதில் கைப்பற்றினர். அங்கிருந்து தப்பியோடிய ஆங்கிலேயர்கள், சென்னைக்குத் தெற்கில் தங்களுக்குச் சொந்தமான மற்றொரு இடமாகிய **செயிண்ட் டேவிட் கோட்டைக்குச்** சென்றனர். அவ்விடத்தையும் கைப்பற்ற, டியூப்ளே செய்த முயற்சி கைகூடவில்லை. இச்சமயத்தில் ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டதால், இங்கு டியூப்ளே போரை நிறுத்தி, சென்னையை ஆங்கிலேயர்களிடம் திருப்பிக் கொடுக்க நேர்ந்தது.

சில ஆண்டுகளுக்குப்பின் **ஹைதராபாத்திலும், கர்நாடகத்திலும்** பட்டத்துக்காக வாரிசு உரிமைப் போட்டி ஏற்பட்டது. ஹைதராபாத்தில் போட்டியிடுபவர்களில் ஒருவரான **முஸபர்ஜங்** என்பவரும், கர்னடகத்தில் **சந்தா சாகிப்** என்பவரும் டியூப்ளேயின் உதவி பெற்று, பட்டம் பெற்றனர். இதனல் இவ்விரண்டு இடங்களிலும் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்குப் பெருகியது. சந்தா சாகிப், அப்போது கர்நாடகத்தை ஆண்டுவந்த **அன்வாருத்தீன்** என்பவரைக் கொன்று

அவரது தலைநகராகிய **ஆற்காட்டைக்** கைப்பற்றி நவாபானுர். அன்வாருத்தீனின் குமாரரான **முகமது அலி** என்பவர் தப்பியோடித் திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டார். அவர் அப்பொழுது ஆங்கிலேயர்களின் உதவியை நாடினுர். அப்பொழுது ஆங்கிலப் போர் வீரராக இருந்த

கிளைவ்

கிளைவ் என்பவர் ஆங்கில கவர்னருக்கு ஒரு ஆலோசனை கூறினுர். அதாவது 'சந்தா சாகிப், பிரெஞ்சுக்காரர்கள், இவர்களின் படைகள் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டுக் கொண்டிருந்ததால் கர்நாடகத்தின் தலைநகராகிய ஆற்காட்டில் வெகு சில துருப்புக்களே இருக்கும்; ஆங்கிலேயர்கள் அந்நகரை உடனே தாக்கினுல், அதைச் சுலபமாகப் பிடித்துக் கொள்ளக்கூடும். அச்சங்கதியைக் கேள்விப்பட்டவுடன் சந்தா சாகிபும், அவரது நண்பர்களும் திருச்சிராப்பள்ளியின் முற்றுகையை விட்டு, ஆற்காட்டுக்கு விரைவார்கள். உடனே முகம்மதுஅலி திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளியே வந்து

தன் விரோதிகளைத் தாக்கக்கூடும். இதைக் கேட்ட ஆங்கிலக் கவர்னர், கிளைவையே ஆற்காட்டைப் பிடிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவரும் அவ்வாறே செய்தார். மற்றவைகளும் அவர் எதிர்பார்த்தபடியே நடந்தன. போரில் தோல்வியுற்ற சந்தசாகிப் தஞ்சாவூருக்கு ஓடி, அங்கு ஆட்சி புரிந்த அம் மன்னரால் கொல்லப்பட்டார். முகம்மதுஅலி ஆற்காட்டு நவாப் ஆனுர். ஹைதராபாத்திலும் புதிதாகப் பட்டம்பெற்ற மன்னர் பிரெஞ்சுக்காரரின் நட்பை விட்டு, ஆங்கிலேயரின் நட்பை நாடினுர். இவ்வாறு தட்சிணத்திலும், கர்நாடகத்திலும், பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்று, ஆங்கில ஆதிக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. டியூப்ளே தன் தாய் நாட்டிற்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

சில ஆண்டுகளுக்குப்பின் தென் இந்தியாவில் மீண்டும் இவ்விரு ஐரோப்பிய நாட்டினருக்கும் போர் ஏற்பட்டது ஆங்கிலேயர்கள் புதுச்சேரியைக் கைப்பற்றி, பிரெஞ்சுக்காரரைப் பல விடங்களில் முறியடித்தனர். புதுச்சேரியிலுள்ள கோட்டை தகர்க்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது. ஆனல் அவர்கள் அங்கு கோட்டைகளை அமைக்கக் கூடாதெனக் கூறப்பட்டது.

தென் இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட போர்களுக்குக் **கர்நாடகப் போர்கள்** எனப் பெயர். இவற்றின் விளைவாக, ஆங்கிலேயர்கள் தென் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டனர்.

வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் எழுச்சி : வங்காளத்தில் ஆங்கிலேயர்கள் கல்கத்தா முதலிய இடங்களில் வாணிபம் செய்து வந்தார்கள் அல்லவா ? அப்பொழுது வங்காள

நவாபாக இருந்த **சிராஜ்உத் தௌலா** என்பவர் ஆங்கிலேயர்கள் மீது பொறாமை கொண்டு, அவர்களைத் துரத்த எண்ணினார். இதற்காக அவர் சந்திரநாகூரில் உள்ள பிரெஞ்சுக்காரர்களுடன் உறவுபூண்டு, ஆங்கிலேயர்களைத் துரத்த எண்ணினார். கல்கத்தாவைக் கைப்பற்றிக்கொண்டு, ஆங்கிலேயர்களைத் துன்புறுத்தினார். அப்பொழுது சென்னையிலிருந்த **கிளைவ்** ஓர் பெரும் படையுடன் வங்காளத்திற்கு வந்து, **மீர்ஜாபர்** என்பவரின் உதவி பெற்று, 1757-ம் ஆண்டில் **பிளாஸி** என்னுமிடத்தில் சிராஜ்உத் தௌலாவைத் தோற்கடித்துக் கொன்று, மீர்ஜாபரை வங்காள நவாப் ஆக்கினார். அவர் தன் நன்றியை ஆங்கிலேயர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, **இருபத்து நான்கு பர்காணங்கள்** என்னும் தெற்கு வங்காளத்திலுள்ள பகுதிகளை ஆங்கிலேயர்களுக்கு அளித்தார். இவ்வாறு இங்கு வாணிபம் புரியவந்த ஆங்கிலேயர்கள் நாடாளவும் ஏற்பட்டது. "ஆட்சிக் கொடி வாணிபத்தைப் பின்பற்றியது."

கேள்விகளும், பயிற்சிகளும்

1. முன்னாட்களில் இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே ஏன் வாணிபம் தொடங்கியது ?
2. துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியதன் விளைவு யாது ?
3. வாஸ்கோட காமாவைப் பற்றிக் குறிப்பு வரைக.
4. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கம் குன்றக் காரணங்களென்ன ?
5. ஆங்கிலேயர்களுக்கு சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவிடங்கள் எவ்வாறு கிடைத்தன ?
6. இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்யத்துக்கு அடிகோலியவர் கிளைவ் என்பது எங்ஙனம் பொருந்தும் ?
7. இந்தியா படத்தில் வெவ்வேறு ஐரோப்பிய நாட்டினர்களின் பற்றிடங்களைக் குறிப்பிடுக.
8. உங்கள் ஊருக்குச் சமீபத்தில் சரித்திர சம்பந்தமான பொருட்காட்சி சாலை ஏதேனுமிருப்பின் அங்கு சென்று பார்க்கவும்.

12. நம் நாட்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி

1. **கிளைவ்** : பிளாசி வீரரான கிளைவ் வங்காளத்தில் முதல் கவர்னராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவர் அங்கு பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். முகலாய சக்ரவர்த்தி யாகிய **ஷா ஆலம்** என்பவருடன் **அலகாபாத்தில்** செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் வரிவசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர்கள் பெற்றார்கள். கிளைவ் வரி வசூலித்தல், நீதி விசாரணை இவற்றிற்காக இரண்டு உதவி நவாபுகளை நியமித்து விட்டு, நிதி, பாதுகாப்பு இவற்றை ஆங்கிலேயர்களே வைத் திருக்க ஏற்பாடு செய்தார். இதற்கு **இரட்டை ஆட்சி** எனப் பெயர். இதன் பிறகு கிளைவ் பதவியினின்றும் விலகி, இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

2. **வாரன்ஹேஸ்டிங்ஸ்** : (1772-1785) கிளைவுக்குப் பின், **வாரன்ஹேஸ்டிங்ஸ்** வங்காள கவர்னராக நியமிக்கப் பட்டார். அவர் ஏற்கனவே இந்தியாவில் ஆங்கில வர்த்தக அனுபவமும் திறமையும் பெற்றிருந்தார்.

இவர் பதவி ஏற்றதும், பல சீர்திருத்தங்களைச் செய்தார். கிளைவ் நியமித்த உதவி நவாபுகள் தங்களுடைய அலுவல் களைப் பதவியினின்றும் நீக்கி, இரட்டையாட்சியையும் ஒழித் தார். வரிவசூலுக்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஆங்கில கலெக்டரை நியமித்தார். அவரே நீதி விசாரணையையும் கவனிக்க வேண்டுமென ஏற்பாடு செய்தார். நாட்டின் சட் டங்களைத் தொகுத்து, நீதி விசாரணையில் நீதிபதிகளுக்கு

உதவிபுரிய, அறிஞர்களை நியமித்தார். போலீஸ் படைகளையும் திருத்தி அமைத்தார்.

ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி முறை சரியாக இல்லையென்ற புகார்கள் இங்கிலாந்திற்கு எட்டின. ஆகையால் இந்நிலையைச் சீர்திருத்துவதற்காக இங்கி

வாரன் ஹேஸ்டிங்ஸ்

லாந்து பார்லிமெண்டில் ஒரு புதிய சட்டம் பிறப்பிக்கப் பட்டது. இதற்கு **ஒழுங்குபடுத்தும் சட்டம்** எனப் பெயர். இதன்படி வங்காள கவர்னர், **கவர்னர் ஜெனரல்** என அழைக் கப்பட்டார். இவருக்கு உதவியாக ஒரு சிறு சபையும் அமைக்கப்பட்டது. சென்னை, பம்பாய் கவர்னர்கள் கவர் னர் ஜெனரலுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். கல்கத் தாவில் ஓர் புதிய உயர்தர நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

இச் சட்டத்தின்படி வாரன்ஹேஸ்டிங்ஸ், முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் அவருக்கும்,

அவருக்கு உதவியாக அமைக்கப்பட்ட சபை அங்கத்தினர்கள் சிலருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. சிறிது காலம் பொறுத்து, அவர்களில் ஒருவர் இங்கிலாந்துக்குத் திரும்பினர். மற்றொருவர் காலமானர். இதன் பிறகு வாரன்ஹேஸ்டிங்ஸ் இடையூறின்றி ஆட்சி புரிந்தார்.

இதன் பிறகு வாரன்ஹேஸ்டிங்ஸ் மகாராஷ்டிரர்களுடன் போரிட்டு, **ஸால்ஸெட்** என்னும் தீவைப் பெற்ருர். அடுத்த படியாக, மைசூர் மன்னரான **ஹைதர்அலி** என்பவருடன் போரிட்டு, வெற்றி கண்டார்.

வாரன்ஹேஸ்டிங்ஸ் மறுமுறை மகாராஷ்டிரர்களுடன் போரிடுகையில் ஹைதர் அலி திடீரென சென்னைக்கு அருகில் வந்துவிட்டார். **ஸர் அயர் கூட்** என்ற ஆங்கிலப்படைத்தலைவர் ஹைதரைப் பலவிடங்களில் முறியடித்தார். போர் நடந்து கொண்டு இருக்கையிலேயே ஹைதர்அலி மரணமடைந்தார். அவருக்குப் பின் வந்த அவரது குமாரரான **திப்பு சுல்தான்** சிறிதுகாலம் போரைத் தொடர்ந்து நடத்தினர். பிறகு இவருக்கும்,ஆங்கிலேயர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டது.

ஹைதர் அலி

ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தோன்றிய சில குறைபாடுகளை நீக்கவும், வர்த்தகக் கம்பெனியின்மீது ஆங்கில அரசாங்கத்தின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவும், 1784-ம்

ஆண்டில் ஓர் புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதற்கும் **பிட் இந்திய சட்டம்** எனப் பெயர்.

1785-ம் ஆண்டில் வாரன்ஹேஸ்டிங்ஸ் பதவியினின்றும் விலகினார்.

3. **காரன்வாலிஸ் பிரபு:** (1786—1793) வாரன்ஹேஸ்டிங்ஸுக்குப் பின், **காரன்வாலிஸ் பிரபு** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். மைசூர் மன்னரான திப்பு சுல்தான் தென் இந்தியாவில் பலவிடங்களைக் கைப்பற்றிக் கொண்டு பிறகு திருவாங்கூரையும் தாக்கினார். திருவாங்கூர் மன்னர்

காரன்வாலீஸ்பிரபு

திப்புசுல்தான்

ஆங்கிலேயர்களின் நண்பர் ஆதலால், அவர்கள் உடனே திப்புவுடன் போர் தொடுத்தார்கள். காரன்வாலிஸ் பிரபு ஒரு சிறந்த போர்வீரர் ஆதலால் அவரே படைகளைச் செலுத்திச் சென்று, திப்புவின் தலைநகராகிய **சீரங்கப்பட்டணத்தை** முற்றுகையிட்டார். இறுதியில் திப்பு பணிந்து, தன் இராஜ்

யத்தின் ஒரு பகுதியாகிய **திண்டுக்கல், சேலம், மலையாளம்** முதலியவற்றை ஆங்கிலேயர்களுக்கு அளித்தார்.

இதன் பிறகு காரன்வாலிஸ் பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். இவற்றுள் மிகவும் முக்கியமானது **சாசுவத நிலவரி வசூல் திட்டம்** என்பதாகும். முகலாய மன்னர்கள் காலத்தில் **ஜமீந்தார்கள்** என்பவர்கள் குடிகளிடமிருந்து நிலவரியை வசூலித்து, அதில் ஓர் பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்திவிட்டு, மிகுந்ததை தாங்கள் எடுத்துக்கொள்வது வழக்கம். வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நிலவரி வசூலிக்கும் உரிமை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்பட்டது. இதில் பல குறைபாடுகள் தோன்றியதால் காரன்வாலிஸ்பிரபு **சாசுவத நிலவரி வசூல் திட்டத்தை** ஏற்படுத்தினர். இதன்படி ஜமீன்தார்கள் நிலங்களின் சொந்தக்காரர்களெனக் கருதப்பட்டு, அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய துகை நிரந்தரமாகக் குறிப்பிடப்பட்டது. அவர்கள் குடிகளிடம் அதிகக் கடுமையாக வரி வசூலிக்காமலிருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவற்றின் விளைவாக, ஜமீன்தார்கள் தங்களது நிலங்களை மேலும் வளம் பெறச் செய்தனர். நாடு சுபிட்சமாயிற்று. இத்திட்டம் **வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா** ஆகிய விடங்களில் அமுலுக்கு வந்தது.

பிறகு காரன்வாலிஸ்பிரபு நீதி விசாரணையிலும் சீர்திருத்தங்கள் செய்தார். வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஜில்லா கலெக்டர்களே நிலவரி வசூல், நீதி விசாரணை ஆகிய இரு அலுவல்களையும் கவனித்து வந்தனர். அவர்களுக்கு வேலை மிகவும் அதிகமாக இருப்பதை உணர்ந்து காரன்வாலிஸ் பிரபு, நீதி விசாரணைக்காகப் பிரத்தியேக நீதிபதிகளை நியமித்

தார். சில வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மட்டும் கலெக்டர்களுக்கு விடப்பட்டிருந்தது.

காரன்வாலிஸ் பிரபு 1793-ம் ஆண்டில் இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

4. **வெல்லெஸ்லி பிரபு :** (1798—1805) காரன் வாலிஸ் பிரபுவுக்குப்பின், ஸர் **ஜான்ஷோர்** என்பவர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவர் **தலையிடாக் கொள்கை**

வெல்லெஸ்லி பிரபு

யைப் பின்பற்றினார். அதன்படி இந்திய மன்னர்களின் விவகாரங்களில் தலையிடாமலிருந்தார். இதனால் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு ஓரளவு குறைந்தது.

இவருக்குப் பின் **வெல்லெஸ்லி** பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவர் இங்கு வந்த சமயத்தில் இந்திய மன்னர்களிடையே ஆங்கிலேயர்களின் செல்வாக்கு

வெல்லெஸ்லி காலத்திய இந்தியா



வெல்லெஸ்லி காலத்திய இந்தியா

குன்றியிருப்பதையும்,பிரெஞ்சு ஆதிக்கம் மீண்டும் தலை தூக்கியிருப்பதையும் கண்டார். மஹாராஷ்டிரர்கள், திப்பு சுல்தான் ஆகியவர்கள் தங்களது சபைகளில் பிரெஞ்சுக்காரர்களை வைத்துக்கொண்டு, அவர்களது உதவியால் தங்கள் படைகளையும் பலப்படுத்தி வந்தார்கள்.ஐரோப்பாவில் பெயர்பெற்ற பிரெஞ்சுத் தலைவரான **நெப்போலியன்** என்பவர், திப்புவின் உதவியைக் கொண்டு இந்தியாவின்மீது படையெடுக்கத் திட்டமிட்டிருந்தார். இவற்றையெல்லாம் அறிந்த **வெல்லெஸ்லி பிரபு**, இந்தியாவில் மீண்டும் ஆங்கில ஆதிக்கத்தை ஸ்தாபிக்க **துணைப்படைத் திட்டம்** என்னுமொரு திட்டத்தை வகுத்தார். இதன்படி இந்திய மன்னர்களில் ஒவ்வொருவரும் தமது பாதுகாப்புக்காக ஓர் ஆங்கிலப் படையையும், ஸ்தானீகரையும் தங்களது சபையில் தங்களுடைய செலவில் வைத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் எல்லோரும் ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆங்கிலேயர்கள் அவர்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமாட்டார்கள். அம்மன்னர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆங்கிலேயர்களின் உத்திரவின்றி சண்டையோ, சமாதானமோ செய்துகொள்ளக் கூடாது. அவர்கள் ஆங்கிலேயர்களைத் தவிர, இதர ஐரோப்பியர்களுடன் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது.

இத்திட்டத்தை முதன் முதலில் ஒப்புக்கொண்டவர் **ஹைதராபாத்தை** ஆண்ட நிஜாம் மன்னர். ஒருபுறம் திப்புவாலும், ஒரு புறம் மகாராஷ்டிரர்களாலும் துன்புறுத்தப்பட்ட இவர் உடனே இத்திட்டத்தை ஒப்புக்கொண்டார். துணைப்படைச் செலவுக்காக அவர் ஆங்கிலேயர்களுக்குக் **கடப்பை, கர்நூல், அனந்தப்பூர், பல்லாரி** ஆகிய பகுதிகளைக் கொடுத்தார். அவை இன்றும் **கொடை ஜில்லாக்கள்** என வழங்கப்

படுகின்றன. அடுத்தபடியாக **அயோத்தி நவாபும்** இத்திட்டத்தை ஒப்புக்கொண்டு ஆங்கிலேயருக்கு கங்கை-யமுனை நதிகளுக்கு இடையேயுள்ள பகுதிகளையும், **ரோகில் கண்டு** என்னும் பிரதேசத்தையும் கொடுத்தார். மஹாராஷ்டிரர்கள், திப்பு சுல்தான் இவர்கள் இத்திட்டத்தை ஒப்புக்கொள்ள மறுக்கவே, வெல்லெஸ்லி பிரபு அவர்களுடன் போர் தொடுத்தார்.

பம்பாயிலிருந்து ஓர் ஆங்கிலப் படையும், சென்னையிலிருந்து மற்றொரு படையும் மைசூரைத் தாக்கின. இரண்டு படைகளாலும் தோற்கடிக்கப்பட்ட திப்பு சுல்தான் தலைநகராகிய **சீரங்கப்பட்டணத்துக்குள்** புகுந்துகொண்டார். ஆங்கிலேயர்கள் அங்கும் தாக்கவே, திப்பு இறுதிவரை போர்புரிந்து உயிர் நீத்தார். அந்த இராஜ்யத்தின் ஒரு பகுதியை, அதன் பழைய இந்து அரச பரம்பரையினருக்குக் கொடுத்துவிட்டு மிகுந்தவற்றை ஆங்கிலேயர்கள் தங்கள் நண்பர்களுடன் பங்கிட்டுக் கொண்டார்கள். இவ்வகையில் ஆங்கிலேயர்களுக்கு **கன்னடம், கோயமுத்தூர்** முதலிய பிரதேசங்கள் கிடைத்தன. **தஞ்சாவூர், கர்நாடகம்** ஆகிய பகுதிகளையும் வெல்லெஸ்லி பிரபு வெவ்வேறு காரணங்களுக்காக ஆங்கில ஆட்சியில் சேர்த்துக் கொண்டார். இவ்வாறாக அவர் காலத்தில் சென்னை மாகாணம் உருவாகியது.

பிறகு வெல்லெஸ்லி பிரபு மஹாராஷ்டிரர்களுடன் போர் தொடுத்து அவர்களுடைய தலைவர்களில் பலரைத் தோற்கடித்து, **டில்லி, ஆக்ரா** மத்திய இந்தியாவில் சில பகுதி ஆகியவற்றைப் பெற்றார். கிளைவ், வாரன்ஹேஸ்டிங்ஸ் இவர்களுக்கு அடுத்தபடி இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்யத்யத்தை விஸ்தரித்து, நிலைநாட்டிய பெருமை வெல்லெஸ்லி பிரபுவைச் சாரும்.

5. ஹேஸ்டிங்ஸ் பிரபு : (1813-1823) வெல்லெஸ்லி பிரபுவுக்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்தவர்களுள் முக்கியமானவர் ஹேஸ்டிங்ஸ் பிரபு. இவர் காலத்திலும் இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்யம் பெரிதும் விஸ்தரிக்கப்பட்டது.

ஹேஸ்ட்டிங்ஸ் பிரபு பதவிக்கு வந்த சிறிது காலத்துக்குள், இமயமலைச் சாரலிலுள்ள **நேபாளம்** என்னும் நாட்டில் வசித்துவந்த **கூர்க்கர்** என்பவர்களுடன் போர் தொடங்க வேண்டியதாயிருந்தது. கூர்க்கர்கள் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான பலவிடங்களைத் தாக்கினர்கள். ஆகவே போர் மூண்டது. இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். அவர்களுக்குச் **சிம்லா, நைனிட்டால்** முதலிய ஆரோக்கிய வாசஸ்தலங்கள் கிடைத்தன.

மஹாராஷ்டிரத் தலைவர்களில் பலருடன் மீண்டும் போர் ஏற்பட்டது. ஆனல் அவர்கள் எல்லோரும் தோற்கடிக்கப் பட்டனர். இதன் விளைவாக ஆங்கிலேயர்களுக்கு மத்திய இந்தியா, மேற்கு இந்தியாப் பகுதிகளில் பல பிரதேசங்கள் கிடைத்தன. இதனுல் பம்பாய், மத்திய மாகாணம் இவை உருவாயின.

இப்போர்களுக்கிடையே, ஹேஸ்டிங்ஸ் பிரபு மக்களுக்குப் பல நன்மைகளும் புரிந்தார். மத்திய இந்தியாவில் வசித்து வந்த கொள்ளைக் கூட்டத்தவர்களாகிய **பிண்டாரிகள்** என்பவர்களை ஒழித்தார். நாடு முழுவதும் சாலைகள், பாலங்கள் இவற்றை அமைத்தார். கல்வி அபிவிருத்திக்காகப் பல பாடசாலைகளையும் ஸ்தாபித்தார்.

6. வில்லியம் பெண்டிங்க் பிரபு : (1828-1835) ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்தவர் **அமெர்ஸ்டு பிரபு.** இவர் காலத்தில் பர்மாவுடன் ஏற்பட்ட போரில், ஆங்கிலேயருக்குப் பல இடங்கள் கிடைத்தன.

இவருக்குப் பின் வில்லியம் பெண்டிங்க் பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தார். இவருக்கு இந்தியர்களின்மீது அதிகப் பற்று உண்டு. முதன் முதலாக, அவர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை அளித்தார்.

நம் நாட்டு மக்களிடையே **சதி** என்னும் கொடிய வழக்கம் இருந்ததைப்பற்றி, முன்பு கூறப்பட்டது. அக்பர் அதை

பெண்டிங்க் பிரபு

ராஜாராம் மோஹன்ராய்

அறவே ஒழிக்க முயன்று, வெற்றி பெறுமல், கட்டாய சதியை மட்டும் ஒழித்தார் எனப் படித்தீர்கள். அக்காலத்தில் வசித்த வங்காள அறிஞரான **ராஜாராம் மோஹன்ராய்** என்பவரின் உதவியைக் கொண்டு, பெண்டிங்க் பிரபு சதியை அறவே ஒழித்தார். மேலும் அவர் மக்களுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்து வந்த **தக்கர்கள்** என்னும் கொள்ளைக் கூட்டத்தவர்களை அறவே ஒழித்தார். இந்தியக் குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி போதிக்க நாடெங்கும் பாடசாலைகளை ஸ்தாபித்தார். குடகு நாட்டை ஆண்ட மன்னர் சரியாக ஆட்சி

புரியாததால் பெண்டிங்க் பிரபு அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு, அவருடைய இராஜ்யத்தைச் சேர்த்துக் கொண்டார்.

7. டெல்ஹெளஸி பிரபு(1848-1856) இந்தியாவில் ஆட்சி புரிந்த முக்கிய கவர்னர் ஜெனரல்களுள் ஒருவர்

டல்ஹௌஸி பிரபு

டல்ஹௌஸி பிரபு. இவர் காலத்தில் இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்யம் பெரிதும் விஸ்தரிக்கப்பட்டது. மேலும் இவர் மக்களுக்குப் பல நன்மைகளும் செய்தார்.

சீக்கியர்கள் பஞ்சாபில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். என்பதை அறிவீர்கள் அன்றோ? டல்ஹௌஸி பிரபு காலத்தில் அவர்கள் ஆங்கிலேயருக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்து வந்தனர். ஆகையால் அவர் சீக்கியருடன் போரிட்டு வென்று, அவர்களது மன்னருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு, பஞ்சாப் முழுவதையும் ஆங்கில ஆட்சி

யில் சேர்த்துக்கொண்டார். பர்மாவில் ஆங்கில வியாபாரிகளை அந்நாட்டு மன்னர் துன்புறுத்தியதால், டல்ஹௌஸி பர்மாவுடன் போரிட்டு, இரங்கூன் முதலிய பகுதிகளைக் கைப் பற்றினார்.

நெடுங்காலமாக நம் நாட்டில் ஆண் சந்ததியில்லாத மன்னர்கள் ஒரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டு அவ



டல்ஹௌஸி காலத்து இந்தியா

னுக்கு, தங்களுக்குப் பின் பட்டத்தைக்கொடுப்பது வழக்கம். ஆனால் டல்ஹௌஸி பிரபு இப்பொழுது **அவகாசியிலிக்**

கொள்கை என்னும் ஒரு புதியகொள்கையை வெளியிட்டார். இதன்படி ஆண் வாரிசு அற்றவர்கள் சுவீகாரம் செய்து கொள்ளுதல் கூடாது என்றும், அவர்களது நாடுகள் அவர்களுக்குப் பின் ஆங்கிலேயர்களைச் சாரும் என்றும் கூறினர். இதன்படி அவர் **சதாரா, நாகபுரி, ஜான்ஸி** முதலிய இராஜ்யங்களை ஆங்கில சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். மேலும் இந்திய மன்னர்களில் பலருக்கு அளிக்கப்பட்டிருந்த பட்டம், பதவிகள், உபகாரச்சம்பளம் இவற்றையும் பல்வேறு காரணங்களுக்காக ரத்து செய்தார்..

இப்போர்களுக்கு இடையே, இவர் மக்களுக்குப் பல நன்மைகளையும் செய்தார். இவர், முன்பு ஹர்ஷர் அமைத்திருந்த சாலையை யொட்டி வங்காளம் முதல் பிஷாவர் வரை ஒரு சிறந்த சாலையை அமைத்தார். இவர் காலத்தில்தான் நம் நாட்டில் முதன் முதலாக இருப்புப் பாதை போடப்பட்டது. இது **பம்பாயிலிருந்து தாணு** என்னும் இடம்வரை அமைக்கப்பட்டது. தபால், தந்தி இவையும் ஏற்படுத்தப் பட்டன. நீர்ப்பாசனக் கால்வாய்களும் தோண்டப்பெற்றன. கல்வியைப் பரப்ப, பல பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. பாடசாலைகளை மேற்பார்வையிட, கல்வி இலாகா அமைக்கப் பட்டது.

8. 1858-ம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா : டல்ஹௌஸி பிரபு பல நாடுகளைப் பிடித்ததால், அந்நாடுகளை இழந்த மன்னர்களும், அங்கு கலைக்கப்பட்ட படைவீரர்களும் பட்டம் ஆட்சியை வெறுத்தனர். அவர்செய்த சீர்திருத்தங்கள் மக்களின் மத விஷயங்களைப் பாதிக்கின்றன என்றும், ஒரு சாரார் கருதினர்கள். ஆங்கில ஆட்சி, பிளாசிபோருக்குப்பின், நம் நாட்டில் நூறு ஆண்டுகள்தான் நிலைத்திருக்கும் என்ற

கூற்று பலரால் நம்பப்பட்டது. இறுதியாக, சிப்பாய்களுக்குப் புதிய தோட்டாக்கள் கொடுக்கப்பட்டன. இவற்றின் மீது பசுவின் கொழுப்பும், பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளன என்ற வதந்தி உலாவியது. இதை யறிந்த, ஹிந்து, முஸ்லீம் வீரர்கள் இத் தோட்டாக்களைப் பெற மறுத்து, கலகம் விளைவித்தனர். இதற்குச் **சிப்பாய்க் கலகம்** அல்லது **முதல் இந்திய சுதந்திரப்போர்** எனப் பெயர் கொடுக்கப் பட்டது.

முதன் முதலில், ஆங்கிலேயர்கள் பல விடங்களில் தோல்வியுற்றனர். அவர்களில் பலர் கொல்லவும் பட்டார்கள். இறுதியாக, கலகம் அடக்கப்பட்டது.

இக் கலகத்தினல், ஆங்கில வர்த்தகக் கம்பெனிக்கு ஆட்சித் திறமை இல்லை எனக் கருதப்பட்டு, அக் கம்பெனி கலைக்கப்பட்டது. இந்திய ஆட்சியை அப்போது இங்கிலாந்தில் அரசு புரிந்த **விக்டோரியா மகாராணி** ஏற்றுக்கொண்டார். இந்தியாவில் இவரது அலுவல்களைக் கவனிக்க, **வைஸ்ராய்** அல்லது **இராஜப் பிரதிநிதி** நியமிக்கப்பட்டார். கலகக் காலத்தில் கவர்னர்ஜெனரலாக இருந்த **கானிங் பிரபு** என்பவர் முதல் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்களைப் பற்றிக் கூறுக.
2. ஒழுங்கு படுத்தும் சட்டம் ஏன் ஏற்பட்டது ? அதன் ஷரத்துக்கள் யாவை ?
3. காரன்வாலிஸ் பிரபுவின் நிலவரிச் சீர்திருத்தத்தைப் பற்றிக் கூறுக.
4. துணைப்படைத் திட்டத்தை ஏற்படுத்தியவர் யார் ? அதன் ஷரத்துக்கள் யாவை ?
5. பிண்டாரிகள், தக்கர்கள், இவர்கள் எவர்களால் அடக்கப் பட்டனர் ?

6. வில்லியம் பெண்டிங்க் பிரபு செய்த சீர்திருத்தங்கள் எவை ? அவருக்கு உதவி செய்தவர் யார் ?
7. அவகாசியிலிக் கொள்கை என்றால் என்ன ? அதைக் கையாண்டவர் யார் ? அதன் விளைவு என்ன ?
8. டல்ஹௌஸி பிரபு செய்த சீர்திருத்தங்கள் யாவை ?
9. முதல் இந்திய சுதந்திரப் போருக்கான காரணங்கள் யாவை ? அதன் முக்கிய விளைவு என்ன ?
10. ஆங்கில ஆட்சியால் ஏற்பட்ட நன்மை, தீமைகள் எவை ?

13. நம் நாட்டில் ஆங்கில அரசர், அரசிகளின் ஆட்சி

1. மகாராணியின் பேரறிக்கை: 1858- முதல் இந்திய சுதந்திரப் போரின் விளைவாக ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக

விக்டோரியா மகாராணியார்

சங்கம் கலைக்கப் பட்டு, இங்கிலாந்து அரசியாகிய விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் ஆட்சியை ஏற்றுக்

கொண்டார் என அறிந்தீர்கள். அச்சமயம் அவர் ஒரு பேரறிக்கை விடுவித்தார். அது நம்நாட்டு சரித்திரத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இவ்வறிக்கையின்படி, வர்த்தக சங்கம் கலைக்கப்பட்டு, விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் ஆட்சியை ஏற்றுக் கொண்டார். இந்தியாவில் அவருக்குப் பதிலாக, அவருடைய அலுவல்களைக் கவனிக்க, **வைஸ்ராய்** அல்லது **இராஜப் பிரதிநிதி** ஒருவர் நியமிக்கப்பட்டார். அப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்த **கானிங்** பிரபுவே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். இந்திய அரசியல் விவகாரங்களில் இங்கிலாந்தில் மகாராணியாருக்கு உதவியாக, **இந்தியா மந்திரி** என்பவர் நியமனம் பெற்றார். இந்திய மன்னர்கள் வர்த்தகக் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் இன்னும் அமுலில் இருக்கும் எனக் கூறப்பட்டது. அவகாசியிலிக் கொள்கை ரத்து செய்யப்பட்டு, சுவீகாரம் செய்துகொள்ளும் உரிமை மீண்டும் இந்திய மன்னர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்தியர்களின் மதவிஷயங்களில் அரசாங்கம் தலையிடாது என வாக்குறுதி அளிக்கப்பட்டது. சமய, இன, நிறபேதமின்றி, அரசாங்கத்தில் தகுதியுள்ள எல்லோருக்கும் உத்தியோகம் வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. இந்திய மக்களது க்ஷேமமே மகாராணியின் சந்தோஷம் எனக் கூறப்பட்டது.

2. கானிங் பிரபு: (1858-1862) கானிங் பிரபு ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டி, இந்த அறிக்கையை மக்களுக்குக் கூறி, அமைதியை நிலை நாட்டினர்.

இதன் பிறகு, கானிங் பிரபு பல சீர்திருத்தங்களைச் செய்தார். கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் **சர்வ கலாசாலைகளை** ஸ்தாபித்தார். இந்நகரங்களில் **உயர்தர நீதி மன்றங்களும்** ஸ்தாபிக்கப்பட்டன. ஜில்லாக் கோர்ட்டுகளி

லிருந்து உயர்தர நீதி மன்றத்திற்கும், அங்கிருந்து, இங்கிலாந்தி லுள்ள **பிரிவி கௌன்ஸிலுக்கும்** அப்பீல்கள் எடுத்துப் போகலாம் என்று கூறப்பட்டது. வைஸ்ராய்க்கு ஆலோசனை கூறும் சபையில் ஒரு இந்தியர் நியமிக்கப்பட்டார்.

3. ரிப்பன் பிரபு: (1880-1884) இந்தியர்களின் மனதைஅதிகமாகக் கவர்ந்த வைஸ்ராய்களுள்ஒருவர் **ரிப்பன் பிரபு.** நாளடைவில் இந்தியர்கள் நாட்டின் ஆட்சி முறையை

ரிப்பன் பிரபு

எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இவர் விரும்பினர். ஆகையால் அப்பொறுப்புக்கு இவர்களுக்குப் பயிற்சி அளிப் பதற்காக, 1883-85-ம் ஆண்டுகளில் **ஸ்தலஸ்தாபனச் சட் டங்களை** இயற்றினர். இவற்றின்படி ஜில்லாபோர்டுகள், நகரசபைகள், கிராமசபைகள் முதலியவற்றை ஏற்படுத்தி, அவற்றின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று கூறப்பட்டது. இச்சபை கள் சிலவரிகளை வசூலித்தே, அந்தந்த ஸ்தலத்தில் சுகாதாரம்,

குடிதண்ணீர் வசதி, சாலைகள் அமைத்தல், கல்வியைப்பரப்பு தல், இரவு நேரங்களில் தெருக்களில் விளக்குகள் போடுதல், ஆஸ்பத்திரிகள், விற்பனைத் தலங்கள், வண்டிப் பேட்டைகள் இவற்றை அமைத்தல் ஆகிய அலுவல்களைக் கவனித்து வந்தன.

மேலும் இவர், இந்திய பாஷைகளில் இயற்றப்படும் பத்திரிகைகள்மீது விதிக்கப்பட்டிருந்த சிலகொடிய தடைகளை நீக்கினர். பல கல்விச் சாலைகளை ஏற்படுத்தி, கல்வி யைப் பரப்பினர். ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக, உப்பு வரியைக் குறைத்தார்.

4. **கர்ஸன் பிரபு** : 1899-1905 கர்ஸன் பிரபு காலத் தில் பல புதிய சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. வடமேற்கு எல்லைப் புறத்தில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டன. இக் குழப்பங்களை நீக்கவும், அன்னியப்படை யெடுப்பு களைத் தடுக்கவும், வடமேற்கு எல்லையை ஒரு மாகாண மாக்கி, அங்கு ஒரு கவர்னரை நியமித்தார். விவசாய அபி விருத்திக்காகப் பல வசதிகளைச் செய்தார். விவசாயிகளுக்கு ஆலோசனை கூற, **விவசாய ஆராய்ச்சி நிலையம்** ஒன்றை ஸ்தாபித்தார். விவசாயிகள் கடன் பளுவினால் அல்லல் படு வதால், அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அவர் களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து, அதை நீண்ட தவணைகளில் பெற்றுக்கொள்வதற்காகவும் **கூட்டுற வுச் சங்கங்களை** அமைத்தார். பயிர்கள் சாவியாகப் போய் விட்ட காலங்களில் வரிவசூலை நிறுத்தி வைத்தல், வரியைக் குறைத்தல், தள்ளுபடி செய்தல் ஆகிய அதிகாரங்கள் ஜில்லாக் கலெக்டர்களுக்கு வழங்கப்பட்டன. பல நீர்ப் பாசனக் கால்வாய்களும் வெட்டப்பட்டன. கைத்தொழில்

அபிவிருத்திக்காகக் **கைத்தொழில் இலாகா** என்ற தனி இலாகா ஒன்று அமைக்கப்பட்டது.

நம் நாட்டில் சரித்திர சம்பந்தமான பல கோட்டைகள், அழகிய கட்டிடங்கள், கோயில்கள். மசூதிகள் இவை ஏராளமாக இருக்கின்றன. இவை அழிந்துவிடாமல், இவற்றைப் பாதுகாப்பதற்காக ஒரு தனி இலாகாவை அமைத்தார். இந்த இலாகாவின் வேலைகளுக்குத் தேவையான பணம் பொது நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது.

அக்காலத்தில் வங்காள மாகாணம் மிகப் பெரியதாக இருந்ததால், ஒரே கவர்னர் அதைக் கவனிப்பது கடினமாக இருந்தது. ஆகையால் ஆட்சி அநுகூலத்திற்காக அதை இரண்டு பாகங்களாகப் பிரித்தார். இதனால் தங்கள் மொழி, கலாசாரம் இவற்றிற்குக் கேடு விளையும் எனக் கருதிய வங்காளிகள் இதைத் தீவிரமாக எதிர்த்தனர். இக்கிளர்ச்சி நாடு முழுவதும் பரவியது. 1911-ம் ஆண்டில் வங்காளப் பிரிவினை ரத்துச் செய்யப்பட்டது.

1905-ம் ஆண்டில் கர்ஸன் பிரபு பதவியினின்றும் நீங்கினார்.

5. செம்ஸ்போர்டு பிரபு: (1916-1921) இவர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே முதல் உலகப் பெரும்போர் ஆரம்பித்து தீவிரமாக நடந்துவந்தது. அப்போரில் இந்தியர்கள் தங்களுக்கு உதவி புரிந்தால், போர் முடிவுற்றபின் அவர்களுக்குப் படிப்படியாக பொறுப்பாட்சி வழங்கப்படுமென இந்திய மந்திரியாக இருந்த **மாண்டேகு பிரபு** என்பவர் கூறினார். மேலும் அவர் 1918-ம் ஆண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்து, வைஸ்ராயுடன் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து, பல தலைவர்களைக் கண்டு பேசினார். இதன் விளைவாக, 1919-ம் ஆண்டில் சில அரசியல்சீர்திருத்தங்கள் வெளி

யிடப்பட்டன. இவற்றிற்கு **மாண்டேகு-செம்ஸ்போர்டு** சீர் திருத்தங்கள் எனப் பெயர். இவற்றின்படி மத்திய அரசாங் கத்தில் வைஸ்ராய்க்கு உதவியாக இரண்டு சட்டசபைகளும், ஒரு நிர்வாக சபையும் அமைக்கப்பட்டன. மாகாணங்களில் கவர்னர்களுக்கு உதவியாக ஒரு சட்டசபையும், ஒரு நிர்வாக சபையும் ஏற்பட்டன. நிர்வாக சபைகள் இரண்டு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டன. ஒன்று ஒதுக்கப்பட்ட பகுதி. இதிலுள்ள அங்கத்தினரிடம் முக்கிய அதிகாரங்கள் இருந்தன. மற்றொன்று மாற்றப்பட்ட பகுதி. இதைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மந்திரிகள் என்ற பொதுஜனப் பிரதிநிதிகள். கல்வி, சுகாதாரம், கூட்டுறவு, மராமத்து முதலிய இலாக்காக்கள் மட்டும் இவர்கள் வசம் இருந்தன. இதற்கு **இரட்டையாட்சி** எனப் பெயர். மத்திய, மாகாண சட்டசபை அங்கத்தினர்களில் பெருவாரியானவர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனினும் வைஸ்ராய், கவர்னர்கள் இவர்களுக்குப் பல விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

மௌண்ட்பாட்டன் பிரபு

6. மௌண்ட்பாட்டன்பிரபு. (1947-1948) இவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இந்தியாவிற்கு வருவ தற்கு முன்பே, கப்பற்படைத் தலைவராயிருந்து, இரண்டாம் உலகப் பெரும்போரில் பேரும் புகழும் பெற்றிருந்தார். இவர் இந்தியாவுக்கு வந்த சமயம் மிக நெருக்கடியானது. இந்திய சுதந்திரப் போராட்டம் மிகவும் தீவிரமாக நடந்ததின் விளைவாக

1948-ம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதாக ஆங்கில அரசாங்கத்தினர் வாக்களித்தனர். தேசீய காங்கிரஸ் தலைவர்கள் நாடு ஒன்ருக இருக்கவேண்டுமெனக் கருதினுர்கள். ஆனுல் முகம்மதியர்களின் தலைவரான **மூகம்மதலி ஜின்னுவும்**, அவரது கோஷ்டியாரும்,முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளைத் தனியே பிரித்து **பாகிஸ்தான்**என்ற தனி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டுமென்றும், தீவிரமாகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இதனுல் நாடு முழுவதும் வகுப்புக் கலவரங்களும், கொலைகளும் நடந்தன. 1947-ம் ஆண்டு ஆரம்பத்தில் வைஸ்ராயாக வந்த **மௌண்ட் பாட்டன்** பிரபு, நாட்டைத் துண்டாடி, உடனே சுதந்திரம் வழங்காவிடில், நிலைமை விபரீதமாக ஆகிவிடுமெனக் கருதி, அவ்வாறே ஆங்கில அரசாங்கத்தினிடம், நேரிடையாகக் கூறினுர். இவருடைய ஆலோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது. நாடு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி சுதந்திரம் வழங்கப்பட்டது. மௌன் பாட்டன் பிரபுவே, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகவும், முகமதலி ஜின்னு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலாகவும் நியமிக்கப்பட்டார்.

இந்தியர்களின் உள்ளத்தைக் கவர்ந்த மௌண்ட்பாட்டன் பிரபு 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் பதவியினின்றும் விலகினுர். அவருக்குப் பதில் **சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இந்த உயர்ந்த பதவியை வகித்த முதல் இந்தியர் இவரே.

பயிற்சிகளும், கேள்விகளும்

1. விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையைப் பற்றிக் குறிப்பு வரைக.
2. ரிப்பன் பிரபு இந்தியர்களுக்குச் செய்த உதவிகள் யாவை ?
3. கர்ஸன் பிரபுவின் சீர்திருத்தங்களைப் பற்றிக் கூறுக.
4. மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.
5. மௌண்ட்பாட்டன் பிரபு இந்தியர்களால் பெரிதும் விரும்பப் படுவது ஏன் ?
6. இந்திய வைஸ்ராய்களின் சாதனைகளைக் குறிக்க, குறிப்புப் படங்கள் வரைக.

14. இந்திய சுதந்திரப் போராட்டம்

1. சுதந்திரப் போராட்டம்

இந்திய தேசீய காங்கிரஸின் தோற்றமும், சுதந்திரப் போராட்டமும் : ஆங்கிலக் கல்வியினால் நம் நாட்டில் ஏற்பட்ட முக்கிய விளைவு, சுதந்திர வேட்கையாகும். ஆங்கிலேயர்கள் எப்பொழுதும் சுதந்திரத்தை விரும்புபவர்கள். அதனால் அவர்களது நூல்களிலும், கவிதைகளிலும் சுதந்திர ஆர்வம் ததும்புகின்றது. இதைப் படித்த இந்தியர்களும் அவ்வுணர்ச்சியால் தூண்டப்பட்டனர். ஆகையால் சட்ட வரம்புக்கு உட்பட்ட முறையில் கிளர்ச்சி செய்து பொறுப்பாட்சி பெறுவதற்காக 1885-ம் ஆண்டில் **இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை** தோன்றியது. இதைத் தோற்றுவித்தவர்கள் **டேவிட் ஹ்யூம், வில்லியம் வெட்டர்பர்ன்** என்ற இரண்டு ஆங்கிலேயர்களும், **தாதாபாய் நௌரோஜி** என்ற பார்ஸி பிரபுவும் ஆவார்கள். இதன் முதல் கூட்டம் பம்பாயில் நடந்

தது. அப்பொழுது பம்பாய் கவர்னர் அங்கு வந்த பிரதிநிதி களுக்கு தேநீர் விருந்து அளித்ததாகவும் கூறப்படுகின்றது. காங்கிரஸ் ஆண்டுதோறும் வெவ்வேறு இடங்களில் கூடி படிப்படியாக இந்தியர்களுக்கு அரசியலில் பங்கு, கல்வி, வாணிபம், கைத்தொழிலில் அபிவிருத்தி, பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் இவற்றை வழங்கும்படி அரசாங்கத்தைப் பணி வுடன் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்களை நிறைவேற்றுவது வழக்கம்.

கர்ஸன் பிரபுவின் காலத்தில் ஏற்பட்ட வங்காளப் பிரிவினையின் காரணமாக, நாடு முழுவதும் ஆங்கிலேயர் களுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின என அறிந் தீர்கள் அல்லவா ? காங்கிரஸ் மகாசபையும் இக்கிளர்ச்சியை மேற்கொண்டு அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்க்க ஆரம் பித்தது. இத்தீவிர இயக்கத்திற்குத் தலைவர்களாக இருந்த வர்கள் **பால கங்காதர திலகர்**, **லாலா லஜபதிராய்** ஆகியவர்கள். ஆனால், இன்னமும் அமைதியான முறையி லேயே அரசாங்கத்துடன் வாதாட வேண்டுமென்றும், சட்ட சபைகளில் புகுந்து, அதிகாரங்களைக் கைப்பற்ற வேண்டு மென்றும் சில மிதவாதிகள் நினைத்தார்கள். அவர்களுக்குத் தலைவர்கள் **கோபால்கிருஷ்ண கோகலே**, **மேத்தா** முதலி யோர்கள். இக் கிளர்ச்சிகளின் விளைவாக, 1909-ம் ஆண்டில், **மிண்டோமார்லி** சீர்திருத்தச் சட்டங்கள் வழங்கப்பட்டன. இவற்றால் இந்தியர்கள் கைக்குச் சில அதிகாரங்கள் வழங்கப் பட்ட போதிலும், அவர்கள் திருப்தியடையவில்லை. அச் சமயம் இங்கு வசித்துவந்த **அயர்லாந்து** சீமாட்டியாகிய **அன்னிபெஸண்டு அம்மையார்**, இந்தியர்கள் சுதந்திரம் பெற, **சுயாட்சி** அல்லது **ஹோம்ரூல்** இயக்கத்தை ஆரம் பித்தார்.

முதல் உலகப் பெரும் போர் காலத்தில், இந்தியர்களின் ஒத்துழைப்பைக் கோரி, மாண்டேகு பிரபு விடுத்த அறிக்கையைப்பற்றி கூறப்பட்டதல்லவா? அதை நம்பி இந்தியர்கள் மக்களாலும் பொருளாலும் ஆங்கிலேயர்களுக்குப் பேருதவி செய்து, அவர்களை வெற்றிபெறச் செய்தனர். ஆனால் அப் போரின் முடிவில் வழங்கப்பட்ட **மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டங்கள்** இந்தியர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. ஆதலால் மீண்டும் நாட்டில் தீவிரக் கிளர்ச்சி ஆரம்பித்தது. 1920-ம் ஆண்டில் **மகாத்மா காந்தி**யின் தலைமையின்கீழ் **ஒத்துழையாமை** இயக்கம் ஆரம்பமாயிற்று. சட்டமறுப்பு, வரிகொடா இயக்கம், பாடசாலைகள், கலாசாலைகள், நீதிமன்றங்கள் இவைகளையும், விதேசிப் பொருள்களையும் பகிஷ்கரித்தல், மதுவிலக்கு குடிசைத் தொழில்கள், கதர் இயக்கம் இவற்றிற்கு ஆதரவளித்தல் ஆகியவை சாத்வீக சத்யாக்ரஹ முறையில் நடத்தப்பட்டன. இவற்றைக் கண்டு கோபமுற்ற அரசாங்கத்தினர் தீவிர அடக்குமுறைகளைக் கையாண்டு, காந்திஜி உள்பட ஆயிரக்கணக்கான தலைவர்களையும், தொண்டர்களையும் சிறையிட்டனர். மேலும் தீவிர அடக்கு முறைக்கு அனுகூலமாக, **ரௌலட் சட்டம்** என்ற கொடிய சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இந்தியர்களுக்கு அதிக ஆத்திரமூட்டியது. இச்சட்டத்தைக் கண்டிப்பதற்காக, பஞ்சாபிலுள்ள **ஜில்லியன் வாலா** என்னுமிடத்தில் ஓர் மாபெரும் கூட்டம் கூடியது. அச்சமயம் **ஜெனரல் டயர்** என்ற ஆங்கிலப் படைத் தலைவர் முன் எச்சரிக்கையின்றி, இக் கூட்டத்தை நோக்கி இயந்திர பீரங்கிகளை உபயோகித்தார். இதன் விளைவாக, நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இந்தியர்களுக்கு அரசாங்கத்தின்மீது வெறுப்பு மேலும் அதிகரித்தது. அந்நாளில் முஸ்லீம்களின் தலைவர்களான **முகமது அலி, ஷௌகத் அலி** என்ற **அலி**

சகோதரர்கள் முதலியவர்கள் **காங்கிரஸுக்கு** பக்க பலமாக இருந்தனர்.

இச்சமயம் ஒத்துழையாமை இயக்கம் பயனளிக்கவில்லை என்றும், சட்டசபைகளைக் கைப்பற்றி அவற்றின் மூலமாக அரசாங்கத்துடன் வாதாட வேண்டுமெனக் கருதிய **மோதிலால்நேரு, சித்தரஞ்சன தாஸ்** முதலியோர் **ஸ்வராஜ்யக் கட்சி** என்ற ஓர் ஸ்தாபனத்தையும், காங்கிரஸுக்குள்ளேயே ஆரம்பித்தனர்.

1927-ம் ஆண்டில், ஆங்கில அரசாங்கத்தினர் ஸர் ஜான் ஸைமன் என்பவர் தலைமையில், மேலும் அறுவர் அடங்கிய ஒரு குழுவை நியமித்து, இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்தனர். இதன் நோக்கம், இந்தியர்கள் கைக்கு மேலும் எதுவரை அதிகாரத்தை மாற்றலாம் என்பதை அறிவதற்கே ஆகும். இக்குழுவில் இந்தியர்கள் ஒரு வரும் இல்லாததால். நம் நாட்டினர் இக் குழுவினர் சென்ற இடங்களிலெல்லாம் அவர்களைப் பகிஷ்கரித்தனர். 1929-ம் ஆண்டில், இலாகூரில் கூடிய காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்திற்கு, **பண்டித ஜவஹர்லால் நேரு** தலைமை வகித்தார். அக்கூட்டத்தில், பூரண சுதந்திரமே இந்தியாவின் நோக்கம் என்ற தீர்மானம் நிறைவேறியது.

ஸைமன் கமிஷன், தனது சுற்றுப் பிரயாணத்தின் விளைவாக சில ஆலோசனைகளைக் கூறியது. இவற்றை மேலும் பரிசீலனை செய்வதற்காக ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் **ஒரு வட்டமேஜை மகாநாட்டை** நடத்தி, அதற்குச் சில இந்தியர்களை அழைத்தனர். இம் மகா நாட்டில் இந்தியாவின் உண்மையான பிரதிநிதிகள் கலந்து கொள்ளாததால் இது **வெற்றிபெறவில்லை.**

1930-ம் ஆண்டில் காந்திஜி தலைமையில் **உப்பு சத்யாக்கிரஹம்** ஆரம்பித்தது. அரசாங்க சட்டத்தைமீறி உப்புசெய்ததற்காக காந்திஜி உள்பட ஏராளமானவர்கள் சிறை சென்றனர்.

அப்பொழுது இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த **இர்வின் பிரபு** தேசீயத் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற விரும்பி, மகாத்மா காந்தியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இதற்கு **காந்தி-இர்வின் ஒப்பந்தம்** எனப் பெயர். இதன்படி கடற்கரை சமீபத்தில் உள்ள மக்கள் தங்களுடைய சொந்த தேவைக்காக உப்பு உற்பத்தி செய்து கொள்ளவும், விதேசித் துணிக் கடைகள், மதுபானக் கடைகள் இவற்றின் முன்னே தொண்டர்கள் சாத்வீகமுறையில் மறியல் செய்யவும் உரிமைகள் வழங்கப் பட்டன. இதற்காக காந்தி சத்யாக்ரஹ இயக்கத்தை நிறுத்தி இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதாக வாக்களித்தார். அவ்வாறே காங்கிரஸ் மஹாசபையின் ஏகப் பிரதிநிதியாக இங்கிலாந்துக்குச் சென்றார். வகுப்புவாத விஷயங்களில் ஒற்றுமை காணமுடியாததால் மகாநாடு வெற்றி பெறவில்லை. காந்திஜி இந்தியாவிற்குத் திரும்பி வருவதற்குள் புது வைஸ்ராயான **வில்லிங்டன் பிரபு** பதவி பெற்றிருந்தார். அவர் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைத் தகர்த்து, காந்திஜீ உள்பட தலைவர்களையும் தொண்டர்களையும் பெருவாரியாகச் சிறையிட்டார்.

1935-ம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டம் இயற்றப் பட்டது. அதன்படி, மத்திய அரசாங்கத்தில், ஆங்கில மாகாணங்கள், இந்திய மன்னர்களின் இராஜ்யங்கள் இவற்றைக் கொண்ட கூட்டாட்சியும்,(சமஷ்டி)மாகாணங்களில் இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டு, **மாகாண சுயாட்சி**யும் வழங்கப்

பட்டது. அதாவது-மாகாணங்களில் எல்லா அதிகாரமும் மக்களின் பிரதிநிதிகளாகிய மந்திரிகள் கைக்கு மாற்றப்பட்டது. மத்திய அரசாங்கத்தில் சமஷ்டி மட்டும் அமுலுக்கு வரவில்லை. இதன் காரணம் இந்தியமன்னர்களின் விருப்பமின்மையாகும்.

காங்கிரஸ் மகா சபை, புதிய அரசியல் திட்டத்தை வர வேற்று, அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தது. இச் சட்டத்தின் விளைவாக ஏற்பட்ட பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வாதிகள் கலந்து கொண்டு, மாபெரும் வெற்றி பெற்று, எட்டு மாகாணங்களில் மந்திரிசபைகளை அமைத்தனர். சென்னை இராஜ்யத்தில் 1937-ம் ஆண்டில் சக்ரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் தலைமையில் மந்திரி சபை பதவி ஏற்றது. இம் மந்திரி சபைகள் தாங்கள் செய்த சீர்திருத்தங்களாலும் தங்களுடைய ஆட்சித் திறனாலும் பேரும் புகழும் பெற்றன.

1939-ம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப் போரில், தங்களுடைய சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காக, ஆங்கிலேயர்கள், இந்தியர்களின் சம்மதத்தைப் பெறாமலே, இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தினார்கள். இதை விரும்பாத காங்கிரஸ் மகாசபை, மந்திரிகளை ராஜினாமா செய்ய உத்தரவிட்டது. காங்கிரஸ் வாதிகள் யுத்த முயற்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்ததால், அவர்களில் பெரும்பாலோர் சிறையிடப்பட்டனர். 1942-ம் ஆண்டில் காந்திஜி **வெள்ளையரே வெளியேறுக** ("குவிட் இந்தியா") என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். தலைவர்கள் எல்லோரும் சிறையிடப்பட்டனர். காந்திஜியின் வாழ்க்கைத் துணைவியாகிய **அன்னை கஸ்தூரி பாய்** சிறையிலேயே இறந்தார்.

1945-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் பெரும்போர் முடிவடைந்தது. அப்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்ற

பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியினர் வெற்றி பெற்றனர். அவர்களின் தலைவரான **அட்லி** என்பவர் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்க விரும்பினர். இதற்காக அவர் சிறையிலிருந்த தேசியத்தலைவர்களையும் தொண்டர்களையும் விடுவித்தார் பின்பு மூன்று ஆங்கில மந்திரிகள் அடங்கிய தூது கோஷ்டி யொன்று நம் நாட்டிற்கு வந்தது. அக் கோஷ்டியினர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதின் விளைவாக 1946-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியத் தலைவர்கள் அடங்கிய இடைக்கால மந்திரிசபை யொன்று அமைக்கப் பட்டது. அச் சபைக்கு **ஜவஹர்லால் நேரு** தலைவராக நியமிக்கப் பட்டார். அதே ஆண்டு, டிசம்பர் மாதத்தில், இந்தியர் தாங்களே ஒரு புதிய அரசியல் சட்டத்தை தயாரித்துக் கொள்வதற்காக **அரசியல் நிர்ணய சபை** ஒன்றும் அமைக்கப் பட்டது. 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதாகவும், ஆங்கில அரசாங்கத்தினர் ஒப்புக்கொண்டார்கள். ஆனல் நாட்டின் வகுப்புவாதக் கலவரங்களால் ஏற்பட்ட கோர விளைவுகளை உடனடியாகத் தடுக்க மௌண்ட்பாட்டன் பிரபு செய்த தீவிர முயற்சிகளின் பயனுக 1947-ஆண்டு ஆகஸ்டு 15-ந்தேதி இந்திய யூனியன், பாகிஸ்தான் ஆகியவை சுதந்திரம் பெற்றன என்பது முன்பு கூறப்பட்டது.

அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய **குடியரசுத்திட்டம்** 1950-ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அமுலுக்கு வந்தது. அரசியல் நிர்ணய சபைத்தலைவராக சேவை புரிந்த **பாபு ராஜேந்திர பிரஸாத்** இந்தியக் குடியரசின் முதல் **ஜனதிபதி**யாகத் தேர்வுபெற்றுர்.

2. விடுதலைப்போரில் கலந்துகொண்ட நம் தலைவர்கள்

இந்திய விடுதலைப் போரில் கலந்துகொண்டு, மாபெரும் தியாகங்கள் செய்த, நம் நாட்டுப் பெரியார்களைப் பற்றி இப்பொழுது அறிந்து கொள்வோம்.

(1) **தாதாபாய் நௌரோஜி :** இவர் பம்பாயில் ஒரு பார்ஸி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 1825-ஆண்டில் பிறந்தார். இவர், நம் தேசத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். இவர் இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை தோன்றக் காரணமாக இருந்ததன்றி, மும்முறை அதன் தலைவராகவும், தேர்ந்தெடுக்கப் பட்டார். இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு சபையிலும் இவர் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் நெடுங்காலம் ஜீவித்திருந்து, தனது 92-ம் ஆண்டில் இறந்ததால் இவர் **இந்தியாவின் மாபெருங்கிழவர்** என, செல்வமாக அழைக்கப்பட்டார்.

தாதாய் நவரோஜி

(2) **கோபால கிருஷ்ண கோகலே;** இவர் பம்பாய் மாகாணத்தில், ஒரு எளிய குடும்பத்தில் 1866-ம் ஆண்டில் பிறந்தார். இவர் சுமார் இருபது ஆண்டுகள் ஆசிரியராக உழைத்து, பிறகு பொதுஜன சேவையில் ஈடுபட்டார். இவர் ஒரு முறை இந்திய தேசீய காங்கிரஸின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை அளிப்பது, கட்டாய ஆரம்ப இலவசக்

கல்வி அளிப்பது, இராணுவச் செலவைக் குறைப்பது ஆகிய விஷயங்களுக்காக அரசாங்கத்துடன் போராடினர். தென் ஆப்பிரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும் பாடுபட்டார். தேச சேவைக்காக 1905-ம் ஆண்டில் **இந்திய ஊழியர் சங்கம்** என்னும் ஸ்தாபனத்தைத் துவக்கினர்.

கோகலே

திலகர்

(3) **லோகமான்ய பால கங்காதர திலகர்**:இவர் 1856-ம் ஆண்டில் **இரத்தினகிரி** என்ற நகரில் பிறந்தார். அரசியல் விஷயங்களில் இவர் ஒரு தீவிர வாதி. **"சுயராஜ்யமே எனது பிறப்புரிமை; அதை நான் அடைந்தே தீருவேன்,"** என்று மார் தட்டியவர் இவரே. இவர் பல பத்திரிகைகளின் வாயிலாக, மக்களின் தேசீய உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர். இவருடைய தீவிர வாதத்தினுல் சினமடைந்த அரசாங்கத்தினர் இவரைச் சிறையிலிட்டனர். சிறையில் இருக்கையில் இவர் பல அரிய சமய நூல்களை எழுதினர். அவற்றில் முக்கியமானது **கீதா இரகசியம்** என்பதாகும்.

காந்தியடிகளுக்கு முன், நம் நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரிதும் குடி கொண்டவர் இவரே.

(4) **அன்னிபெஸண்டு அம்மையார்**: இவர் அயர்லாந்து நாட்டில் பிறந்தபோதிலும், இந்தியாவையே தன் தாயகமாகக் கொண்டு, இந்தியமக்களின் கல்வி, அரசியல் முன்னேற்றம் இவற்றிற்காக, அரும்பணி செய்தார். இவர் ஒரு முறை இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபையின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியா விடுதலை பெறுவதற்காக இவர் **ஹோம்ரூல்** இயக்கத்தை நடத்தத் தொடங்கியதுடன், பல பத்திரிகைகளையும் நடத்தி, அவற்றின் வாயிலாகவும், மக்களைத் தட்டி யெழுப்பி, அரசாங்கத்தையும் எதிர்த்தார். இதற்காக அவர் சிறை செல்லவும் வேண்டி இருந்தது.

அன்னிபெஸண்டு அம்மையார்

மோதிலால் நேரு

(5) **பண்டித மோதிலால் நேரு**: இவரது முன்னோர்கள் வனப்பு மிகுந்த காஷ்மீர் நாட்டு வாசிகள். இவர்கள் முதலில் ஆக்ராவில் குடியேறி, பின்பு அலஹாபாத்தில் வசிக்கலாயினர்.

மோதிலால் நேரு ஆக்ராவில் 1861-ம் ஆண்டில் பிறந்தார். இவர் ஒரு வழக்கறிஞராக, சீக்கிரத்தில் பேரும் புகழும் பெற்று திரண்ட அளவு பொருளீட்டினர். இவர் ஒரு முறை மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அதன் விளைவாக, தனது சுகபோக வாழ்வையும், செல்வத்தையும் தியாகம் செய்து, சத்யாக்ரஹப் போரில் ஈடுபட்டுப் பல முறை சிறைவாசம் செய்யவும் நேர்ந்தது. அரண்மனை போன்ற தன் இல்லமாகிய



ஆனந்த பவனம்

ஆனந்த பவனம் என்னும் கட்டிடத்தின் பெயரை **சுயராஜ்ய பவனம்** என மாற்றி அதை தேசத்துக்கு ஈந்தார். இவரது ஒரே குமாரரே, நம் ஒப்பற்ற தலைவராகிய **ஜவஹர்லால் நேரு.** மோதிலால் 1931-ம் ஆண்டில் இறந்தார்.

(6) ஸர்தார் வல்லபாய் படேல்: இவர் 1875-ம் ஆண்டில் கூர்ஜ்ஜர நாட்டில் பிறந்தார். சிறு வயது முதல் இவர் அஞ்சா நெஞ்சமும், இரும்பையொத்த மன உறுதியும் கொண்டவர். இவர் வழக்கறிஞராக இருந்து, புகழும் திரண்ட

செல்வமும் பெற்ருர். ஆரம்பத்தில் இவர் உல்லாச வாழ்க்கையை விரும்பினுர். பிறகு 1916-ம் ஆண்டில் முதல் முதலாக மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அது முதல் இவர் எல்லாவற்றையும் தியாகம் செய்து, தேச விடுதலையில் முழுவதும் ஈடுபட்டார். பர்டோலி தாலுக்காவில் அரசாங்கத்தினர் அநீதியாக நிலவரியை உயர்த்தியபோது, படேல் அங்கு வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்து வெற்றிகண்டார். அப்பொழுது இவர் **சர்தார்** என்ற பட்டத்தையும் பெற்ருர். இவர் பலமுறை சிறை சென்ருர். இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது இவர் உள்நாடு, சமஸ்தானங்கள் ஆகிய இலாகாக்களை வகித்ததுமன்றி உதவி பிரதம மந்திரியாகவும் இருந்தார். அவர் அப்பொழுது செய்த மாபெரும் சாதனை, சமஸ்தானங்களை இந்திய அரசாங்கத்தில் இணைத்து ஒற்றுமைப்படுத்தியதாகும். இவர் 1950-ம் ஆண்டில் இறந்தார்.

வல்லபாய் படேல்

இராஜகோபாலாச்சாரியார்

(7) சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்:- இவர் 1879-ம்ஆண்டில் சேலம் ஜில்லாவில் ஒரு சிற்றூரில் பிறந்தார். பெங்களூர், சென்னை முதலிய இடங்களில கல்வி கற்றபின்,

சேலத்தில் வழக்கறிஞராக இருந்தார். முதலிலிருந்தே இவருக்கு மதுவிலக்கு, தீண்டாமையை ஒழித்தல், ஆகியவற்றில் அதிக ஆர்வமுண்டு. 1920-ம் ஆண்டில் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தபொழுது இவரும் தன் தொழிலை விட்டுத் தேச சேவையில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றார். *1937*-ம் ஆண்டில் இவர் சென்னையில் முதல் மந்திரி பதவி யேற்று, மிகத் திறமையுடன் செயலாற்றினார். பிறகு காங்கிரஸ் மகாசபையின் கட்டளைப்படி 1939-ம் ஆண்டில் பதவியைத் துறந்து சிறை சென்றார். இவர் பல உயர்ந்த பதவிகளை வகித்தார். இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக வந்த முதல் இந்தியர் இவரே. மேலும் இவர் வங்காள கவர்னர், மத்திய அரசாங்க மந்திரி முதலிய பதவிகளையும் வகித்தார். மீண்டும் ஒரு முறை சென்னை இராஜ்யத்தில் முதல் மந்திரி பதவி வகித்தார். இவர் பல அரிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

(8) **வ. உ. சிதம்பரம் பிள்ளை:-** இவர் 1872-ம் ஆண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் பிறந்தார். சிறிது காலம் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். வங்காளப் பிரிவினை காரணமாக வட இந்தியாவில் விதேசிப் பொருள்களை பகிஷ்கரித்த பொழுது, இவர் தென் இந்தியாவில் அந்த இயக்கத்தைத் தீவிரமாக நடத்தினார். தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே சுதேசிக்கப்பல் ஒன்றை ஓட்டி, **"கப்பலோட்டிய தமிழன்"**, என்ற சிறப்புப் பெயரையும் அடைந்தார். ஏற்கனவே அங்குக் கப்பலோட்டிவந்த ஆங்கிலக் கம்பெனியாருக்கு நஷ்டம் ஏற்பட்டதால் அவர்கள் இவருக்குப் பெரும் தொகை லஞ்சமாகக் கொடுப்பதாகச் சொல்லி, கப்பலோட்டுவதைக் கைவிடச் சொன்னார்கள். இவர் சம்மதியாததால் சிறையிடப்பட்டு மிகத் துன்ப மெய்தினார். இவருடைய கப்

பலும், சொத்துக்களும் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப் பட்டன. 1932-ம் ஆண்டில் விடுதலையடைந்த அவர் நான்கு வருடங்களுக்குப் பின் இறந்தார்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

சுப்பிரமணிய பாரதியார்

(9) **சுப்பிரமணிய பாரதியார்:** சிறந்த பாடல்கள் மூல மாக தென்னிந்திய மக்களின் தேசீய உணர்ச்சியை எழுப்பி அவர்களை சுதந்திரத் துடிப்புக் கொள்ளச் செய்த பெருமை சுப்பிரமணிய பாரதியாரைச் சாரும். இவர் 1882-ம் ஆண்டில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள **எட்டயபுரம்** என்னுமிடத்தில் பிறந்தார். தமிழில் சிறந்த ஆர்வம் கொண்டு, தன் பதின் மூன்றும் ஆண்டிலேயே கவிபுனைந்து **பாரதியார்** எனப் பட்ட மும் பெற்றூர். இவர் பல பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து, அரசாங்கத்தைத் தாக்கி எழுதியதால், இவரைச் சிறை செய்ய அரசாங்கம் முயற்சித்தது. இவர் தப்பியோடி சிறிதுகாலம் புதுச்சேரியில் வசித்தார். பிறகு மீண்டும் சென்னைக்குத் திரும்பி, பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார்.

1921-ம் ஆண்டில், திருவல்லிக்கேணி கோயில் யானையால் தாக்கப்பட்டு, மரணமடைந்தார்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை எப்பொழுது, ஏன் எவரால் தோற்றுவிக்கப்பட்டது? அதன் நோக்கங்கள் யாவை?
2. கீழ்க்கண்டவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக:—
ஜில்லியன் வாலா; ரௌலட் சட்டம்; ஸைமன் கமிஷன்; வட்டமேஜை மகாநாடு; அரசியல் நிர்ணய சபை.
3. கீழ்க்கண்டவர்கள் நாட்டிற்குச் செய்த சேவைகள் யாவை?
கோகலே; திலகர்; மோதிலால் நேரு; சர்தார் படேல்; இராஜ கோபாலாச்சாரியார்; பாரதியார்.
4. தேசீயத் தலைவர்களின் படங்களைச் சேகரித்து ஒரு புத்தகத்தில் ஒட்டி, ஒவ்வொரு படத்தின் கீழும் குறிப்பு வரைக.

15. நமது தற்கால ஆட்சி முறை

உலகில் மக்கள் எங்கும் தனித்து வாழ விரும்புவதில்லை. அவர்கள் சமூகமாகவே வாழ விரும்புகின்றனர். அவ்வாறு வாழுங்கால் அவர்களது உயிர், பொருள், சுதந்திரம் இவற்றைக் காக்கவும், அவர்களுடைய நலனைக் கவனிக்கவும் அரசாங்கம் அவசியமானது. இவ்வரசாங்கம் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு முறையில் நடைபெறுகின்றது. இப்பொழுது நமது நாட்டில் அரசாங்கம் நடைபெறும் வகையை அறிவோம்.

ஆட்சிமுறைக்காக, நம் நாட்டைப் பல மாகாணங்கள் அல்லது இராஜ்யங்களாகவும், இவற்றை ஜில்லாக்களாகவும், ஜில்லாக்களைத் தாலூகாக்களாகவும் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் பல கிராமங்களும், நகரங்களும் அடங்கியுள்ளன.

1. கிராம ஆட்சி :— கிராமத்தில் முக்கிய அதிகாரி **கிராம முனிசீப்** அல்லது **மணியக்காரர்** என்பவர். இவருடைய அலுவல்களாவன. நிலவரி வசூல் செய்தல், சிறிய குற்றங்களையும், வழக்குகளையும் விசாரித்தல், ஜனன, மரணக் கணக்குகளைப் பதிவு செய்தல், கிராமத்தில் தொத்து நோய் கண்டால் அதைப்பற்றி சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் ஆகியவை. இவருக்கு **கணக்கப்பிள்ளை** அல்லது **கர்ணம், தோட்டி, தலையாரி, வெட்டியான்** ஆகியவர்கள் உதவி செய்கிறார்கள்.

மேற்கூறிய அதிகாரிகள் எல்லோரும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு, மாதந்தோறும் ஊதியம் பெறுபவர்கள் ஆவார்கள். இவர்களைத் தவிர, கிராமத்தின் இதரப் பொது அலுவல்களைக் கவனிக்க, **கிராமப் பஞ்சாயத்து சபைகள்** இருக்கின்றன.

கிராமங்கள் பல வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வார்டினின்றும் ஒன்று அல்லது இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கிராமங்களின் வருமானம் ஜனத்தொகை இவற்றிற்குத் தக்கபடி 5 முதல் 15 அங்கத்தினர் வரை உண்டு. இந்த அங்கத்தினர்கள் அடங்கிய சபையே பஞ்சாயத்து சபை எனப்படும். பஞ்சாயத்து சபையின் தலைவரும் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருக்குப் **பிரஸிடெண்ட்** என்று பெயர். பஞ்சாயத்து சபையின் கூட்டங்களுக்கான தேதியைக் குறிப்பிடுதல், விஷயக் குறிப்பு தயாரித்தல், கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல் ஆகியவை தலைவரின் அலுவல்கள். தலைவர் இல்லாத காலங்களில் இந்த அலுவல்களைக் கவனிக்க ஒரு **உபதலைவர்** அல்லது **வைஸ் பிரஸிடெண்ட்** அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பஞ்சாயத்தின் நிர்வாகத்தைக் கவனிக்க **எக்ஸ்கியூடிவ் ஆபீஸர்** என்ற அதிகாரி அர

சாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறர். இவருக்குமட்டும் ஊதியம் உண்டு. அங்கத்தினர்கள், தலைவர், உபதலைவர் இவர்களுக்கு ஊதியம் கிடையாது.

கிராமப் பஞ்சாயத்துக்களின் அலுவல்களாவன: தெருக்களைச் செப்பனிட்டு சுத்தமாகவைத்தல், சாக்கடைகள் கட்டுதல், குடிதண்ணீர் வசதி செய்தல் ஆரம்ப பாடசாலைகள், வாசகசாலைகள், நூல் நிலையங்கள், பூங்காக்கள், ஆஸ்பத்திரிகள், விற்பனைதலங்கள், வண்டிப்பேட்டை, பஸ் நிலையம் இவற்றை அமைத்துப் பராமரித்தல், சிறு சிறு வழக்குகளை விசாரித்தல் ஆகியவை.

இந்த வேலைகளைச் செய்யப் பணம் தேவை அன்றோ? இதற்காக இவை சில வரிகளை விதித்து. வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளன. வீட்டு வரி, தொழில் வரி, வாகனங்கள் மீது வரி, லைசென்ஸ் கட்டணம், எரு விற்றல், கிராமக் குளத்தில் மீன் குத்தகைக்கு விடுதல், கால்நடைகளை உணவிற்காக வெட்டுமிடங்களில் வசூலிக்கப்படும் கட்டணம், வீடுகளின் பாத்யதையை ஒருவர் பெயரிலிருந்து மற்ருெருவர் பெயருக்கு மாற்றுவதற்கான கட்டணம், கிராமங்களில் வசிப்பவர்களில் குற்றம் செய்பவர்களிடமிருந்து நீதிஸ்தலங்களில் வசூலிக்கப்படும் அபராதத் தொகையில் ஒரு பகுதி ஆகியவை; மேலும் அந்தந்த ஜில்லாவில் வசூலாகும் நிலவரியில் ருபாய்க்கு இரண்டணு வீதம் எடுத்து, அந்த ஜில்லாவிலுள்ள எல்லா கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர, அவ்வப்பொழுது, குறிப்பிட்ட வேலைகளுக்காக அரசாங்கத்தினர் சில நன்கொடைகளும் வழங்குகின்றனர்.

2. நகரசபைகள் அல்லது முனிஸிபாலிடிகள்:-நகரங்களில் பொதுமக்களின் நலன்களைக் கவனிக்க நகரசபைகள்

இருக்கின்றன. இச்சபைகளின் அங்கத்தினர்களும் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகரின் ஜனத் தொகை, வருவாய் இவற்றிற்குத் தக்கபடி, 16 முதல் 36 அங்கத்தினர்கள் வரை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் தங்களுள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரை உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கின்றனர். தலைவருக்குச் **சேர்மன்** என்றும், உபதலைவருக்கு **வைஸ் சேர்மன்** என்றும் பெயர். இவர்களுடைய அலுவல்களும் கிராமப் பஞ்சாயத்து சபைகளின் தலைவர், உபதலைவர் இவர்களுடையவைகளைப் போன்றதே. இங்கு நிர்வாகத்தைக் கவனிப்பவர் **கமிஷனர்** என்ற அரசாங்க அதிகாரி ஆவார்.

நகரசபைகளின் அலுவல்கள், தெருக்கள், கக்கூஸ், சாக்கடை இவற்றை அமைத்து, சுத்தமாக வைத்திருத்தல், தொத்துநோய் பரவாவண்ணம் சுகாதார முறைகளைக் கையாடல், குடிதண்ணீர் வசதி செய்தல், ஜனன மரணக் கணக்குகளைப் பதிவு செய்தல், அம்மைக்குத்துதல் உணவுக்கான விற்பனைப் பொருள்கள் சுத்தமாக இருக்கின்றனவா என கவனித்தல், இரவு நேரங்களில் தெருக்களில் விளக்குகள் போடுதல், ஆரம்ப உயர்தரப் பாடசாலைகள், வாசகசாலைகள், நூல் நிலையங்கள், விளையாடும் மைதானங்கள், ஆஸ்பத்திரிகள், மார்க்கெட்டுகள், வண்டிப் பேட்டை, பஸ் நிலையங்கள் இவற்றை அமைத்துப் பராமரித்தல் ஆகியவை.

நகர சபைகளின் வருமானங்களாவன: வீடு, விளக்கு, சாக்கடை, தண்ணீர் வரி, தொழில் வரி, கல்வி வரி; குப்பை முதலியவற்றை விற்பதால், கிடைக்கும் தொகை, டிராமா, சினிமா, சர்க்கஸ் இவற்றின்மீது விதிக்கப்படும் தமாஷ் வரி, மார்க்கெட், சந்தை, வண்டிப் பேட்டை, பஸ் நிலையம் இவற்றில் வசூலிக்கப்படும் கட்டணம் ஆகியவை. இவற்றைத்

தவிர சில பிரத்தியேக அலுவல்களுக்கு அரசாங்கத்தார் நன்கொடை அளிக்கின்றார்கள்.

3. கார்ப்பொரேஷன்:—சென்னையைப் போன்ற மிகப் பெரிய நகரங்களிலுள்ள நகரசபைக்குக் **கார்ப்பரேஷன்** எனப்



சென்னை கார்ப்பரேஷன் கட்டிடம்

பெயர். இதன் வருமானம், அலுவல்கள் ஆகியவை ஏறக்குறைய நகரசபைகளைப் போன்றதே. இச்சபையின் தலைவருக்கு **மேயர்** எனவும், உபதலைவருக்கு **டிப்டி மேயர்** எனவும் பெயர். இவர்கள் மட்டும் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இங்கும் நிர்வாகத்தைக் கவனிக்க **கமிஷனர்** என்ற அரசாங்க அதிகாரி இருக்கிறார்.

4. ஜில்லா போர்டுகள் :—ஒவ்வொரு ஜில்லாவிலும் பொதுநல அலுவல்களைக் கவனிக்க, **ஜில்லா போர்டுகள்** இருக்கின்றன. இவற்றின் அங்கத்தினர்களும் பொது

மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அங்கத்தினர்கள் **பிரஸிடெண்ட்** என்ற தலைவரையும், **வைஸ் பிரஸிடெண்ட்** என்ற உபதலைவரையும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஜில்லாவின் விஸ்தீரணம், வருவாய் இவற்றிற்குத் தக்கபடி, 24 முதல் 52 அங்கத்தினர்கள் வரை உண்டு. இதர சபைத் தலைவர்களைப் போலன்றி, ஜில்லா போர்டு தலைவர் நிர்வாகத்தையும் கவனிக்கின்றார். மேலும் அவர் இதர சபைத் தலைவர்களின் அலுவல்களைப்போல் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல் இவற்றையும் கவனிக்கிறார். இவர் இல்லாத காலங்களில் வைஸ் பிரஸிடெண்ட் இப்பொறுப்புகளை ஏற்கிறார்.

ஜில்லா சபைகளின் அலுவல்களாவன :—சாலைகள், பாலங்கள் இவற்றை அமைத்து, பழுதுபார்த்தல், சாலைகளின் இருபுறங்களிலும் மரங்களை நட்டுப் பயிராக்குதல், வைத்திய சாலைகள், சத்திரங்கள், சாவடிகள், வண்டிப்பேட்டை, பஸ் ஸ்டாண்டு, ஆரம்ப, உயர்தரப் பாடசாலைகள் இவைகளை அமைத்துப் பராமரித்தல், தொத்து நோய்கள் பரவாமலிருக்க நடவடிக்கை எடுத்தல் ஆகியவை.

ஜில்லாபோர்டுகளின் வருமானங்களாவன :-லைசென்ஸ் கட்டணம், வண்டிப்பேட்டை, பஸ் ஸ்டாண்டு, சந்தை இவற்றில் வசூலிக்கப்படும் கட்டணங்கள், அந்த ஜில்லாவில் வசூலிக்கப்படும் நிலவரியில் ரூபாய்க்கு ஓரணா வீதம் ஒதுக்கப்படும் தொகை, சில விசேஷ வேலைகளுக்காக அரசாங்கத்தால் அளிக்கப்படும் நன்கொடைகள் ஆகியவை.

மேற்கூறிய சபைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாக **ஸ்தல ஸ்தாபனங்கள்** எனப்பெயர். ஸ்தல ஸ்தாபனங்களின் அங்கத்தினர்கள் பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. அரசாங்கம் எவ்வாறு அவசியமானது ?
2. கிராமப் பஞ்சாயத்து சபைகளின் அலுவல்கள் யாவை ?
3. நகரசபைகளின் வருமான இனங்கள் எவை ?
4. ஜில்லா போர்டுகள் மக்களுக்குச் செய்யும் சேவைகள் என்ன ?
5. கோடிட்ட இடத்தில் ஒரு வார்த்தையைப் போட்டுப் பூர்த்தி செய்க :—
   (a) பஞ்சாயத்து சபைத் தலைவர்— — ——.
   (b) பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி————.
   (c) நகரசபைத் தலைவர்————.
   (d) நகரசபை நிர்வாக அதிகாரி— — — —.
   (e) ஜில்லா போர்டு தலைவர்— — — —.
6. கீழ்க்கண்டவை சரியா, தப்பா ?
   (a) கார்ப்பரேஷன் தலைவருக்குச் சேர்மன் எனப் பெயர்.
   (b) ஜில்லா சபை அலுவல்களைக் கவனிப்பவர் கமிஷனர்.
   (c) சென்னை நகருக்கு ஒரு பஞ்சாயத்து சபை இருக்கின்றது.
   (d) நகரசபை அங்கத்தினர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   (e) பஞ்சாயத்து சபை உபதலைவர், அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
7. உங்கள் ஊரில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் கூட்டங்கள் அலுவல்கள் இவற்றைக் கவனிக்கவும்.

16. மாகாண (இராஜ்ய) ஆட்சி

நமது நாட்டைப் பல மாகாணங்கள் அல்லது இராஜ்யங்களாகப் பிரித்திருக்கிறார்கள் அல்லவா? அவற்றுள் நாம் வசிக்கும் சென்னைமாகாணத்தின் அரசாங்க முறையைப்பற்றி அறிந்து கொள்வோம். தற்போது மாகாணங்களுக்கு **இராஜ்யங்கள்** எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

நமது சென்னை இராஜ்யத்தின் தலைவர் **கவர்னர்** எனப்படுவார். இவர் இந்தியப் பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு, பெரும்பாலும், ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார். இவர் இராஜ்யத்திலுள்ள மந்திரி சபையின் ஆலோசனைக்கு இணங்கியே நிர்வாகத்தை நடத்துகின்றார். சட்டசபைகளைக் கூட்டுதல், கலைத்தல், மந்திரி சபையை நியமித்தல், சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு அளித்தல், சட்டசபைகளில் இயற்றப்பட்ட மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளித்தல், ஆகியவை இவருடைய அலுவல்கள்.

சட்டம் இயற்றும் வகையில் கவர்னருக்கு உதவிபுரிய இரண்டு சட்டசபைகள் இருக்கின்றன. கீழ்ச்சபைக்கு **லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி** எனப் பெயர். ஆந்திர இராஜ்யம் பிரிந்தபின், இதில் 232 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இவர்கள் வயது வந்த ஆண், பெண், இருபாலராலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சாதாரணமாக, இவர்கள் ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கின்றனர். இந்த அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுக்கின்றனர். தலைவருக்கு **ஸ்பீக்கர்** என்றும், உபதலைவருக்கு **டிப்டி ஸ்பீக்கர்** என்றும் பெயர். மேல் சபைக்கு **லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்** எனப் பெயர். இதன் அங்கத்தினர்கள், கீழ் சபை அங்கத்தினர்கள், பட்டதாரிகள், உயர்தரப்பள்ளி ஆசிரியர்கள் இவர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். கல்வி, சமூக சேவை, கலைகள், இவற்றில் பிரசித்தி பெற்ற சிலரும் கவர்னரால் இச்சபைக்கு நியமிக்கப்படுகிறார்கள். இச்சபையின் மொத்த அங்கத்தினர்கள் 60. இச்சபை நிரந்தரமானது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மூன்றில் ஒருபங்கும் அங்கத்தினர்கள் விலகிக்கொள்ள, அந்த ஸ்தானங்களுக்கு, அவர்களே

அல்லது மற்றவர்களோ தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இச்சபையின் தலைவராகிய **பிரஸிடெண்ட்**, உபதலைவராகிய **வைஸ்பிரஸிடெண்ட்** ஆகியவர்கள் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இரண்டு சட்டசபைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் கவர்னர் அல்லது ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்று, சட்டங்களாகின்றன.

நிர்வாக விஷயத்தில் கவர்னருக்கு உதவிபுரிய, மந்திரி சபை ஒன்று உண்டு. பொதுவாக, கீழ்சட்டசபையில் எந்த அரசியல் கட்சி பெருவாரியாக அங்கம் வகிக்கின்றதோ அந்தக் கட்சியின் தலைவர் **முதல் மந்திரி**யாக கவர்னரால் நியமிக்கப்படுகிறார். இதர மந்திரிகளை அவரே பொறுக்கி எடுத்து, கவர்னரின் அங்கீகாரம் பெறுகின்றார். அரசாங்க அலுவல்கள்பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மந்திரியின் பார்வையிலும் ஒன்று அல்லது பல இலாகாக்கள் இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு இலாகாவிலும் பல நிரந்தர அதிகாரிகள் உண்டு. சட்டசபைகளில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறுமாயின், மந்திரி சபை உடனே இராஜினாமா செய்ய வேண்டும்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. இராஜ்ய கவர்னர், முதல் மந்திரி இவர்கள் எவ்வாறு நியமனம் பெறுகின்றனர்?
2. மேல் சட்ட சபை, கீழ் சட்ட சபை இவற்றின் அமைப்புகளைக் கூறுக.
3. ஓர் புதிய சட்டம் எவ்வாறு இயற்றப்படுகின்றது?
4. கவர்னரின் அலுவல்கள் யாவை?
5. மந்திரி சபையின் அமைப்பு; அலுவல்கள் இவற்றைக் கூறு.
6. தற்போது உள்ள சென்னை கவர்னர், மந்திரிகள் இவர்களின் பெயர்களை அறிந்து கொள்ளவும். ஒவ்வொரு மந்திரியும் வகிக்கும் இலாகாக்களின் பெயர்களையும் அறியவும்.

17. மத்திய அல்லது யூனியன் அரசாங்கம்

இந்தியா முழுவதையும் ஆட்சிபுரிவதற்காக, டில்லியில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு **மத்திய அரசாங்கம்** அல்லது **யூனியன் அரசாங்கம்** எனப்பெயர். புதிய அரசியல் திட்டப்படி இந்தியாவிற்கு **பாரத்** என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இராஜேந்திரபிரசாத்

எஸ். இராதாகிருஷ்ணன்

இந்திய அரசாங்கத்தலைவர் **ஜனாதிபதி** என்பவர். இவர் மத்திய அரசாங்கத்தின் இரண்டு சட்டசபைகள், இராஜ்ய அரசாங்கங்களின் கீழ்சபைகள் இவற்றால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இவர் சாதாரணமாக ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார். தற்போது நமது ஜனாதிபதியாக இருப்பவர் **பாபு இராஜேந்திரபிரசாத்**. மத்தியசட்ட சபைகளைக் கூட்டுதல், கலைத்தல், அவற்றால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்

களுக்கு அங்கீகாரம் அளித்தல், மத்திய மந்திரிசபை, கவர்னர்கள், நீதிபதிகள், படைத்தலைவர்கள், ஸ்தானீகர்கள் முதலியவர்களை நியமித்தல், அசாதாரண காலங்களில் மத்திய அல்லது இராஜ்ய அரசாங்கத்தின் நிர்வாகத்தை முழுவதும் ஏற்று நடத்துதல் ஆகியவை இவருடைய அலுவல்கள் ஆகும். ஜனாதிபதி இல்லாத காலங்களில் அவருடைய பொறுப்புகளை ஏற்று நடத்துவதற்கு **உப ஜனாதிபதி** ஒருவர், மத்திய அரசாங்கத்தின் இரண்டு சட்டசபைகளாலும் தேர்ந்தெடுக்கப் படுகிறார். மேலும் இவர் மத்திய அரசாங்கத்தின் மேல் சட்ட சபையின் தலைவரும் ஆவார். இப்பொழுது நமது உப ஜனாதிபதியாக இருப்பவர், **எஸ். இராதாகிருஷ்ணன்** என்பவர்.

நாட்டின் நன்மைக்காக சட்டங்கள் இயற்றுவதற்கு இரண்டு சட்டசபைகள் இருக்கின்றன. இவை இரண்டிற்கும் பொதுவாக, **பார்லிமெண்ட்** எனப்பெயர். இவற்றுள் கீழ்ச் சபைக்கு **லோக்சபை** எனப்பெயர். இதில் சுமார் 500 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இவர்கள் வயது வந்த எல்லாப் பொதுமக்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், இவர்களுக்காக இச்சபையில் சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சபை அங்கத்தினர்கள் பொதுவாக, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மேல் சபைக்கு **இராஜ்யசபை** எனப்பெயர். இதில் 250 அங்கத்தினர்கள் உண்டு. இவர்களில் 12 பேர்கள் கலைகள், விஞ்ஞானம், சமூகசேவை இவற்றில் பெயர்பெற்றவர்களானவர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் இராஜ்யங்களின் கீழ்ச்சட்டசபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இச்சபை நிரந்தரமானது. இரண்டு

ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கத்தினர்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் விலகிக்கொள்கிருர்கள். அந்த ஸ்தானங் களுக்குத் தேர்தல் நடைபெறும்.

இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாக் கள் ஜனதிபதியின் அங்கீகாரம் பெற்று, சட்டங்கள் ஆகின்றன.

அரசாங்க அலுவல்களைக் கவனிக்க மந்திரிசபை ஒன்று உண்டு. பொதுவாக மத்திய அரசாங்கத்தின் கீழ் சட்ட

ஜவஹர்லால் நேரு

சபையில் பெருவாரியான அங்கத்தினர்களைக் கொண்ட அரசியல் கட்சித்தலைவர் **பிரதம மந்திரி**யாக ஜனதிபதியால் நியமிக்கப்படுகிருர். இவரே இதர மந்திரிகளைப் பொறுக்கி எடுத்து ஜனதிபதியின் அங்கீகாரத்தைப் பெறுகின்ருர். இப் பொழுது பிரதம மந்திரியாக இருப்பவர் **ஜவஹர்லால் நேரு.**

மந்திரிசபையினர் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தவர்கள். சட்ட சபைகளில் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினுல் உடனே அவர்கள் பதவியினின்றும் விலக வேண்டும்.

அரசாங்கத்தின் அலுவல்கள் பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மந்திரியும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இலாகாக்களைப் பரிபாலிக்கிருர். இந்த இலாகாக்களில் முக்கியமானவை வெளிநாட்டு இலாகா, உள்நாட்டு இலாகா, ஒலிபரப்பி, விளம்பர இலாகா, நிதி இலாகா, சட்ட இலாகா, உணவு இலாகா, கைத்தொழில் இலாகா வர்த்தக இலாகா, சுகாதார இலாகா, போக்குவரவு இலாகா, பாதுகாப்பு இலாகா, மின்சார, சுரங்க, மராமத்து இலாகா, தபால், தந்தி இலாகா ஆகியவை.

ஒவ்வொரு இலாகாவிலும் நிரந்தரக் காரியதரிசிகள் உதவிக் காரியதரிசிகள், குமஸ்தாக்கள் முதலியவர்கள் இருக்கிருர்கள். காரியதரிசிகள் பிரத்தியேகப் பயிற்சி பெற்றவர்கள்.

டில்லியில் ஒரு உயர்தரநீதிமன்றம் இருக்கின்றது. இது கீழ்க் கோர்ட்டுகளினின்றும் அப்பீல்களை விசாரிப்பதுடன் இராஜ்ய அரசாங்கங்கள், மத்திய அரசாங்கம் இவற்றிற்கிடையே ஏற்படும் தகராறுகளையும் தீர்த்து வைக்கும். அரசியல் அமைப்பில் ஏற்படும் சந்தேகங்களையும் இந்த நீதிமன்றம் விளக்கும்.

அரசாங்கத்தின் பல்வேறு அலுவல்களையும் கவனிக்க பொருள் தேவையன்ருே ? இது மக்களிடமிருந்து வரிகளாக வசூலிக்கப்படுகின்றது. இவற்றுள் முக்கிய வரிகளாவன சுங்கவரி, வருமானவரி, கலால் வரி, கார்ப்பரேஷன் வரி, நாணயங்கள் அச்சிடுவதால் கிடைக்கும் இலாபம், தபால்

தந்தி, இருப்புப்பாதைகள் இவற்றுல் கிடைக்கும் வருமானம், பெட்ரோல்வரி, இராஜ்யங்களுக்குக் கடனுகக் கொடுக்கும் தொகைகளுக்கான வட்டி, ஆகியவை. இந்த வருமானத்தைக் கொண்டு அரசாங்கம் செய்யும் செலவுகளாவன: நிர்வாகச் செலவு, உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புச் செலவு, நீர்ப்பாசனம், மராமத்து, உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு உபகாரச்சம்பளம், அகதிகளுக்கு உதவி அளித்தல், வெள்ளம், பஞ்சம் இவற்றுல் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி அளித்தல், இராஜ்யங்களுக்கு வருமான வரிப் பங்கு, நன்கொடைகள் ஆகியவை அளித்தல், மத்திய அர சாங்கம் வாங்கியிருக்கும் கடன்களுக்கு வட்டி செலுத்துதல் ஆகியவை.

அரசாங்கம் நன்கு நடைபெற, பொதுமக்கள் வரிகளைத் தவருமல், குறித்த காலத்திலேயே செலுத்தி விடவேண்டும்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. ஜனுதிபதி, உபஜனுதிபதி இவர்கள் எவ்வாறு தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்? அவர்களுடைய அலுவல்கள் யாவை?
2. பார்லிமெண்டு சபைகளின் அமைப்பு, அலுவல்கள் இவற் றைக் கூறுக.
3. மந்திரி சபை எவ்வாறு நியமிக்கப்படுகின்றது?
4. அரசாங்கத்தின் வரவு, செலவு இனங்கள் யாவை?
5. தற்போது மத்திய அரசாங்க மந்திரிகள், அவர்கள் பார்வை யிடும் இலாகாக்கள் இவற்றை அறிந்து கொள்ளவும்.

18. நாடுகளிடையே நல்லுறவு: ஸ்தானீகர்களும், அவர்களது அலுவல்களும்

தற்காலத்தில் உலகிலுள்ள நாடுகள் பலவும் இதர நாடுகளுடன் அரசியல், பொருளாதாரம், வாணிபம் இவ் விஷயங்களில் உறவு கொண்டிருக்கின்றன. மேலும், ஒரு நாட்டினின்றும் சில மக்கள் வேறொரு நாட்டிலும் குடியேறி வசிக்கின்றனர். ஆகையால், இவ்வாறு குடியேறி உள்ளவர் களின் நலன்களைப் பாதுகாக்கவும், அரசியல் பொருளாதார வாணிப உறவுகளைப் பலப்படுத்தி அபிவிருத்தி செய்யவும், சுதந்திர நாடுகள் பிறநாடுகளுக்கு **ஸ்தானீகர்கள்** அல்லது **தூதர்களை** அனுப்புவது வழக்கம். நம் நாடு சுதந்திரம் பெறு முன் ஆங்கிலத் தூதர்களே, பிற நாடுகளில் நம் நலன்களைக் கவனித்து வந்தனர். நாம் சுதந்திரம் பெற்றபின் நமது ஸ்தானீகர்களே இதர நாடுகளுக்கு அனுப்பப் படுகிறார்கள். தற்போது சுமார் 30 நாடுகளுக்கு நமது தூதர்கள் அனுப்பப் பட்டிருக்கின்றனர். சுமார் 50 நாட்டுத் தூதர்கள் நம் தலை நகராகிய டில்லியில் இருக்கின்றனர். இவர்களுடைய உதவி யாளர்கள் மற்றும் நம் நாட்டின் முக்கிய நகரங்களில் இருக் கின்றனர்.

இத் தூதர்களுக்கு, அவர்கள் சென்றிருக்கும் நாடுகளில் விசேஷ சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அந்நாட்டு தூதருக்கும் நம் நாட்டில் அவ்வாறான சலுகைகள் உண்டு. தூதர்கள் மிகவும் கண்ணியமாகவும், புத்தி கூர்மையுடனும் நடந்து கொண்டு, பல வகைகளிலும் தமது நாட்டின் நலனை யும், அந்தஸ்தையும் விருத்தி செய்தல் வேண்டும். இரண்டு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவு முறிந்தாலும், போர்

ஏற்பட்டாலும், அந்தந்த நாட்டுத் தூதர்கள் திருப்பியழைக்கப்படுவார்கள்.

நம் நாடு சுதந்திரம் பெற்றபின், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ரஷ்யா முதலிய இடங்களில் தூதராக இருந்து,

விஜயலட்சுமி அம்மையார்



V. K, கிருஷ்ணமேனன்

இப்போது இங்கிலாந்தில் தூதராக நியமனம் பெற்றுள்ள **விஜய லட்சுமி அம்மையார்**, இங்கிலாந்தில் தூதராக இருந்த **V. K. கிருஷ்ண மேனன்**, ரஷ்யாவில் தூதராக இருந்த **எஸ். இராதாகிருஷ்ணன்** இவர்கள் மிகக் கீர்த்திப் பெற்றவர்கள்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. அன்னிய நாடுகளுக்குத் தூதர்களை அனுப்புவதன் நோக்கமென்ன ?
2. தூதர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
3. தூதர்கள் எப்பொழுது திருப்பியழைக்கப்படுவார்கள் ?
4. இந்தியாவின் தூதர்களாயிருந்து, கீர்த்திப் பெற்றவர்கள் சிலரின் பெயர்களைக் கூறுக.
5. தற்போது உலகின் முக்கிய நாடுகளுக்குச் சென்றிருக்கும் தூதர்கள் பெயர்களை அறிந்து கொள்ளவும்.

19. சர்வதேச அரசாங்கம்

1. சர்வ தேச சங்கம்: உலக நாடுகள் அவ்வப் பொழுது மண்ணாசையினால் ஒன்றுக்கொன்று போரிடு கின்றன. போர்களால் பொருட் சேதம், உயிர்ச் சேதம் இவை ஏற்படுகின்றன. 1914-ம் ஆண்டு முதல் 1918-ம் ஆண்டு வரை நடந்துவந்த முதல் உலகப் பெரும் போரில் மகத்தான உயிர்ச்சேதம், பொருட்சேதம், இவை ஏற்பட்டன. இனி உலகில் இவ்வகையான போர்கள் நிகழக் கூடாதென அறிஞர்கள் கருதினார்கள். ஆகவே, 1919-ம் ஆண்டில் ஏற்பட்ட **வார்ஸேல்ஸ்** உடன்படிக்கையில், போர்களைத் தடுக்க, ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட வேண்டுமென்று ஓர் ஷரத்து சேர்க்கப்பட்டது. இதற்கான ஆலோசனையைக் கூறியவர், அப்போது அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஜனாதி பதியாக இருந்த **உட்ரோவில்சன்** என்பவர். 1920-ம் ஆண்டில் **ஸ்விட்சர்லாந்து** நாட்டிலுள்ள **ஜினிவா** என்னும் நகரில் **சர்வ தேச சங்கம்** என்னும் ஸ்தாபனம் நிருவப்பட்டது. இதன் நோக்கம் போர்களைத் தடுப்பது மட்டுமேயன்றி, அடிமைத் தனம், மலேரியா, அபின் வியாபாரம் இவற்றை ஒழிக்க வழி தேடுவது, சுகாதார அபிவிருத்தி, தொழிலாளர்களின் நலன் களின் அபிவிருத்தி ஆகியவையும் ஆகும்.

ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் தனது எல்லா நோக்கங் களையொட்டியும் சிறந்த தொண்டாற்றி வந்தது. ஆனால் நாளடைவில், பல காரணங்களால்அதுகுன்றத்தொடங்கியது. முதலிலிருந்தே அமெரிக்க ஐக்கிய நாடுகள், பல ஐரோப்பிய வல்லரசுகள் இவை இதில் அங்கம் வகிக்கவில்லை. இதர நாடுகளிடையே இருந்த நம்பிக்கையின்மை, பொறாமை ஆகியவற்றால், ஒவ்வொரு நாடும் இரகசியமாகப்போர்க்கருவி களைச் செய்து குவிக்க ஆரம்பித்தது. ஒரு நாடு இதன்

ஆணையை மீறினல் அதைத் தண்டிப்பதற்குப் போதிய பலம் இதற்குக் கிடையாது. **ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியபோதும்,' இத்தாலி அபிசீனியாவைக்** கைப்பற்றிய போதும், சர்வதேச சங்கம் ஒன்றும் செய்ய இயலவில்லை. இதனல் தைரியம் கொண்ட **ஹிட்லர்** என்னும் ஜெர்மானிய சர்வாதிகாரி *1939*-ம் ஆண்டில், ஒன்றன்பின் ஒன்ருகப் பல ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றினர். இத்துடன் சர்வதேச சங்கமும் மறைந்தது.

2. **ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்:** *1939*-ம் ஆண்டில் தொடங்கிய இரண்டாம் உலகப் பெரும்போர் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருக்கையில் அமெரிக்க ஜனதிபதியான **ரூஸ்வெல்ட்**, இங்கிலாந்து பிரதமமந்திரியான **சர்ச்சில்,** ரஷ்ய சர்வாதிகாரியான **ஸ்டாலின்** இவர்கள் அடிக்கடி ஒன்றுகூடி, போரை வெற்றிகரமாக நடத்த திட்டமிட்டார்கள். அதே சமயத்தில், இனி இப்போர்கள் நேரிடாவண்ணம் தடுப்பதற்கான மார்க்கங்களையும் ஆராய்ந்தார்கள். இதன் விளைவாக, 1945-ம் ஆண்டில் போர் முடிந்தவுடன், ஜூன் மாதத்தில் ஐம்பத்தாறு நாடுகளின் பிரதிநிதிகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள **ஸான்பிரான்ஸிஸ்கோ** என்னுமிடத்தில் கூடி ஆலோசனை நடத்தினர்கள். இதன் பயனக அதே ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் தேதியன்று **ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்** அமைக்கப்பட்டது. அதன் தலைமைக் காரியாலயம் நியூயார்க் நகருக்கு அருகிலுள்ள **லேக் சக்ஸஸ்** என்னுமிடத்தில் உள்ளது.

இச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தங்களுக்குள் சச்சரவு ஏற்பட்டால் அதைச் சமாதான முறையிலேயே தீர்த்துக் கொள்வதாகவும், உலகில் சமாதானத்தை நிலைநாட்ட, ஆவன செய்வதாகவும், உலக நாடுகளின் சுகாதாரம்,

பொருளாதாரம், கலாசாரம், தொழிலாளர்களின் நலன்கள் இவற்றின் முன்னேற்றத்துக்காகவும் உழைப்பதாக உறுதி கூறி சாசனத்தில் கையொப்பமிட வேண்டும். இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும், பிரதி வருஷம் குறிப்பிட்ட தொகை ஒன்றைக் கட்டணமாகச் செலுத்தவேண்டும். இப்போது இதில் 61 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பல பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் முக்கியமானவற்றைப் பற்றி இப்பொழுது அறிந்துகொள்வோம்.

1. **பொது சபை:** ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் கொண்டது **பொது சபை.** இது பிரதி வருஷமும் ஏறக்குறைய செப்டம்பர் மாதத்தில் கூடுவது வழக்கம். வரும் ஆண்டில் வரவு செலவு திட்டத்தைத் தயாரித்தல், இதர பிரிவுகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தல், இதர பிரிவுகளின் நடவடிக்கைகளைப் பரிசீலித்தல் ஆகியவை இதன் அலுவல்கள்.

2. **பந்தோபஸ்து சபை அல்லது பாதுகாப்பு சபை:** இது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் மிகவும் முக்கியப் பிரிவாகும். இதில்பதினொன்று நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் **அமெரிக்கா ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனு** ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர அங்கத்தினர்கள். வேறு ஆறு நாடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இரண்டு நாடுகளுக்கு இடையே போர் ஏற்படுமெனத் தோன்றினுல், இச்சபை உடனே கூடி ஆவன செய்யும். இதன் கட்டளையை மீறும் நாட்டின்மீது இந்த ஸ்தாபனம் போர்தொடுக்க, இதர நாடுகள் அதற்கு உதவிபுரியவேண்டும்.

3· **தர்மகர்த்தா சபை:** இதன் அங்கத்தினர்கள் பொது சபையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் இவற்றில் தோல்வியுற்ற நாடுகளில் குடியேற்ற நாடுகள், அரசியல், பொருளாதாரத் துறைகளில் பிற்போக்குள்ள நாடுகள் இவற்றை மேற்பார்வையிட்டு முன்னேற்றமடைய உதவி செய்வது இதன் அலுவலாகும்.

4. **பொருளாதார சமூக பண்பாடு சபை :** இச்சபையில், பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலக மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல், கல்வி, கலாசாரம் இவற்றையும் அபிவிருத்தி செய்து, அவற்றின் மூலம் உலகில் சமாதானம் நிலவச் செய்தல் ஆகியவை இதன் கடமைகள்.



U. N. O. காரியாலயம்

5. **சர்வதேச நீதி மன்றம் :** இது ஹாலந்து நாட்டிலுள்ள **ஹேக்** என்னும் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில்

வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த பதினைந்து நீதிபதிகள் இருக்கின்றனர்.

நம் நாட்டைச் சேர்ந்த **பெனிகல் நரசிங்க ராவ்** என்பவரும் இதில் ஒரு நீதிபதியாக இருந்து சமீபத்தில் காலமானார். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளிடையே தோன்றும் வழக்குகளை விசாரித்து, தீர்ப்பளிப்பது இதன் வேலை. இத் தீர்ப்புகளை அமுலுக்குக் கொண்டு வருவது பந்தோபஸ்து சபையின் வேலை. இவற்றைத் தவிர, வேறு பல கிளைச் சபைகளும் உண்டு.

(6) **காரியாலயம்** : ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பல்வேறு அலுவல்களையும், நிர்வாகத்தையும் கவனிக்க, ஓர் பெரிய காரியாலயம், **லேக் ஸக்ஸஸ்** என்னுமிடத்தில் இருக்கின்றது. இதில் பதவி வகிப்பவர்கள், இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். நிர்வாகத் தலைவருக்கு **பொதுக்காரியதரிசி** எனப் பெயர். இவர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுச் சபையால் நியமிக்கப்படுகிறார். தற்போது அப்பதவி வகிப்பவர் பெயர் **ஹாமெர்ஷெல்டு.**

A. இராமசுவாமி முதலியார்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்பட்டது முதல், இந்தியாவும் அதில் அங்கம் வகிக்கின்றது. நாடு சுதந்திரம் பெற்றபின் நம் தலைவர்களில் பலர் நமது பிரதிநிதிகளாக இங்கு சென்று, செய்த சொற்பொழிவுகள் ஒப்பற்றவை. இவற்றால் உலக நாடுகளிடையே இந்தியாவின் செல்வாக்கு வெகுவாக உயர்ந்துள்ளது. இத்தகைய தலைவர்களில் முக்கியமான

வர்கள் **ஸ்ரீமதி விஜயலட்சுமி, S. இராதாகிருஷ்ணன், V. K. கிருஷ்ணமேனன், A. இராமசுவாமி முதலியார்** ஆகியவர்கள்.

கேள்விகளும், பயிற்சிகளும்

1. சர்வதேச சங்கம் எப்பொழுது, ஏன் தோன்றியது ?
2. அச் சங்கம் மறையக் காரணங்களென்ன ?
3. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நோக்கங்கள் யாவை ?
4. கீழ்க்கண்டவற்றைப் பற்றி குறிப்பு வரைக:—
   பந்தோபஸ்து சபை, தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதி மன்றம்.
5. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கூட்டங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் படிக்கவும்.

20. அமைதி, சுதந்திரம், நீதி இவற்றிற்காக உழைத்த உத்தமர்கள்

(1) **ஜார்ஜ் வாஷிங்டன்** : இன்று உலக நாடுகளுள் மிக உன்னதப் பதவி வகிப்பது அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகும். ஒருகாலத்தில் இந்நாடுகள் ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாடாக இருந்து, அவர்களுடைய ஆதிக்கத்தில் அல்லல் உற்றது. தாய்நாட்டுடன் போரிட்டு அமெரிக்கர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கச் செய்தவர் **ஜார்ஜ் வாஷிங்டன்.**

இவர் 1732-ம் ஆண்டில், ஒரு நிலச்சுவான்தாரரின் குமாரராகப் பிறந்தார். ஆகையால் சிறு வயது முதல் இவருக்குப் பயிர்த் தொழிலில் விருப்பம் அதிகம். முன்னேற்ற முறையில் பயிர் செய்து, பொருளீட்டி, கீர்த்தி பெற்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில், அமெரிக்காவில் குடியேறியிருந்த ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்

ஜார்ஜ் வாஷிங்டன்

கும் போர் ஏற்பட்டது. அப்பொழுது ஆங்கிலப் படைக்குத் தலைமைவகித்த வாஷிங்டன் பிரஞ்சுக்காரர்களைப் போரில் முறியடித்து, புகழும் கீர்த்தியும் பெற்றார்.

வாஷிங்டனின் முன்னோர்கள் இங்கிலாந்திலிருந்து வந்து வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் குடியேறினார்கள். நாளடைவில் இக் குடியேறிகள் தாய் நாட்டினால் பல வகைகளிலும் துன்புறுத்தப்பட்டனர். இதனால் குடியேறிகள் சுதந்திரம் பெற உறுதி பூண்டார்கள். 1776-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியன்று, பதின்மூன்று குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் **பிலடெல்பியா** என்னுமிடத்தில் ஒன்று கூடி, சுதந்திரப் பிரகடனம் செய்தனர். இதனால் தாய்நாட்டுடன் போர் தொடங்கியது.

வாஷிங்டன் அமெரிக்கப் படைகளுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்கர்களுக்குப் போதிய போர்ப் பயிற்சியோ, தளவாடங்களோ இல்லை. அவ்வாறு இருப்பினும், வாஷிங்டன் மனம் தளராது உழைத்து, இறுதியில் அமெரிக்கர்களை வெற்றி பெறச் செய்தார்.

போருக்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடுகள் குடியரசாயின. அமெரிக்கர்கள், தங்கள் வெற்றிக்குக் காரணமாயிருந்த வாஷிங்டனையே தங்களுடைய முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததுமன்றி, இரண்டாம் முறையும் அவ்வாறே செய்தனர். தங்களுடைய தலைநகருக்கும் அவருடைய பெயரையே இட்டனர். போரில் முதல்வராக இருந்த இவர், சமாதான காலத்திலும் முதல்வராக இருந்து, பல துறைகளிலும் நாட்டை ஏற்றம் பெறச் செய்தார். இவர் 1799-ம் ஆண்டில் மறைந்தார்.

ஆப்ரஹாம் லிங்கன்

(2) ஆப்ரஹாம் லிங்கன் : ஜார்ஜ் வாஷிங்டன் ஆங்கிலக் குடியேறிகளுக்குச் சுதந்திரம் கிடைக்கச் செய்தார்.

அச் சுதந்திரம் அமெரிக்காவிலுள்ள பிறருக்கும் கிடைக்கும் படி செய்தவர் **ஆப்ரஹாம் லிங்கன்.**

இவர் 1809-ம்- ஆண்டில், அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஓர் ஏழைக் குடியில் பிறந்தார். ஏழ்மை காரணமாக, சிறு வயதிலிருந்தே இவர் தம் தந்தைக்குத் தொழிலில் உதவிபுரிந் தார். கல்வியில் ஆர்வம் மிகுந்த இவர் தனது ஓய்வு நேரங் களில், பிறரிடம் புத்தகங்களை இரவல் வாங்கி, தாமே கல்வி கற்று வழக்கறிஞரானார். ஏழைகளின்மீது கருணை கொண்டு சில சமயங்களில், அவர்களின் வழக்குகளை இலவசமாகவும் வாதாடினார். பிறகு அமெரிக்க ஐக்கிய நாட்டின் பார்லி மெண்டாகிய காங்கிரஸ் மகாசபையில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென் பகுதியில் பருத்தி. புகையிலை முதலியவை அதிகமாகப் பயிராகின்றன. இந் நிலங்கள் ஆங்கிலக் குடியேறிகளுக்குச் சொந்தமாயிருப் பினும், அங்கு வெப்பம் அதிகமானதால் நிலங்களில் வேலை செய்ய ஆப்பிரிக்காவினின்றும் **நீக்ரோக்களை** அடிமைகளாக விலைக்கு வாங்குவது வழக்கம். இந்த அடிமைகள் ஆடு மாடு களைப்போல் மிகக் கொடூரமாக நடத்தப்படுவது வழக்கம்.

ஒரு முறை லிங்கன் ஓர் அலுவலாக, ஐக்கிய நாடுகளின் தென் பகுதியிலுள்ள **நியூ ஆர்லியன்ஸ்** என்னுமிடத்திற்குச் சென்றிருந்தார். அங்கு அடிமைகள் அல்லல் படுவதை நேரிடக் கண்டு வருந்தி, சந்தர்ப்பம் வாய்ப்பின், அடிமைத் தனத்தை ஒழிக்கத் தீர்மானம் கொண்டார்.

1860-ம் ஆண்டில் லிங்கன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய

தேர்வு தென்னுட்டவர்களுக்கு அச்சத்தை ஊட்டியது. ஏனெனில் அவர் அடிமைகளுக்கு விடுதலை அளித்துவிடுவார், என்று அவர்கள் பயந்தனர். ஆகையால் அவர்கள் குடியரசி னின்றும் பிரிந்து, ஒரு தனி அரசை ஸ்தாபித்துக்கொள்ள முயற்சித்தார்கள். இதனுல் நாட்டின் பலம் குன்றும் எனக் கருதி லிங்கன் தென்னுட்டுடன் போர் புரிந்தார். ஆரம்பத் தில் வடநாட்டார்கள் சிலவிடங்களில் தோல்வியுற்ற போதி லும், இறுதியில் அவர்கள் வெற்றி கண்டார்கள். போர் நடந்து கொண்டிருக்கையில் இரண்டாம் முறையும் லிங்கன் ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அவர் அடிமைகளுக்குச் சுதந்திரம் அளித்தார். எங்கும் வெற்றிக் களிப்பு இருக்கையில் ஆப்ரஹாம் லிங்கன் ஒரு நாடகக் கொட்டகையில், 1865-ம் ஆண்டில் ஒரு தென்னுட்டவனுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(3) **வால்டேர்**: பிரான்ஸ் நாட்டில், 17, 18-ம் நூற்றுண்டுகளில் மன்னர்களின் கொடுங்கோலாட்சிநிலவியது. ஏழை மக்கள் கடும் வரியாலும், உண்ண உணவின்மை யாலும் வாடி வதங்கினுர்கள். பிரபுக்களும், மத குருமார் களும் மிகக் குறைவான வரிகளே செலுத்திய போதிலும், எல்லா உரிமைகளையும் பெற்றிருந்தனர். இந்நிலையில் ஏழை மக்களைத் தட்டியெழுப்பி, சுதந்திரம் பெறச் செய்த பெருமை **வால்டேர்**, **ரூஸோ** ஆகிய இருவர்களைச் சாரும்.

வால்டேர், 1694-ம் ஆண்டில் **பாரிஸ்** நகரில் பிறந்தார். இவர் தந்தை இவர் ஒரு வழக்கறிஞராக ஆகவேண்டுமென்று விரும்பியதால், சிலகாலம் சட்டக் கல்வி பயின்றுர். ஆனுல் இவரது மனம் இதை விரும்பாததால் இவர் இலக்கியத் துறையில் இறங்கினுர். அக்காலத்தில் பிரான்ஸ் நாட்டில் மலிந்து கிடந்த ஊழல்களைப் பற்றியும், மன்னர்கள், பிரபுக்கள்

இவர்களின் அட்டூழியங்களைப் பற்றியும், நாடகங்கள் நவீனங்கள், பாக்கள் இவற்றின் மூலமாக, வன்மையாகக் கண்டித்தார். இதை விரும்பாத அரசாங்கத்தினர் இவரைப் பலமுறை சிறை செய்தார்கள். எனினும் இவர் தன் கொள்

வால்டேர்

கைகளை மாற்றிக்கொள்ளவில்லை. பிறகு இவர் இங்கிலாந்துக்குத் தப்பியோடி, சிலகாலம் அங்கு வசித்தார். அந்நாட்டு அரசாங்க முறையைக் கண்டு வியந்தார். அங்கு பல்வேறு துறைகளிலும் முன்னணியில் நிற்பவர்களைச் சந்தித்து, அவர்களுடைய நட்பைப் பெற்றார். பிறகு தாய் நாட்டுக்குத் திரும்பி, மீண்டும் தன் தீவிர எழுத்துக்களை ஆரம்பித்தார். மறுபடியும் அரசாங்கம் இவரைச் சிறைசெய்ய முயன்றபொழுது, இவர் ஸ்விட்சர்லாந்து நாட்டுக்குத் தப்பி யோடி அங்கு 25 ஆண்டுகள் வசித்தார். பிறகு தாய்

நாட்டுக்குத் திரும்பியபோது மிகவும் குதூகலமாக வரவேற்கப் பட்டார். 1778-ம் ஆண்டில் இவர் இறந்தார்.

4. **ரூஸோ :** கொடுங்கோன்மையாலும், துன்பங்களாலும் அல்லல்பட்ட பிரஞ்சு ஏழை மக்களைத் தூண்டி எழுப்பி, அவர்களிடையே "**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம்**" என்ற பொன்சொற்களைப்பரவச்செய்தவர் **ரூஸோ.**

ரூஸோ

இவர் ஸ்விட்சர்லாந்துநாட்டில் 1712-ம்ஆண்டில் கடிகாரங்கள் செய்யும் ஒரு ஏழைத் தொழிலாளியின் குமாரராகப் பிறந்தார். இவர் பிறந்த சில நாட்களுக்கெல்லாம் இவருடைய தாய் இறந்துவிடவே தகப்பனே இவரைச் செல்வமாக வளர்த்தார். பிறகு ஒரு அரசியல் குற்றத்திற்காக இவருடைய தந்தை நாட்டைவிட்டு ஓட நேர்ந்தது. ரூஸோ தன் ஜீவனத்திற்காகப் பலவகைத் தொழில்களைப் புரிந்து வந்தார். ஆயினும் இவர் இலக்கியத் துறையில் ஆர்வம்கொண்டு, அதற்காக உழைத்து வந்தார்.

இதற்குப் பிறகு இவர் பாரிஸுக்கு வந்து பல நூல்களை எழுதினார். வால்டேரைப் போலவே இவரும் அக்காலத்திய கேடுகளைப் பற்றிக் கடிந்து எழுதியதால், பொதுமக்களால் பெரிதும் விரும்பப்பட்ட போதிலும், அரசாங்கத்தினர் இவருக்கு இன்னல்கள் புரிய ஆரம்பித்தனர். ஆகையால் இவர் சிலகாலம் இங்கிலாந்தில் தங்கியிருந்தார். பிறகு இவர் மீண்டும் பிரான்ஸுக்கு வந்து பல நூல்களை இயற்றினார். அவற்றுள் ஒன்று குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பற்றியதாகும். இவர் 1778-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

5. உட்ரோ வில்ஸன் : உலக நாடுகளிடையே சச்சரவுகள் ஏற்பட்டால், அவற்றைப் போர்களின்றி, சமாதான

உட்ரோ வில்ஸன்

முறையிலேயே தீர்க்க, உலகநாடுகள் ஒத்துழைக்க வேண்டியது என்ற அரிய கொள்கையை உலகமக்களுக்கு

எடுத்துக் கூறியவர், அமெரிக்க ஐக்கியநாடுகளின் ஜனதிபதி யாகிய **உட்ரோ வில்ஸன்** என்பவர்.

இவர் 1856-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு பாதிரியின் மகனுகப் பிறந்தார். இவர் சட்டக் கல்வி பயின்று, அரசியல் துறையில் இறங்கினர். அரசியலில் உள்ள ஊழல்களைக் களைந்தெரியவும் ஆர்வம் கொண்டார்.

1885-ம் ஆண்டில் இவர் அரசியல் நூல் ஒன்றை வெளியிட்டார். இது இவருக்குக் கீர்த்தியளித்ததோடு, ஒரு சர்வகலாசாலையில் பெரும் பதவியும் கிடைத்தது. பிறகு 1910-ம் ஆண்டில் இவர் **நியூ ஜெர்ஸி** என்னும் மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். அங்கு இவரது சிறந்த ஆட்சி முறையும், சீர்திருத்தங்களும் இவருக்குப் பெருங் கீர்த்தியை உண்டாக்கியது. ஆகையால் இவர் 1913-ம் ஆண்டில் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மறு வருடமே முதல் உலகப் பெரும் போர் தொடங்கியது. மூன்று ஆண்டுகள் வரை மிகவும் சாமர்த்தியமாக, வில்ஸன் அமெரிக்க ஐக்கிய நாடுகளை நடுநிலைமை வகிக்கச் செய்தார். இவர் இரண்டாம் முறையும் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1917-ம் ஆண்டில் ஜெர்மானியர் அநீதியாக, ஒரு அமெரிக்கக் கப்பலை மூழ்கடித்ததால் அமெரிக்காவும் போரில் ஈடுபட நேரிட்டது. வில்ஸன் போரை வெற்றிகரமாக நடத்தினர். பிறகு பிரான்ஸ் நாட்டிலுள்ள **வார்ஸேல்ஸ்** என்னுமிடத்தில் 1919-ம் ஆண்டில் சமாதான மகாநாடு நடந்த பொழுது, வில்ஸனும் அங்கு சென்று தனது பிரசித்திபெற்ற பதினன்கு ஷரத்துகளை வெளியிட்டார். அவற்றின்படி உலகில் போர்களைத் தடுக்க, **சர்வதேச சங்கம்** 1920-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனல் இவர் இவ்வாறு

ஐரோப்பிய விஷயங்களில் தலையிடுவதை அமெரிக்கர்கள் விரும்பவில்லை. அவர்கள் சர்வதேச சங்கத்திலும் சேரவிரும்ப வில்லை. இதனால் மனமுடைந்த வில்ஸன் 1924-ம் ஆண்டில் காலமானார்.

6. **மகாத்மா காந்தி:** நம் தேசத்தந்தை என்றும், உலக உத்தமர் என்றும், கருணாமூர்த்தி என்றும் போற்றப்படும் மகாத்மா காந்தி, 1869-ம் ஆண்டு, அக்டோபர் மாதம்



மகாத்மா காந்தி

இரண்டாம் தேதி, **போர்பந்தர்** என்னுமிடத்தில் அவதரித்தார். இவருடைய தந்தை ஒரு சமஸ்தானத்தில் மந்திரி பதவி வகித்து வந்தார். காந்திஜீயின் பெற்றோர்கள் ஆழ்ந்த தெய்வ பக்தியும் விசால நோக்கும் உள்ளவர்களாதலால் இவரும் அவ்வருங் குணங்களைப் பெற்றிருந்தார். இவர் இங்கு கல்வி கற்றபின், பாரிஸ்டர் பட்டம் பெற இங்கிலாந்துக்குச்

சென்றார். அச்சமயம் இவர் இங்கிலாந்தில் மதுபானம் இறைச்சியுணவு இவற்றைத் தொடுவதில்லை என்றும், தீய வழியில் நடப்பதில்லை என்றும் தன் தாயிடம் உறுதி கூறி, அவ்வாறே நடந்துகொண்டார். இவர் பாரிஸ்டர் பட்டம் பெற்று, தாய் நாட்டிற்குத் திரும்பி, வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்.

சிலகாலம் பொறுத்து, இவர் இந்திய வியாபாரி ஒருவரின் வழக்கைப் பற்றி வாதாட, தென் ஆப்பிரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு குடியேறியுள்ள இந்தியர்களுக்கு வெள்ளையர்கள் இழைக்கும் துன்பங்களைக் கண்டு மனமிரங்கினார். அவர்களுடைய நிலையைச் சீர்படுத்துவதற்காகச் சிலகாலம் அவ்விடத்திலேயே தங்கி, அந்த அரசாங்கத்துடன் சாத்வீக முறையில் போர் செய்து ஓரளவு வெற்றிகண்டார்.

இதன் பிறகு இவர் இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். இங்கும் ஆங்கில ஆட்சியில் மக்கள் அல்லல் படுவதைக் கண்டு இந்திய தேசீயக் காங்கிரஸ் மகா சபைக்கு வழி காட்டியாக நின்று, சாத்வீக முறையில் அரசாங்கத்துடன் சுதந்திரப் போரில் இறங்கினார். இதைப்பற்றிய விவரங்களை முன்னொரு பாடத்தில் அறிந்தீர்கள். இவரது முயற்சியின் பயனாக உலகம் வியக்கும் வண்ணம் சாத்வீக முறையிலேயே நாடு சுதந்திரம் அடையச் செய்தார். வெற்றிக்காலத்திலேயே ஆப்ரஹாம் லிங்கனைப்போல, இவரும் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் ஓர் கொடியோனால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்செய்தி உலகையே துக்கத்திலாழ்த்தியது.

காந்திஜீ எளியவாழ்க்கையையே நடத்தினார். தீண்டாமை, மதுபானம் இவற்றை ஒழித்தல், குடிசைத் தொழில்களை ஆதரித்தல், கிராம முன்னேற்றம், நாட்டிலுள்ள எல்லா

மக்களிடத்தும் ஒற்றுமை ஆகியவற்றிற்காக அரும்பெரும் பாடுபட்டார்.

7. ஜவஹர்லால் நேரு: மக்களுள் மாணிக்கம் என்றும் நம் நாட்டின் தற்போதைய முடிசூடா மன்னர் என்றும் போற்றப்படும் **ஜவஹர்லால்** நேரு 1889-ம் ஆண்டில் **அலகாபாத்** நகரில் பிறந்தார். இவரது தந்தை மிகப் பிரபல வழக்கறிஞர்; **மோதிலால் நேரு** என்னும் பெயரையுடையவர். அவர் மிக ஏராளமான வருவாய் உடையவர். ஜஹவர்லாலும் அவருக்கு ஒரே புத்திரனுதலால் இவர் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டார். இவருக்குக் கல்வி போதிக்க, ஐரோப்பிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பிறகு ஜவஹர்லால் நேரு இங்கிலாந்துக்குச் சென்று, கல்வி கற்று, பாரிஸ்டர் பட்டத்துடன் 1912-ம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பினுர். சில காலம் தன் தந்தையுடன் வழக்கறிஞர் தொழில் புரிந்தார்.

1916-ம் ஆண்டு, ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கையில் ல்கவும் முக்கியமானது. அவ்வாண்டில் அவர், எல்லா வகைகளிலும் தனக்கேற்ற **கமலா** என்னும் ஸ்திரீ ரத்தினத்தை மணந்தார். அடுத்த ஆண்டில் அவர்களுடைய செல்வி **இந்திரா** பிறந்தார். 1916-ம் ஆண்டிலேயே ஜவஹர்லால் நேரு மகாத்மா காந்தியைச் சந்திக்க நேரிட்டது. அது முதல் ஜவஹர்லால் அவரிடம் அதிக பக்தியும் அன்பும் பூண்டு, பெருத்த தியாகம் செய்து தேச விடுதலைப் போரில் ஈடுபட்டார். மிதவாதியான இவருடைய தந்தை முதலில் இதை விரும்பவில்லை. ஆனுல் ஜவஹர்லாலின் முயற்சியால் அக்குடும்பத்தவர்கள் எல்லோரும் பொருள், போக வாழ்வு இவற்றை விட்டு, விடுதலைப் போரில் இறங்கினுர்கள். சிறைவாசமும், தடியடியும் இவர்களுக்கு சகஜமாயின. மோதிலால் தனது அரண்மனைபோன்ற **ஆனந்தபவனம்** என்னும் இல்லத்தின் பெயரை **சுயராஜ்ய பவனம்** என மாற்றி, அதை தேசத்

துக்கு அளித்தார். இவர் 1931-ம் ஆண்டில் இறந்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின், ஜவஹரின் வாழ்க்கைத் துணைவியான கமலா, காசநோயுற்று, சிகிச்சைக்காக ஸ்விட்சர்லாந்து நாடு சென்று, அங்கேயே மரணமடைந்தார். இக்கஷ்டங்கள் நேர்ந்தும், ஜவஹர் மனம் தளராது நாட்டிற்கே உழைத்து, பல தடவை சிறை சென்றார். பல முறை காங்கிரஸ் மஹாசபையின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார்.

1946-ம் ஆண்டில் நம் நாட்டில் இடைக்கால அரசாங்கத்தில் மந்திரி சபைத் தலைவராக ஜவஹர்லால் நியமிக்கப்பட்டார். பிறகு நாடு சுதந்திரம் பெற்றது முதல், பிரதம மந்திரி பதவியை மிகத்திறம்பட வகிக்கின்றார். உலக நாடுகளிடையே இவர் பின்பற்றி வரும் நடுநிலைமைக்கொள்கை இவருடைய நன்மதிப்பை அதிகரித்துள்ளது. சமீபகாலத்தில் இவர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தபொழுது, மாபெரும் சக்ரவர்த்திகளும் பொறாமை கொள்ளத் தக்க வரவேற்பு இவருக்குக் கிடைத்தது. இவருடைய நட்புக்காக உலக நாடுகள் போட்டியிடுகின்றன. ஆங்கில ஆட்சியில் இவர் நீண்ட காலம் சிறைவாசம் செய்தபோதிலும், இவர் ஆங்கிலேயர்களைத் தன் நண்பர்களாகவே கருதுகிறார். இச்சிறந்த குணமே இவருக்கு மிகுந்த கௌரவம் அளித்துள்ளது. இன்றும் இவர் சொற்பொழிவு நடத்தும் கூட்டங்களில் இவரைத் தரிசிக்கவும் இவருடைய பொன் மொழிகளைக் கேட்டு ஆனந்திக்கவும் மக்கள் இலட்சக்கணக்கில் கூடுகின்றனர். இவர் ஓய்வு ஒழிவின்றி நாட்டின் நலனுக்காகவும், உலக நலனுக்காகவும் உழைத்து வருகிறார். இவர் நீடூழி வாழ்வாராக!

“ வாழிய பாரத மணித்திருநாடு ”

கேள்விகளும், பயிற்சிகளும்

1. வாஷிங்டன் அமெரிக்காவுக்குச் செய்த சேவை யாது? அவர் எவ்வாறு கவுரவிக்கப்பட்டார்?
2. ஆப்ரஹாம் லிங்கன் சாதனை யாது?
3. வால்டேர், ரூஸோ இவர்கள் பிரஞ்சு மக்களுக்குச் செய்த சேவைகள் யாவை?
4. உலக சமாதானத்துக்காக உட்ரோவில்ஸன் செய்த சேவை என்ன?
5. காந்திஜீ தேசத் தந்தை எனக் கூறப்படுவது ஏன்?
6. தேச சேவையில் ஜவஹர்லாலின் பங்கு யாது?
7. உலகப் பெரியார்களின் பொன் மொழிகளைச் சேகரித்துக் குறிப்புப் புத்தகத்தில் எழுதவும்.

முற்றிற்று.

Glossary—கலைச் சொற்கள் அட்டவணை

Act - சட்டம்
Administration - நிர்வாகம்
Age-epic - இதிகாச காலம்
Age-vedic - வேதகாலம்
Ambassador - ஸ்தானிகர்; தூதர்
Appeal - அப்பீல்
Autonomy - சுய ஆட்சி
Boycott - பகிஷ்காரம்
Budget - வரவு செலவு திட்டம்
Cabinet - மந்திரிசபை
Civil Disobedience - சாத்வீக சட்ட மறுப்பு
Civilization - நாகரிகம்
Co-operation - கூட்டுறவு
Colony - குடியேற்றநாடு
Constitution-Federal - கூட்டாட்சி அமைப்பு
Culture - பண்பாடு
Democracy - ஜனநாயகம்
Diarchy - இரட்டையாட்சி
Dictator - சர்வாதிகாரி
Doctrine of lapse - அவகாசியிலிக் கொள்கை
Double Government - இரட்டையாட்சி
Envoy - தூதர்
Home Rule - சுய ஆட்சி
Income Tax - வருமான வரி
Indian National Congress - இந்திய தேசிய காங்கிரஸ்
League of Nations - சர்வதேச சங்கம்
Non-co-operation - ஒத்துழையாமை
No tax compaign - வரி கொடா இயக்கம்
Permanent Revenue Settlement - சாசுவத நிலவரி திட்டம்
Regulation Act - ஒழுங்குபடுத்தும் சட்டம்
Responsible Government - பொறுப்பாட்சி
Round Table Conference - வட்டமேஜை மகாநாடு
Settlements - பற்றிடங்கள்
Speaker - ஸ்பீக்கர்
Subsidiary system - துணைப்படைத் திட்டம்
University - பல்கலைக் கழகம்
Vote - வோட்; வாக்குரிமை